தமிழ்ப் போதனா முறை

வினா — விடை

[ELEMENTARY GRADE]

★

ஆக்கியோர் :
வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை
திருச்சிராப்பள்ளி.

★

வெளியிடுவோர் :
முத்து புக் டிபோ
மயிலஞ்சந்தை :: திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1954 [விலை ரூ. 1

முன்னுரை.

ஆசிரிய மாணவமணிகாள்,

தாய்மொழியாகிய நம் தமிழ்மொழியைத் தமிழ் மாணவர்க்குக் கற்பிக்கும் போதனுமுறையினை மிகத் தெள்ளத் தெளிவுற எடுத்துக் கூறுவது இப்புத்தகம் ஆகும். இதனுள் 1942-ம் ஆண்டு முதல் 1953-ம் ஆண்டு முடிய அரசியலாரின் ஆசிரியப் பயிற்சித் தேர்வு (T. S. L. C. Examination — Elementary Grade) தமிழ்ப் போதனுமுறை வினக்களுக்கு ஏற்ற விடைகள் நல்ல முறையில் கொடுக்கப் பெற்றுள்ளன.

ஆசிரியர் பயிற்சி பெறும் அன்பர்கட்கு இப் புத்தகம் உறு துணை புரியும் என்பதில் ஐயமில்லை. தேர்ச்சியில் வெற்றிபெற விழையும் ஒவ்வொரு ஆசிரிய மாணவரும் இதனை விருப்புடன் ஏற்றுப் பயன் அடைவார்களாக.

ஆசிரிய மாணவர்கட்குத் தமது வெளியீடுகள் மூலம் உற்ற துணை புரிந்துவரும் திருச்சிராப்பள்ளி முத்து புத்தக நிலையத்தார் (Muthu Book Depot) அவர்கட்கு எமது நன்றி.

'தமிழகம்'
திருச்சிராப்பள்ளி.
26—1—1954

கோ. இரத்தினம் பிள்ளை,
தமிழாசிரியர்.

METHODS OF TEACHING TAMIL

ELEMENTARY GRADE

QUESTIONS & ANSWERS

1942

1. மாணவர்கள் ஆரம்ப வகுப்புகளில் படிக்கும்போது பேச்சில் சாதாரணமாகக் காணக்கூடிய பிழைகளுள் நான்கைக் குறிக்க. அவற்றுள் ஒன்றை நீக்குவதற்காக நீங்கள் என்ன செய்வீர்கள் என்பதை உதாரணத்தோடு விளக்குக.

விடை:—மாணவர்கள் ஆரம்ப வகுப்புகளில் படிக்கும் போது பேச்சில் சாதாரணமாகக் காணக்கூடிய பிழைகள்:

1. கொச்சை மொழிகள்.
2. திக்கித் திணறிப் பேசுதல்.
3. துண்டுபட்ட சொற்களும் சொற்றொடர்களுமாகப் பேசுதல்.
4. கை கால் நடுக்கத்தோடு பேசுதல்.
5. தெளிவின்றிப் பேசுதல்.

திருந்த வழிகள் :

இப்பிழைகளைத் திருத்த

(a) ஏளனம் செய்யக் கூடாது.

(b) அன்பும் ஆதரவும் காட்ட வேண்டும்.

(c) இவற்றின் காரணத்தைக் கண்டுபிடித்துப் பொறுமையோடு திருத்த முயற்சிக்க வேண்டும்.

1. கொச்சை மொழிகள்.

இவற்றிற்குக் காரணம் பிள்ளைகள் வீட்டிலும், சுற்றுப்புறத்திலும் அடைந்த அநுபவத்தால் ஏற்பட்டதாகும்.

நீக்க வழி :

ஆசிரியர் திருத்தமாகப் பேசவேண்டும். அதுவே பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக அமைந்து கொச்சை மொழிகளை நீக்கும். பிள்ளைகளையும் திருத்தமாகப் பேசப் பயிற்சி அளிக்க வேண்டும்.

2. திக்கித் திணறிப் பேசுதல்.

காரணம் :		நீக்க வழி :
பயம்	—	ஆசிரியர் பிள்ளைகளுடன் அன்பாகப் பழகுதல்.
கூச்சம்	—	அன்போடு மாணவர் பலரும் சேர்ந்து பேசச் சந்தர்ப்பம் அளித்தல்.
போதிய விஷய அறிவு இன்மை	}	பொருள்களை நேராகக் காட்டி அவற்றைப் பற்றிய கருத்துக்கள் ஏற்பட்டபின் பேசச் செய்தல்.

அடி நாக்கின் ஓரத்தில் தசை வளர்ச்சி, தசைகள் சரிவர வேலைசெய்யாமை, நரம்புப் பிடிப்பு	பெற்றோர்களிடம் அறிவித்து வைத்திய சிகிச்சை செய்யச் சொல்லுதல்.

3. துண்டுபட்ட சொற்களும் சொற்றொடர்களும்.

காரணம் :—வீடு, சுற்றுப்புறம் முதலியவற்றில் கொண்ட அநுபவத்தால் ஏற்பட்டவை.

நீக்க வழி :—ஆசிரியர் ஆரம்ப முதல் சிறு சிறு வாக்கியங்களாகவே பேசுதல் முன் மாதிரியாக அமைய வேண்டும்.

4. கை கால் நடுக்கத்தோடு பேசுதல்.

காரணம் :—அச்சத்தினாலும், போதிய விஷய அறிவு இன்மையாலும் ஏற்படலாம்.

நீக்க வழி :—ஆசிரியர் அன்பாகப் பழகுவது, பிள்ளைகள் சுயேச்சையாகப் பழகிப் பேசச் சந்தர்ப்பம் அளித்தல், தெளிவான கருத்துக்கள் மனதில் ஏற்படும்படி செய்தல்.

5. தெளிவின்றிப் பேசுதல்.

காரணம் :—விஷய அறிவு இன்மை, சந்தேகம், தைரியக் குறைவு.

நீக்க வழி ;—தெளிவான கருத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களை உண்டாக்குதல். ஆசிரியர் அன்பாகப் பேசித் தைரிய மூட்டுதல்.

2. இரண்டாம் வகுப்பில் வாசிக்கும் குழந்தைகட்குப் புதிய சொற்களைக் கற்பிப்பதற்காகக் கையாளக் கூடிய ருசிகரமான உபாயங்கள் ஆறு கூறுக.

விடை :-1. மின்னல் அட்டைகள்—படங்களும் சொற்களும் தனித் தனியே உள்ளவை :

(a) புதிய சொற்களைக் குறிக்கும் படங்களைக் காட்டிச் சொற்களைக் கற்பித்தல்.

(b) படங்களையும் சொற்களையும் இணைக்கும் விளையாட்டு.

(c) சொற்களை அடுக்கி வாக்கியம் அமைத்தல்.

(d) பொருந்தும்படி சொற்களைச் சேர்த்து வாசித்தல்.

(உ – ம்)		
	கிளி	கன்று
	கோழி	பிள்ளை
	வாழை	குஞ்சு

2. படமும் அதற்கு நேரே சொல்லும் எழுதப்பட்ட அட்டைகள். சொல்லை மறைத்துப் படத்தைக் காட்டி அதன் பெயரைச் சொல்லச் செய்தல் பின் எழுதச் செய்தல்.

3. விலாசச் சீட்டு :

(a) பொருள்களின் பெயர்களை எழுதி அந்தந்தப் பொருளின்மீது வைத்துக் கற்பித்தல், பின் அவற்றை நீக்கிவிட்டுப் பிள்ளைகளே அவற்றைப் பொருத்தி வைக்கும் விளையாட்டு.

(b) தபால்காரன் விளையாட்டு: பிள்ளைகளின் பெயர்கள் எழுதிய சீட்டுகளை அந்தந்தப் பெயருக்குரிய பிள்ளையிடம் சேர்ப்பிக்கச் செய்தல்.

4. தொழிற் படங்கள்–இவற்றைக் காட்டிக்கேள்விகள் கேட்டுச் சொற்களை வருவித்தல்.

5. பொருட்காட்சிச் சாலையிலுள்ள பொருள்களைக் காட்டிச் சொற்றொகுதியை அதிகரித்தல்.

6. புதிய சொற்களைப் பன்முறை எளிய வாக்கியங்களில் அமைக்கும் பயிற்சி (substitution tables)

7. சொற்கள் கட்டுதல்—தனித் தனி எழுத்துக்கள் கொண்ட அட்டைகளைக்கொண்டுசொற்கள் அமைத்தல்.

8. கட்டளை அட்டைகள் :

கட்டளைகளை வாசித்து அவற்றின்படி செய்யச் சொல்லுதல்.

9. வினாக்களும் அவற்றிற்கேற்ற விடைகளும் தனித் தனி எழுதப்பட்ட அட்டைகள் — அவற்றைச் சரியாக இணைத்தல்.

III. (A) மௌன வாசிப்பின் முக்கியம் என்ன ?

(B) மாணவர்க்கு ஏற்ற புத்தகம் கிடைக்காத போது அவர்கள் படிப்பதற்கு என்ன தருவீர்கள் ?

விடை (A) 1. வாழ்க்கையில் மௌன வாசிப்பே மிகுதியும் பயன்படுவது. எனவே, இதனை இளமையிலேயே பழகுதல் நல்லது.

2. பேச்சு உறுப்புகளுக்கு வேலையில்லை. ஆகையால்,

(a) களைப்பின்றி நீண்ட நேரம் வாசிக்கலாம்.

(b) விரைவாக வாசிக்கலாம்.

(c) அருகில் இருப்பவருக்குத் தொந்தரவு இல்லாமல் வாசிக்கலாம்.

(d) வகுப்பில் உரக்கப் படிப்பதில் ஒருவர் படிப்பது போலல்லாமல் எல்லோரையும் ஒரே நேரத்தில் படித்தறியச் செய்யலாம்.

(e) கண்களும் மனமும் மட்டுமே வேலை செய்வதால் கருத்தை நன்கு கிரகிக்க முடியும்.

3. தாமாக வாசித்து அநுபவித்துச் சுவைக்க ஏற்றது. எனவே, வாசிப்பில் பிரியம் ஏற்படுகிறது. வாசிப்பின் முக்கிய நோக்கமாகிய வாசிப்புப் பழக்கம் ஏற்படுகிறது. சுயநம்பிக்கையும் சுயமுயற்சியும் உண்டாகின்றன.

(B) 1. தனிப் பயிற்சி அட்டைகள்:

(a) முறை மாறி எழுதப்பட்ட சொற்களைச் சரியான முறையில் அமைத்து வாக்கிய மாக்குதல்.

(b) சிறு விடுகதைகள் எழுதி அவற்றை வாசித்து விடுவிக்கச் செய்தல்.

(c) வினவிடைகளை முறை மாற்றிக் கொடுத்து அவற்றைச் சரியானபடி பொருத்திக் காட்டச் செய்தல்.

(d) பொருத்தமுள்ள சொற்கள் பலவற்றோடு பொருத்தமில்லாத சொற்களையும் சேர்த்து வரிசை வரிசையாக எழுதப்பெற்றவைகளை வாசித்துப் 'பொருத்தமல்லாதவற்றை நீக்குதல்.

(e) எதிர்ச் சொற்கள், ஆண்பால் பெண்பால், ஒருமை பன்மைச் சொற்களைப் பொருத்திக் காட்டுதல்.

(f) சரியானவும் தவருனவும் ஆன வாக்கியங்களை எழுதி அவற்றில் சரியானவற்றைச் 'சரி'எனக் குறியிட்டும்; தவருனவற்றை '×' என்ற குறி யிட்டும் காட்டச் செய்தல்.

2. பத்திரிக்கையின் பாலர் பகுதிகளைத் தொகுத் தவை.

3. சிறுவர் பத்திரிக்கைகள்.

4. சுகாதார விவசாய இலாக்காக்கள் வெளி யிட்டுள்ள விளம்பரங்கள்.

5. பத்திரிக்கைகளிலிருந்து கத்தரித்துச் சேர்த்த சுவை மிகுந்த பகுதிகள்.

6. சித்திர விளக்கம் எழுதிய கதைப் புத்தகங்கள்.

7. பள்ளியில் நடத்தப்படும் கையெழுத்துப் பத்திரிக்கைகள்.

8. பாப்பா பாடல்கள்—நாட்டுப் பாடல்கள்.

IV. கதை சொல்வதன் முக்கியத்தைக் கூறுக. முதல் வகுப்பு மாணவர்க்கு எவ்விதமான கதைகள் விருப்பமாயிருக்கும் என்பதைக் குறிப்பிடுக.

1. மாணவர்கள் கதை கேட்கும்போது மெய்மறந்து அளவிலா ஆனந்தமடைகின்றனர். எனவே, கதை சொல்வது மகிழ்ச்சியையும் அதனடியாக மாணவர்க்கு உற்சாகத்தையும் உண்டாக்குகிறது.

2. பள்ளிக்கு வருவதில் விருப்பத்தை ஊட்டுகிறது.

3. ஆசிரியர் சொல்வனவற்றை மாணவர்கள் விடாது கேட்டுத் தொடர்ந்து பொருள் கிரகிக்கும் பழக்கம் அடைகின்றனர்.

4. ஆசிரியரிடம் அன்புகொண்டு நெருங்கிப் பழகும் சுபாவத்தை உண்டாக்குகின்றது.

5. கதைப் புத்தகங்களை வாசிக்கும் ஆவலைத் தூண்டுகிறது.

6 அநேக புதிய விஷயங்களை அறியவேண்டுமென்ற ஆவலைக் கதை சொல்வது பூர்த்தி செய்கின்றது.

7. கதையின் சந்தர்ப்பத்தை நோக்கி அநேக புதிய சொற்களைக் கற்கின்றனர்.

8. கதைகளின்மூலம் நல்லொழுக்கத்தைப் போதிக்க முடிகின்றது. தெய்வ பக்தி, கருணை, அன்பு ஆகிய நற்பண்புகளை அடையச் செய்யலாம். மாணவர் உள்ளக் கிளர்ச்சியும் புத்துணர்ச்சியும் பெறுகின்றனர்.

9. கற்பனை சக்தி, ஞாபக சக்தி விருத்தியாகின்றன கேள்வி ஞானம் வளர்கின்றது.

முதல் வகுப்புக்குரிய கதைகள் :

1. குழந்தைகளின் சொந்த அநுபவங்களைச் சார்ந்த கதைகள் :

(உ-ம்) கண்ணன் கடைக்குப் போனான். ஒரு பலூன் வாங்கினான். அதை ஊதினான், கொஞ்சம் பெரிதாயிற்று. இன்னும் ஊதினான், இன்னும் பெரிதாயிற்று. இன்னும் ஊதினான், மிகவும் பெரிதாயிற்று. இன்னும் ஊதினான், டபார் என்று வெடித்தது. 'ஊங்' 'ஊங்' என்று அழத் தொடங்கினான்.

இத்தகைய கதைகளை அபிநயத்தோடு முதல் வகுப்புக் குழந்தைகளுக்குச் சொல்லி அவர்களைச் சொல்லச் செய்தால் மிகுந்த உற்சாகத்தை அளிக்கும்.

2. கட்டுக் கதைகள்:

மிருகங்கள், பறவைகள், மரம், செடி, கொடி பேசுவதுபோலக் கதைகளை அமைத்துச் சொல்லுதல்.

(உ-ம்) காகமும் நரியும், ஆமையும் அன்னங்களும்.

3. சங்கிலித் தொடர் கதைகள் :

ஒரு அடியில் கடைசியில் சொன்ன வார்த்தையே அடுத்த அடியில் முதலாகத் திருப்பி வருவது போன்றவை.

(உ-ம்) வாளு போச்சு கத்தி வந்தது டும் டும்
கத்தி போச்சு மாங்காய் வந்தது டும் டும்.

4. மாயா விநோதக் கதைகள் :

தேவதைகள் பூதங்களைப் பற்றியவை.

(உ-ம்) விறகு வெட்டியும் கோடரியும்

(ஆனால் பிள்ளைகளுக்குப் பயத்தை உண்டாக்கக் கூடியனவாக இருக்கக் கூடாது)

5. புராணக் கதைகள் :

(உ-ம்) இராமாயணம், பாரதம் முதலியவற்றி லிருந்து எடுக்கப்பட்ட சிறு கதைகள்.

V. ஐந்தாம் வகுப்பிற்கு ஆறுகள் என்பதைப் பற்றிக் கட்டுரைப் பயிற்சி தருவதாயிருந்தால் எழுத வேண்டிய விஷயத்தையும் முறையையும் பற்றி மாணவர்கள் தெரிந்துகொள்வதற்கு நீங்கள் என்ன உதவி செய்வீர்கள் ?

1, ஆறுகளைப்பற்றி வாய்மொழிப் பயிற்சி கொடுத்தல்—மாணவர்களுக்குத் தெரிந்த விஷயங்களைக் கேட்டு உரையாடல்.

2. கட்டுரைக்குத் தேவையான பொருளைச் சேக ரித்தல்—பூகோள பாட புத்தகம் மற்ற பாட புத்தகங் களிலிருந்து ஆறுகளைப் பற்றிய விஷயங்களைப் படித்து வரச் செய்தல்.

3. பொருளைப் பல தலைப்புகளில் ஒழுங்குபடுத்திக் குறிப்பு தயாரித்தல்-கேள்விகள் கேட்டு, பதில் சொல்லச் செய்து குறிப்பு தயாரிக்கப் பயிற்சி கொடுக்கவேண்டும்.

(a) ஆறுகளின் உற்பத்தி — மலையில் மழை பெய்தல்—அருவிகள் கூடி நதியாதல்— பனி உருகி நதியாதல் — ஏரிகளில் உற்பத்தி யாதல்.

(b) நீர் வீழ்ச்சி — உபநதி — கிளை நதி — அணை —கால்வாய்—ஆற்றுப் பாய்ச்சல் — கழிமுகம் —நம் ஊருக்கு அருகிலுள்ள நதியின் குறிப்பு.

3. உபயோகங்கள்:—குடிக்க, குளிக்க துவைக்க — நீர்ப்பாசனம் — மின்சார உற்பத்தி — போக்கு வரவு மார்க்கம்.

5. பிறவகைக் குறிப்பு வைத்தல்:
ஆறு சம்பந்தமான பழமொழிகள் — சிறு செய்யுட்கள்.

பொதுவாக ஏற்படக் கூடிய பிழைகளைத் தடுக்க அவற்றை எடுத்துக் காட்டித் தெளிவுபடுத்தல்.

1943

I. வாசிக்கும் வழக்கத்தை உண்டாக்குவதற்குக் கையாளக்கூடிய முறைகளில் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றின் குணங் குறைகளை ஆராய்ந்து எழுதுக.

வாசிப்புக் கற்பிக்கக் கையாளக் கூடிய முறைகள்:—

1. எழுத்து முறை:

எழுத்துக்களை முதலில் வரிசையாகக் கற்பித்துப் பின்னர் எழுத்துக் கூட்டிச் சொற்களையும் வாக்கியங்களையும் வாசிக்கக் கற்பித்தல்.

2. சொல் முறை:

பிள்ளைகளுக்குத் தெரிந்த ஒரு பொருளையோ படத்தையோ காட்டி அதன் பெயராகிய சொல்லைக் கற்பித்து அதன் பின்னர் அச்சொல்லில் உள்ள எழுத்துக்களின் ஒலி, வரி வடிவங்களைக் கற்பித்தல்.

3. வாக்கிய முறை:

சிறு சிறு வாக்கியங்களை முதலில் வாசிக்கக் கற்பித்துப் பின்னர் அவற்றிலுள்ள சொற்களையும் எழுத்துக்களையும் கற்பித்தல்.

இவற்றில் நாம் சொல் முறையைக் கையாளலாம்.

அதன் குணங்கள் :

1. நாம் எழுத்தெழுத்தாகப் பேசாமல் சொற்களாகவே பேசுகின்றோம். எனவே முழுச் சொற்களைக் கற்பித்தல் இயற்கை முறையாகும்.

2. முழுப் பொருள்களைப் பார்த்து அதன் பாகங்களைப் பார்ப்பது குழந்தைகளின் இயல்பு. ஆகவே சொற்களைக் கற்று எழுத்துக்கு வருவது இயற்கைக்கு ஏற்றதாகும்.

3, தெரிந்த சொல்லிலிருந்து தெரியாத எழுத்தைக் கற்பிப்பது சிறந்த போதனையாகும்.

4. பொருளற்ற தனி எழுத்துக்களைப் படிப்பது இன்பந்தராது. பொருள் தெரிந்த சொற்களைப் படிப்பதால் கற்றலில் ஆவலும் பற்றும் ஏற்படுகின்றது.

5. பலவித கற்றல் விளையாட்டுகளுக்கு இம்முறை இடந்தருகிறது.

6. கற்ற வார்த்தைகளை வைத்து அநேக வாக்கியங்கள் அமைப்பதில் உற்சாகம் உண்டாகின்றது.

குறைகள் :

1. எழுத்துக்களைப்பற்றிய தெளிவான அறிவு ஏற்படாது. எனவே புதிய சொற்கள், சொற்றொடர்களைப் படிக்கும்போதும் எழுதும்போதும் எழுத்துப் பிழை ஏற்படலாம்.

2. சொற்களை வரிசையாக மனப்பாடம் செய்து கொண்டோ, படங்களைப் பார்த்தோ குருட்டுப் பாடமாக வாசிக்க இடமுண்டு.

3. எறக்குறைய ஒத்த ஓசையுடைய சொற்கள் வரும்போது மாற்றிப் படிக்கலாம்.

4. எழுத்துக்களைக் கண்டுபிடித்து அவற்றைக் கூட்டி வாசிக்கப் பயிற்சியில்லை.

II. செய்யுட் பாடம் கற்பிக்க அநுசரிக்கப்படும் தற்கால முறையின் இயல்புகளில் நான்கினைக் குறிக்க.

1. இசையுடன் பாடிக் காட்டுதல். செய்யுளை ஏற்ற இசையுடன் சீர் பிரித்துப் பாடிக் காட்டுவதிலிருந்தே பிள்ளைகள் பாட்டின் கருத்தை ஒருவாறு அறியக்கூடும். இசை இன்பம் பயக்கின்றது. செய்யுளில் பற்று ஏற்பட்டு ஆவல் தூண்டப்படுகிறது. கற்றல் எளிதாக முடியச் சாதகமாகின்றது.

2. செய்யுளின் முழுக் கருத்தையும் அறிதல்.

பாடல் முற்றுப்பெற்ற ஒரு முழுப் பொருள் என்று கருதவேண்டும். அக்கருத்தினைப் பிள்ளைகள் உணருமாறு எடுத்துக் காட்டிய பின்னரே பிரித்துக் கற்பிக்கவேண்டும். முதலிலேயே சொல் சொல்லாகப் பிரித்துப் பொருள் கூறுவது செய்யுளின் முழுக் கருத்தையும் உணர்ந்து சுவைக்க இயலாது போய்விடும். கவிஞரின் உணர்ச்சியை அறியவும் உதவாது

3. பிள்ளைகளையே பொருளறியச் செய்தல்.

ஆசிரியர் பதம் பதமாகப் பிரித்துப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, உபமானம், உபமேயம், இலக்கணக் குறிப்புகள் முதலியவற்றைச் சொல்லுதலாகிய பழைய முறை பயனற்றதாகின்றது. அப்படியில்லாமல் முழுக் கருத்தை அறிந்து அழகுணர்ந்த பின்னர் விளங்காத அருஞ்சொற்களுக்கு ஏற்றபடி விளக்கங் கூறி பிள்ளைகளே பதவுரை முதலியவற்றை உணருமாறு செய்தல் வேண்டும்.

4. நெட்டுருச் செய்தல்.

செய்யுட்கள் யாவற்றையும் நெட்டுருச் செய்யச் சொல்லக்கூடாது. கட்டாயத்தின்பேரில் நெட்டுருச் செய்வதில் பயனில்லை. மாணவர் விரும்பும், வாழ்க்கையில்

உபயோகமாகும், ஒழுக்கத்தை வளர்க்கும் பாடல்களையே நெட்டுரு செய்யச் சொல்லுதல் நலம். பொருளறிந்த பின்னரே நெட்டுரு செய்தல் மனதில் நன்கு பதியும்.

III. ஐந்தாம் வகுப்புக்கென்று நீங்கள் தெரிந்தெடுத்த ஒரு செய்யுளை அவ்வகுப்பில் கற்பிப்பதற்காகப் பாடக் குறிப்பு வரைக.

வகுப்பு V — நேரம்: 40 நிமிஷம்—தேதி 28-6-53

பாடம்: செய்யுள் பாகம்: "ஆற்றுப் பெருக்கற்று"

நோக்கம்: செய்யுளின்பம், கவியின் கருத்து உவமை வாயிலாக எடுத்துக் காட்டுந் திறமை, சொல்லழகு, பொருளழகு உணரச் செய்தல்—மொழிப் பயிற்சி.

உபகரணம்: ஆற்றில் கோடையில் ஊற்றுப் போட்டு பலர் நீர் எடுத்துச் செல்வதுபோன்ற படம்.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய ஒளவையின் நூல்கள்.

விஷயம்	முறை
1. பீடிகை	படத்தைக் காட்டிக் கேள்விகள் மூலம் வருவித்தல்
ஆற்றுநீரின் உபயோகம்: குடிக்க, குளிக்க, துவைக்க. ஆறு வற்றிபபோனாலும் உதவும் தன்மை.	ஆற்றினால் நமக்கு என்னென்ன உபயோகம்? ஆறு வற்றிப் போனால் அதன் அடிப்பாகம் எப்படி இருக்கும்? வெயிலில் எப்படி இருக்கும்? அக்காலத்தில் எப்படித் தண்ணீர் எடுக்கிறார்கள்¿

2. புதிய பாடம்

(i) செய்யுள்

‘ஆற்றுப் பெருக்கற்று
..........இசைந்து’’

இசையுடன் சீர்பிரித்துப் பாடிக் காட்டுதல் மாணவர் பொருள் உணரும் வகையில் இருமுறை மும்முறை பாடிக் காட்டுதல்.

(ii) கருத்தினைக் கூறுதல்.

ஆறு நீர் வற்றிப்போய் அடிசுடும் காலத்தும் ஊற்று நீரினால் மக்களுக்கு உதவி செய்கிறது. அதுபோல நல்லவர்கள் ஏழைகளானாலும் யாசிப்பவர்க்கு உதவி செய்வர்.

ஆறு வற்றிப் போகும் போது எப்படி நீர் கொடுக்கிறது? ஆறு வற்றிப் போவது போல பெரியோர் செல்வம் என்ன ஆகிறது? அக்காலத்தும் அவர்கள் என்ன செய்வர் என்பன போன்ற கேள்விகள்கேட்டு கருத்தினை உணரும்படி செய்தல்

(iii) அருஞ்சொல் விளக்கம்

பெருக்கு—வெள்ளம்
உலகு—உலக மக்கள்
ஏற்றவர்—யாசித்தவர்
நல்கூர்ந்தார்—தரித்திரர்
இசைந்து—மனம் ஒப்பி

ஏற்றவாறு உதாரணங்களுடன் விளக்கிக் காட்டுதல்.

3. சோதனை

நற்குடிப் பிறந்தவர் எதைப் போன்றவர்?
அவர்களுடைய தன்மை யாது?

கேள்விகள் கேட்டு விடை எழுதச் செய்தல்.

4. பிறபயிற்சி

குமண வள்ளலின் கதையைப் படித்தறியச் செய்தல்.

நூல் நிலையத்திலிருந்து இக்கதைகொண்ட நூலை எடுத்து வாசித்தறியச் செய்தல்.

IV. மாணவர் தம் சுய கருத்துக்களை வெளியிடும் ஆற்றலை வளர்க்க அவர்களை எப்படி உற்சாகப்படுத்து வீர்கள் ?

1. கட்டுரைக் கடிதங்கள் எழுதும்போது மற்றவர்கள் எழுதியிருப்பதைச் சார்ந்து எழுதாமல் சொந்தமாக எழுதுவனவற்றிற்கு அதிக மார்க்குகள் கொடுத்து சுய மாக எழுதத் தூண்டுதல்.

2. பாடங்களில் கேள்விக்குப் பதில் எழுதும் போது சொந்த வாக்கியங்களில் எழுதுவதற்கு அதிக மார்க்குகள் கொடுத்தல்.

3. கொண்டாட்டங்கள், விழாக்கள், பண்டிகைகளைப் பற்றி மாணவர்களை வர்ணித்து எழுதச் செய்தல்.

4. மாணவர் கூட்டங்களில் பல தலைப்புகளைப்பற்றிச் சொந்த அபிப்பிராயங்களை வெளியிடவும், தர்க்கங்கள் நடத்தவும் வாய்ப்பளித்தல்.

5. கதையின் ஒரு பாகத்தைக் கொடுத்து அதை முடித்து எழுதச் செய்தல்.

6. கதையின் குறிப்புகளைக் கொடுத்து விரித்து எழுதச் செய்தல்.

7. பல கதைகளைப் படித்து அநுபவம் பெறச் செய்து, அவற்றைப்போல் தாமாகச் சிறு கதைகளை எழுதச் செய்தல், தூண்டுதல்.

8. கதைப் பாடங்களைக் கொண்டு கதையைச் சொல்லி எழுதப் பயிற்சி அளித்தல்.

V. இரண்டாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் வாசிக்கும் மாணவர் உபயோகிப்பதற்கான வகுப்புப் புத்தகசாலை ஒன்றை எப்படி வளர்த்துவருவீர்கள்? அதனை முற்றிலும் பயன்படுத்தும்படி அவர்களை எப்படித் தூண்டுவீர்கள்?

1. அரசியலார் புத்தகங்களுக்கெனக் கொடுக்கும் உதவிப் பணத்திலிருந்து இரண்டு முதல் ஐந்து வகுப்புகளுக்கு ஏற்ற புத்தகங்களை வாங்கிச் சேர்க்கலாம்

2. பிள்ளைகளிடம் சிறு சந்தாத் தொகை வசூலித்தும் ஊரிலுள்ள பெரியோர்களிடமும், கூட்டுறவுச் சங்கத்தாரிடமும் நன்கொடை பெற்றுப், சிறு நாடகங்கள், இசைப் போட்டிகள், பள்ளிக் கொண்டாட்டங்கள் நடத்திப் பணம் வசூலித்தும், பல புத்தகங்கள் வாங்கலாம்.

3. பள்ளியை முடித்துச் செல்லும் மாணவர்களிடம் அவர்கள் நினைவிருக்கும்படி ஆளுக்கொரு புத்தகம் புத்தகசாலைக்கு வழங்கும்படி செய்யலாம்.

அதனைப் பயன்படுத்தும்படி தூண்டும் முறை :—

1. நூல் நிலைய வேளை எனக் கால அட்டவணையில் ஒதுக்கி வைத்து அப்பொழுது ஒவ்வொருவருக்கும் ஒரு நூல் கொடுத்து வாசிக்கும்படி செய்தல்.

2. மாணவர்கள் தாம் வாசித்த நூல்களில் சில குறிப்புகள் தயாரித்து வரச் செய்தல்.

3. ஆசிரியர் ஒரு நூலின் உள் அடக்கத்தைச் சுருக்கமாகக் கூறுதல் — அருஞ்சொற்களுக்கு விளக்கம் கூறுதல் முதலிய சிறு உதவிகள் செய்து வாசிக்கத் தூண்டுதல்.

4. வாசித்த நூலினைச் சுருக்கமாகக் கூறச் செய்தல் —கட்டுரையாக எழுதச் செய்தல்—மாணவர் சங்கக் கூட்டத்தில் பேசச் செய்தல்.

5. நூலின் இனிமையான சில பகுதிகளை ஆசிரியர் படித்துக் காட்டி அதனைப் படிப்பதில் பற்று உண்டாக்குதல்.

6. விடுமுறை நாட்களில் வீட்டில் கொண்டுபோய்ப் படித்து வருவதற்கெனப் புத்தகங்கள் கொடுத்தல்.

7. மேல் நோக்காகக் கதைப் போக்கை அறிந்து கொண்டால் போதும் எனச் சொல்லி அவற்றை உபயோகப்படுத்தத் தூண்டுதல்.

1944

I. பாஷா போதனையில் முக்கியமாக ஆரம்ப நிலையில் வாய்மொழிப் பயிற்சி ஏன் இன்றியமையாதது?

1. மொழியை நாம் பேசுவதற்கே முதன்மையாக வழங்குகிறோம். அப்பேச்சுப் பயிற்சியே வாசிப்பு, எழுத்துக்கு அடிப்படை. எனவே வாய்மொழிப் பயிற்சியை ஆரம்ப வகுப்பு முதல் தொடங்க வேண்டும்.

2. பேசுதல், படித்தல், எழுதுதல் என்பதே மொழிப் போதனையின் இயற்கை முறை. ஆதலின் வாய்மொழிப் பயிற்சியே படிப்பின் நோக்கங்களை அடைய முதற் படியாகும்.

3. வாய்மொழிப் பயிற்சியின் மூலம் எழுத்துக்களின் உச்சரிப்பைத் திருத்தமாகக் கற்கமுடியும். திருத்தமான உச்சரிப்பு திருத்தமாகப் படிக்க, எழுத உதவும்.

4. இதனால் மழலைச் சொற்கள், கொச்சை மொழிகளைத் திருத்தி அமைக்க உதவுகிறது.

5. இதனால் சொற்பெருக்கமும், கருத்து வளர்ச்சியும் ஏற்படும். அறிவு விருத்தியாகும்.

6. மாணவர் தாம் கொண்ட கருத்தைத் தெளிவாகவும், கோர்வையாகவும் எடுத்துச் சொல்லும் திறமை ஆரம்ப முதலில் ஏற்பட இது உதவுகிறது.

7. வாய்மொழிப் பயிற்சியில் சம்பாஷணை முதலியவைகளினால் ஆரம்ப நிலையில் ஆசிரியருடன் பிள்ளைகள் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுப் பயம், கூச்சம் முதலியன நீங்கும்.

8. வாழ்க்கைக்குத் தேவையான சொல்வன்மை ஆரம்ப முதலே வளர்ச்சியடையும்.

II. ஐந்தாம் வகுப்புக்கு ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிக் கடிதம் எழுதுவதில் ஓர் அப்பியாசம் கொடுக்கும் போது மாணவர்க்கு நீர் அளிக்கும் போதனைக்குறிப்புகளை எடுத்துக் கூறுக.

1. இருப்பிடமும் தேதியும் :—கடிதத்தின் தலைப்பில் வலதுபுறத்தில் எழுதுபவரின் இருப்பிடமும் எழுதும் தேதியும் குறிக்க வேண்டும்.

2. மரியாதை முறை :—கடிதம் பெறுவோருடைய தகுதி உரிமைக் கேற்ப மரியாதை முறையோடு கூப்பிடுவதுபோன்று எழுதவேண்டும்.

3. செய்தி :—தெரிவிக்க வேண்டிய செய்தியைத் தெளிவாக ஒழுங்குபடுத்தி எளிய நடையில் சுருக்கமாக நேரில் பேசுவது போன்று எழுத வேண்டும்.

4. முடிப்பும் கையெழுத்தும் :— செய்தியின் கீழ் வலதுபுறத்தில் உறவின்முறைக்கேற்ற (வணக்கமுள்ள, அன்புள்ள, உண்மையுள்ள) தொடர் எழுதி அதன்கீழ் கையெழுத்திட வேண்டும்.

5. விலாசம் :—கடிதத்தின் மறுபுறத்தில் அல்லது உறையின் மேல் எழுதப்படுவது.

(a) மரியாதை அடைமொழி கொடுத்துப் பெயர்.
(b) கதவு எண், தெரு.
(c) தபால் நிலையம்.
(d) ஊர்.

நீண்ட மரியாதை அடைமொழிகளைத் தவிர்க்க வேண்டும். ஆண் பெண் இருபாலாருக்கும் 'திரு' என்று சுருக்கமாகக் குறித்தலே போதும்.

III. செய்யுட் பாட போதனுமுறையும் வசன பாட போதனுமுறையும் எவ்விதம் வேறுபடும் ?

செய்யுட் பாடத்தின் நோக்கங்களும், வசன பாடத்தின் நோக்கங்களும் நடைமுறையில் நல்ல பயன்களாக விளையும்படி அப்பாடங்கள் போதிக்கப்பட வேண்டும். எனவே, அவற்றைப் போதிக்கும் முறைகளும் வேறுபட்டுள்ளன :—

1. வசன பாடத்தின் நோக்கங்கள் ஒரு பகுதியில் வரும் பொருளைச் சுருக்கமாக அறிந்துகொள்வதோடு அதில் வரும் புதிய சொற்களின் அறிவும் ஏற்படும் வண்ணம் பயிற்சி கொடுக்க வேண்டும்.

ஆனால் செய்யுள் கற்பிப்பது கவியினது உணர்ச்சிக் கருத்துக்களை உணர்தலும், சொல் நயம், பொருள் நயம் முதலிய செய்யுளின் நலத்தைப் பாராட்டி மகிழ்வதற்கும் மாணவரைப் பயிற்றுவதாக அமைய வேண்டும்.

2. செய்யுளை இசையோடு பாடுவதால் ஓசை யின்பமும் உணர்ச்சியும் ஊட்டுகிறது. எனவே செய்யுளைப் பாடிக் காட்டவேண்டும். ஆனால் வசன பாடத்தை உரக்க வாசித்தும். மௌனமாக வாசித்தும் கருத்தை உணரும்படிச் செய்யவேண்டும்.

3. ஒரு வசன பாடத்தை விளங்குவதற்கேற்பப் பல பிரிவுகளாகப் பிரித்து பொருள் கூறி விளக்கிப் போதிக்கலாம். ஆனால் ஒரு செய்யுளைத் துண்டிக்காமல் முழுவதும் படித்தறிந்து கருத்துணரும்படி செய்ய வேண்டும். பதம் பதமாகப் பிரித்துப் பொருள் கூறிப் பாட்டின் நலத்தைக் கெடுத்து விடுதல் கூடாது.

4. செய்யுளைக் கற்பிப்பதன்முன் அதில் அடங்கி யுள்ள கருத்தைக் கதை மூலமாகவோ, உதாரணங்கள் மூலமாகவோ விளக்கிக் காட்டலாம். வசன பாடத்திற்கு இத்தகைய விளக்கம் தேவையில்லை.

5. சில முக்கியச் செய்யுட்களை மனப்பாடம் செய்யச் சொல்லலாம். செய்யுள் மனப்பாடமாவதும் சுலபம்.

ஆனால் வசன பாடத்தில் மனப்பாடம் செய்யத் தேவையில்லை. அது மனப்பாடம் ஆவதும் கடினம்.

IV. இலக்கணத்தைக் காரிய அநுமான முறையில் கற்பிப்பதென்றால் என்ன? உதாரணத்துடன் விளக்குக.

1. விதி வரும் முறை என்பது உதாரணங்களி லிருந்து இலக்கண விதியை அறிந்து அமைத்துக் கொள்ளும் முறையாகும். பல உதாரணங்களைக் கொடுத்து அவற்றைக் கவனிக்கச் செய்து அவற்றிலிருந்து மாணவர் களே விதிகளை யூகித்து அறிவதாகும்.

(உ-ம்) கந்தன் வந்தான்—எவன் வந்தான்?
தஞ்சாவூரில் இருக்கிறார்—எவ்வூரில் இருக்கிறார்?
அப்பா வந்தார்—யார் வந்தார்?
ஐயர் வந்தார்—ஐயரா வந்தார்?
ஐயரோ வந்தார்?
வேலன் படிக்க வந்தான்—வேலன் ஏன் வந்தான்?
கோபாலன் வந்தான்—கோபாலனே வந்தான்?

மாணவர்கள் மேற்கண்ட வாக்கியங்களைக் கவனித்து முன் உள்ள சாதாரண வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றிய எழுத்துக்கள் எவை? அவை வார்த்தையில் எங்கெங்கு வந்துள்ளன? அவற்றுள் வார்த்தையின் முதலில் வந்துள்ள எழுத்துக்கள் எவை? வார்த்தையின் கடைசியில் வந்துள்ளவை எவை? வார்த்தையின் முதலிலும் கடைசியிலும் வந்துள்ள எழுத்து எது? எனக் கவனித்துக் கீழ்கண்ட விதியை அமைக்கச் செய்யலாம்.

1. எ, யா, ஆ, ஓ, ஏ இவை ஐந்தும் வினா எழுத்துக்கள்.
2. அவற்றுள் வார்த்தையின் முதலில் வருவன: எ, யா.
3. வார்த்தையின் கடைசியில் வருவன :—ஆ, ஓ.
4. வார்த்தையின் முதலிலும் கடைசியிலும் வருவது :—ஏ.

இதன்பின் இவ்விதியை நன்னூலில் எவ்விதம் சூத்திரமாகச் செய்யப்பட்டிருக்கிறது எனக் காணச் செய்யலாம்.

'எ, யா முதலும் ஆ, ஓ ஈற்றும்
ஏ இருவழியும் வினா ஆகும்மே.'

பின்னர் வினா எழுத்துக்களைக் கண்டுபிடிக்கும் பயிற்சிகள் கொடுக்கலாம்.

1945

I. சாதாரணமாக எவ்வெவ் வொலிகளை மாணவர் பிழையாக உச்சரிக்கிறார்கள்? அவற்றைச் சரியாக உச்ச ரிக்கச் செய்ய எம்முறையைக் கையாளுவீர் ?

1. குழந்தைகள் சாதாரணமாக ல, ள, ழ; ர, ற; ன, ண, ந; ங்க, ஞ்ச, என்ற ஒலிகளையே பிழையாக உச்சரிக்கிறார்கள். அவற்றைத் திருத்த வழிகள் :—

1. இவ்வெழுத்துக்களை உச்சரிக்க, வாய், நாக்கு முதலியவற்றின் நிலைகளை ஆசிரியர் நேரில் அமைத்துக் காட்ட வேண்டும். படங்களின் வாயிலாகவும் குறித்துக் காட்டலாம். பிள்ளைகளைக் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டு சரியானபடி உச்சரித்துப் பழகச் செய்யலாம்.

2. நா நெகிழ் பயிற்சிகளும், நா பிறழ் பயிற்சிகளும் கொடுக்கலாம்.

3. இவ்வெழுத்துக்களில் ஒவ்வொன்றும் திரும்பத் திரும்ப வரும் வார்த்தைகள். வாக்கியங்களைப் பலமுறை சொல்லச் செய்யலாம். அவ்வித வார்த்தைகள் வரும் சிறு பாட்டுக்களை அடிக்கடி பாடச் செய்யலாம்.

(உ–ம்) பழம் நழுவிப் பாலில் விழுந்தது, அது நழுவி என் வாயில் விழுந்தது. கண்ணன் தின்னும் பண்டம் வெண்ணெய்.

4. வாசிப்பு அப்பியாசம் கொடுத்துத் திருத்தலாம்.

5. நாளைக்கு ஒன்றிரண்டு முறையாவது மூச்சுப் பயிற்சிகள் கொடுக்கலாம்.

II. வாசிக்கக் கற்பிக்கும் முறைகள் சிலவற்றைச் சொல்லுக. முதல் வகுப்புக்கு அவற்றுள் எம்முறையை அநுசரிப்பீர்? ஏன்?

வாசிப்பு கற்பிக்கக் கையாளக் கூடிய முறைகள்:—

1. எழுத்து முறை:

எழுத்துக்களை முதலில் வரிசையாகக் கற்பித்துப் பின்னர் எழுத்துக் கூட்டிச் சொற்களையும் வாக்கியங் களையும் வாசிக்கக் கற்பித்தல்.

2. சொல் முறை:

பிள்ளைகளுக்குத் தெரிந்த ஒரு பொருளையோ படத்தையோ காட்டி அதன் பெயராகிய சொல்லைக் கற்பித்து அதன் பின்னர் அச்சொல்லில் உள்ள எழுத் துக்களின் ஒலி, வரி வடிவங்களைக் கற்பித்தல்.

3. வாக்கிய முறை:

சிறு சிறு வாக்கியங்களை முதலில் வாசிக்கக் கற்பித்துப் பின்னர் அவற்றிலுள்ள சொற்களையும் எழுத்துக்களையும் கற்பித்தல்.

இவற்றில் நாம் சொல் முறையைக் கையாளலாம்.

அதன் குணங்கள்:

1. நாம் எழுத்தெழுத்தாகப் பேசாமல் சொற் களாகவே பேசுகின்றோம். எனவே முழுச் சொற்களைக் கற்பித்தல் இயற்கை முறையாகும்.

2. முழுப் பொருள்களைப் பார்த்து அதன் பாகங் களைப் பார்ப்பது குழந்தைகளின் இயல்பு. ஆகவே சொற்களைக் கற்று எழுத்துக்கு வருவது இயற்கைக்கு ஏற்றதாகும்.

3. தெரிந்த சொல்லிலிருந்து தெரியாத எழுத்தைக் கற்பிப்பது சிறந்த போதனையாகும்.

4. பொருளற்ற தனி எழுத்துக்களைப் படிப்பது இன்பந்தராது. பொருள் தெரிந்த சொற்களைப் படிப்பதால் கற்றலில் ஆவலும் பற்றும் ஏற்படுகின்றது.

5. பலவித கற்றல் விளையாட்டுகளுக்கு இம்முறை இடந்தருகிறது.

6. கற்ற வார்த்தைகளை வைத்து அநேக வாக்கியங்கள் அமைப்பதில் உற்சாகம் உண்டாகின்றது.

குறைகள் :

1. எழுத்துக்களைப்பற்றிய தெளிவான அறிவு ஏற்படாது. எனவே புதிய சொற்கள், சொற்றொடர்களைப் படிக்கும்போதும் எழுதும்போதும் எழுத்துப் பிழை ஏற்படலாம்.

2. சொற்களை வரிசையாக மனப்பாடம் செய்து கொண்டோ, படங்களைப் பார்த்தோ குருட்டுப் பாடமாக வாசிக்க இடமுண்டு.

3. ஏறக்குறைய ஒத்த ஓசையுடைய சொற்கள் வரும்போது மாற்றிப் படிக்கலாம்.

4. எழுத்துக்களைக் கண்டுபிடித்து அவற்றைக் கூட்டி வாசிக்கப் பயிற்சியில்லை.

III. ஐந்தாம் வகுப்புக்குக் கட்டுரை எழுதும் பயிற்சிக்காக எவ்வெவ் விஷயங்களைக் கொடுப்பீர் ? ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு உதாரணம் கூறுக.

1. கதைக் கட்டுரை :—பெரிய கதையைச் சுருக்கி எழுதுதல். குறிப்புகள் கொடுத்து முழுக் கதையை எழுதச் சொல்லுதல்.

(உ–ம்) தேசிங்கு ராஜன் கதை.

2. நவிர்ச்சிக் கட்டுரை :— பெரியார் வாழ்க்கை வரலாறு, பிரயாணம், திருவிழா, கொண்டாட்டங்கள் முதலிய நிகழ்ச்சிகளைப்பற்றி எழுதுதல்.

(உ-ம்) காந்தியடிகள்.

3. வர்ணனைக் கட்டுரை :—இயற்கைப் பொருள்கள் காட்சிகளைப்பற்றி வர்ணித்து எழுதுதல்.

(உ-ம்) இமயமலை.

4. கற்பனைக் கட்டுரை :—மாணவர்கள் தம்மை வேறொரு நிலையில் இருப்பதாகப் பாவித்து அதற்கேற்ற நிகழ்ச்சிகளை எழுதுதல்.

(உ-ம்) நீ நகர சபைத் தலைவனானால் என்னென்ன நன்மைகள் செய்வாய்?

5. உரையாடல் :—ஒரு விஷயத்தைப்பற்றி இருவர் பேசிக்கொள்வதுபோல் எழுதுதல்.

(உ-ம்) கூட்டுறவுப் பண்டகசாலையின் நன்மைகள்-

6. சிந்தனைக் கட்டுரை :— ஒரு பொருளைப்பற்றித் தாமாக ஆராய்ச்சி செய்து சிந்தித்து எழுதுதல்.

(உ-ம்) சுத்தம் சுகந்தரும்.

7. கடிதங்கள்—

(உ-ம்) விடுமுறைக் கடிதம்.

IV. அபிநயப் பாடல்களின் நோக்கத்தையும் பயன்களையும் கூறுக.

நோக்கம்

1. அபிநயத்தோடு பாடப் பழக்குதல்.
2. இசையோடு பாடி இன்பமடையச் செய்தல்.

3. ஞாபக சக்தியை விருத்தி செய்தல்.

4. புதிய கருத்துக்களையும் நீதியையும் கற்பித்தல்

5. திருத்தமான உச்சரிப்பைப் பெறச் செய்தல்.

6. கூச்சம், பயம் நீங்கித் தைரியமாகப் பேசச் செய்தல்.

பயன்கள்.

1. அபிநயத்தோடு பாடுவதால் நடிப்புத் திறமை ஏற்படுகிறது. நல்ல நடிகர்களாக விளங்க ஆரம்பப் பயிற்சியாகிறது. பிற்கால வாழ்க்கைக்கு உதவுகிறது.

2. இசையோடு பாடுவதால் இன்பத்தையும் உற்சாகத்தையும் அளிக்கிறது.

அதிக ஆவலுடன் கற்பதால் சீக்கிரத்தில் மனதில் பதிகின்றது.

3. அரிய கருத்துகளையும் நீதிகளையும் சுலபமாகக் கற்க உதவி புரிகிறது.

4. திருத்தமான உச்சரிப்பைப் பெற நல்ல சாதனமாகிறது.

5. கூச்சம், பயம் நீங்கிக் குழந்தைகள் தைரியம் அடைகிறார்கள்.

6. நல்ல வாய்மொழிப் பயிற்சியாகிறது.

7. கற்றலில் மகிழ்ச்சியை உண்டாக்குகிறது.

1946

I. நான்காம் வகுப்பு மாணவருக்கு யானையைப் பற்றி நீவிர் கொடுக்கக்கூடிய பயிற்சி வகைகளுள் நான்கினைச் குறிக்க.

1. ஒவ்வொரு பாராவிற்கும் தலைப்பு கொடுக்கச் சொல்லுதல்—முக்கிய குறிப்புகள் எடுத்துக்கொள்ளச் செய்தல்.

2. யானையைப்பற்றி சிறு கட்டுரை எழுதச் செய்தல் —உடலமைப்பு, நிறம், குணம், ஆகாரம், உபயோகம் ஆகிய தலைப்புகளில்.

3. கேள்விகளுக்கு விடை எழுதுதல். கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்தல்.

(உ-ம்) (1) யானை எத்தேசங்களில் காணப்படுகின்றன?

(2) — யானைக்குத் தந்தம் உண்டு.

4. யானையைப்பற்றிய பழமொழிகள், விடுகதைகள் கூறச் செய்யலாம்.

(உ-ம்) (1) யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.

யானை இருந்தாலும் ஆயிரம் பொன்
இறந்தாலும் ஆயிரம் பொன்.

(2) இரண்டு முறம் புடைத்து வரும் நாலு உலக்கை குத்திவரும்—அது என்ன?

II. மூன்றும், நான்காம் வகுப்பு மாணவருடைய சொற் களஞ்சியத்தைப் (Vocabulary) பெருக்குவதற்காக நீங்கள் மேற்கொள்ளக்கூடிய உபாயங்களுள் நான்கினைக் குறிப்பிடு.

1, பாட புத்தகங்களில் வரும் புதிய சொற்களைத் தினசரி ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறிக்கச் செய்தல்.

2. அவ்விதம் கற்ற சொற்களுக்குப் பல பொருள், எதிர்ப் பதங்கள், ஆண்பால் பெண்பால், ஒருமை பன்மை, ஒத்த ஓசையுடைய சொற்களையும். அச்சொற் களின் பகுதிகளிலிருந்து உண்டாகக்கூடிய வேறு சொற் களையும் கற்பித்தல்.

3 புதிய சொற்கள் கற்பதற்கான நூல் நிலையப் புத்தகங்கள், உப பாடப் புத்தகங்கள், சிறுவர் பத்திரிக் கைகள் முதலியவற்றை வாசிக்கச் செய்தல்.

4. பொருட்காட்சிச்சாலைகளுக்கும் உல்லாசப் பிரயா ணங்களுக்கும் அழைத்துச் செல்லுங்கால் பல பொருள் களின் பெயர்களையும், தொழில், குணங்களையும் அறிந்து சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக்கொள்ள வசதி அளித்தல்.

III. ஐந்தாம் வகுப்பிற்கு ஒரு இலக்கண விதியை ஆகமன முறைப்படி (Inductive Method) எவ்வாறு கற்பிப்பீர்கள் என்பதை உதாரண வாயிலாக விளக்குக.

1. விதி வரும் முறை என்பது உதாரணங்களி லிருந்து இலக்கண விதியை அறிந்து அமைத்துக் கொள்ளும் முறையாகும். பல உதாரணங்களைக் கொடுத்து அவற்றைக் கவனிக்கச் செய்து அவற்றிலிருந்து மாணவர்களே விதிகளை யூகித்து அறிவதாகும்.

(உ-ம்) கண்ணன் வந்தான்—எவன் வந்தான்?

உறையூரில் இருக்கிறார்—எவ்வூரில் இருக்கிறார்?

ஆசிரியர் வந்தார்—யார் வந்தார்?

ஐயர் வந்தார்—ஐயரா வந்தார்?

ஐயரோ வந்தார்?

முருகன் படிக்க வந்தான்—முருகன் ஏன் வந்தான்?

வேலன் வந்தான்—வேலனே வந்தான்?

மாணவர்கள் மேற்கண்ட வாக்கியங்களைக் கவனித்து முன் உள்ள சாதாரண வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றிய எழுத்துக்கள் எவை? அவை வார்த்தையில் எங்கெங்கு வந்துள்ளன? அவற்றுள் வார்த்தையின் முதலில் வந்துள்ள எழுத்துக்கள் எவை? வார்த்தையின் கடைசியில் வந்துள்ளவை எவை? வார்த்தையின் முதலிலும் கடைசியிலும் வந்துள்ள எழுத்து எது? எனக் கவனித்துக் கீழ்க்கண்ட விதியை அமைக்கச் செய்யலாம்.

1. எ, யா, ஆ, ஓ, ஏ இவை ஐந்தும் வினா எழுத்துக்கள்.
2. அவற்றுள் வார்த்தையின் முதலில் வருவன:— எ, யா.
3. வார்த்தையின் கடைசியில் வருவன:—ஆ, ஓ.
4. வார்த்தையின் முதலிலும் கடைசியிலும் வருவது:—ஏ.

இதன்பின் இவ்விதியை நன்னூலில் எவ்விதம் சூத்திரமாகச் செய்யப்பட்டிருக்கிறது எனக் காணச் செய்யலாம்.

'எ, யா முதலும் ஆ, ஓ ஈற்றும்
ஏ இருவழியும் வினா ஆகும்மே.'

பின்னர் வினா எழுத்துக்களைக் கண்டுபிடிக்கும் பயிற்சிகள் கொடுக்கலாம்.

IV, முதல் வகுப்பில் தாய்மொழிப் போதனைக்கு அவசியமான உபகரணங்கள் (Equipments) எவை என்று கூறுக.

1. மின்னல் அட்டைகள் (Flash cards)

   (a) படங்கள் மட்டும் வரைந்தவை.
   (b) சொற்கள் மட்டும் எழுதப்பட்டவை.
   (c) படங்களும் சொற்களும் சேர்ந்து உள்ளவை.

2. எழுத்து அட்டைகள் :—
   இவற்றைக்கொண்டு பலவிதமான சொற்கள் அமைத்து விளையாடுவதற்கேற்றவை.

3. தனிப் பயிற்சி அட்டைகள் :—

   (உ-ம்) குட்டு
   து — —
   பு — —
   வ — —

4. ஒப்பனைச் சட்டம் : –

ப	ட்	ட	ம்
ச			
வ			
க			
ம			

'ட்டம்' என்பதைக் கீழே நகர்த்திச் செங்குத்தாக உள்ள ஒவ்வொரு எழுத்திற்கும் நேரில் கொண்டு வந்து வாசிக்கச் செய்தல்.

5. சொல் சக்கரம் :—

ஒத்த ஓசை உள்ள சொற்களை வட்டத்தில் அமைத்துச் சக்கரம் போல் எழுத்துக்களைச் சுட்டிக் காட்டுதல்,

6. வாக்கிய அட்டைகள் :—

படங்களுக்கு நேராக வாக்கியங்கள் எழுதப் பட்டவை.

7. கட்டளை அட்டைகள்.

8. கதை விளக்கப் படங்கள்.

9. பாப்பா பாட்டுக்களும் அவற்றை விளக்கும் படங்களும்.

10. படச் சேர்க்கைப் புத்தகம் (Picture Album).

1947

I. மௌன வாசிப்புப் பழக்கத்தை உமது மாணவருக்குப் பயிற்சி அளிக்க எவ்வித முறைகளைக் கையாளுவீர் ?

கீழ் வகுப்புகளில் :

1. படங்களையும் வார்த்தைகளையும் இணைக்கும் பயிற்சி.

2. கட்டளை அட்டைகளை வாசித்து அதன்படி செய்யச் சொல்லுதல்.

3. தபால்காரன் விளையாட்டு — பிள்ளைகளின் விலாசம் எழுதிய அட்டைகளை அந்தந்த விலாசத்திற்கு உரியவரிடம் கொடுக்கும் பயிற்சி.

4. பிள்ளைகள் தாமாகப் பதில் கண்டுபிடிக்கக்கூடிய கேள்விகளை வாசித்து விடையளிக்கும் பயிற்சி.

5. வார்த்தைகள் எழுதப்பட்ட அட்டைகளை வாக்கியங்களாக அமைக்கச் செய்தல்.

6. படங்களோடு கூடிய வாக்கிய அட்டைகள், படங்கள் இடையிட்ட கதைகள் பலவித வியாபார விளம்பரங்கள் முதலியவற்றை வாசித்து அறியும் பயிற்சி.

நான்கு, ஐந்தாம் வகுப்புகளில் :

1. ஒவ்வொரு வாசிப்புப் பாடத்தின் ஆரம்பத்திலும் முன்னதாகக் கேள்விகளைக் கொடுத்து மௌனமாக வாசித்து விடை கண்டுபிடிக்கச் செய்தல்.

2. படங்களால் விளக்கப்பட்ட கதைப் புத்தகங்களைக் கொடுத்து வாசிக்கப் பிரியம் உண்டாக்குதல்.

3. கதையின் சுருக்கத்தையோ அல்லது ஒரு பகுதியையோ கூறி, கதைப் புத்தகங்களை வாசகசாலையிலிருந்து எடுத்துப் படிக்கத் தூண்டுதல்.

4. வாசித்த புத்தகத்தில் சிறு கேள்விகளுக்கு விடை எழுதப் பயிற்சி அளித்தல்.

II. உமது மாணவருடைய எழுத்து வேலையில் காணப் படும் பிழைகளைத் திருத்த என்ன செய்வீர்?

1. மாணவர்கள் முன்னிலையில் திருத்த வேண்டும். பிழைகளை எடுத்துக் காட்டுதலில் அவர்களுடைய மனதைப் புண்படுத்தாமல், ஊக்கத்தைக் குறைக்காது, பிழைகளை உணரும் வண்ணம் காரணத்துடன் விளக்கிக் காட்டி, அன்புடன் திருத்த வேண்டும்.

2. பிழைகளைச் சில குறிகளால் எடுத்துக்காட்டி அவற்றை மாணவரே உணர்ந்து திருத்தும்படிச் செய்ய வேண்டும்.

உதாரணம் :

(a) தலைப்பு, பயிற்சி எண், தேதி முதலியவை எழுதாவிடில்—(?) கேள்விக்குறி போடுதல்.

(b) எழுத்துப் பிழை (—) அடியில் கோடு.

(c) இலக்கணப் பிழை (=) அடியில் இரண்டு கோடு.

(d) நிறுத்துக் குறி இடாமை (×) பெருக்கல் குறி இடுதல்.

(e) பாரா பிரிக்காமை (‖) இரண்டு செங்குத்துக் கோடுகள் இடுதல்.

3. பல பிள்ளைகளால் பொதுவாகச் செய்யப்பட்ட பிழைகளைத் தனியே குறித்து வைத்து வகுப்பில் அவற்றை விளக்கமாக எடுத்துக் கூறி திருத்திக் காட்டுதல்.

4. பிழைகளைக் கவனித்துப் பலதடவை திருத்தச் செய்தல்.

5. எழுதியதைத் திருத்தி வாசிக்கும் பழக்கத்தை வற்புறுத்தல்.

III. பாலர் பேச்சில் காணப்படும் சாதாரண குறைபாடுகள் யாவை? அவற்றைத் திருத்தும் முறைகள் யாவை?

பாலர் பேச்சில் காணப்படும் சாதாரண
குறைபாடுகள் :—

1. கொச்சை மொழிகள்.

2. திக்கித் திணறிப் பேசுதல்.

3. துண்டுபட்ட சொற்களும் சொற்றொடர்களுமாகப் பேசுதல்.

4. கை கால் நடுக்கத்தோடு பேசுதல்.

5. தெளிவின்றிப் பேசுதல்.

திருத்த வழிகள்.

இப்பிழைகளைத் திருத்த

(a) ஏளனம் செய்யக்கூடாது.

(b) அன்பும் ஆதரவும் காட்ட வேண்டும்

(c) இவற்றின் காரணத்தைக் கண்டுபிடித்துப் பொறுமையோடு திருத்த முயற்சிக்கவேண்டும்.

1. கொச்சை மொழிகள் :—

இவற்றிற்குக் காரணம் பிள்ளைகள் வீட்டிலும், சுற்றுப்புறத்திலும் அடைந்த அநுபவத்தால் ஏற்பட்டதாகும்.

நீக்க வழி :

ஆசிரியர் திருத்தமாகப் பேசவேண்டும். அதுவே பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக அமைந்து கொச்சை மொழிகளை நீக்கும். பிள்ளைகளையும் திருத்தமாகப் பேசப் பயிற்சி அளிக்க வேண்டும்.

2. திக்கித் திணறிப் பேசுதல் :

காரணம்.	நீக்க வழி.
பயம்	ஆசிரியர் பிள்ளைகளுடன் அன்பாகப் பழகுதல்.
கூச்சம்	அன்போடு மாணவர் பலரும் சேர்ந்து பேசச் சந்தர்ப்பம் அளித்தல்.
போதிய விஷய அறிவு இல்லாமை	பொருள்களை நேராகக் காட்டி அவற்றைப்பற்றிய கருத்துக்கள் ஏற்பட்டபின் பேசச்செய்தல்.
அடிநாக்கின் ஓரத்தில் தசை வளர்ச்சி, தசைகள் சரிவர வேலை செய்யாமை, நரம்புப் பிடிப்பு	பெற்றோர்களிடம் அறிவித்து வைத்திய சிகிச்சை செய்யச் சொல்லுதல்.

3. துண்டுபட்ட சொற்களும் சொற்றொடர்களும்:

காரணம் :—வீடு, சுற்றுப்புறம் முதலியவற்றில் கொண்ட அநுபவத்தால் ஏற்பட்டவை.

நீக்க வழி :—ஆசிரியர் ஆரம்ப முதல் சிறு சிறு வாக்கியங்களாகவே பேசுதல் முன் மாதிரியாக அமைய வேண்டும்.

4. கை கால் நடுக்கத்தோடு பேசுதல்:

காரணம்:—அச்சத்தினுலும், போதிய விஷய அறிவு இன்மையாலும் ஏற்படலாம்.

நீக்க வழி :—ஆசிரியர் அன்பாகப்பழகுதல், பிள்ளைகள் சுயேச்சையாகப் பழகிப் பேசச் சந்தர்ப்பம் அளித்தல்; தெளிவான கருத்துக்கள் மனதில் ஏற்படும்படி செய்தல்.

5. தெளிவின்றிப் பேசுதல் :

காரணம் :—விஷய அறிவு இன்மை, சந்தேகம், தைரியக் குறைவு.

நீக்க வழி :—தெளிவான கருத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களை உண்டாக்குதல். ஆசிரியர் அன்பாகப் பேசித் தைரியமூட்டுதல்.

IV. ஒரு செய்யுட் பாடத்தின் நோக்கங்கள் யாவை? ஒரு வசன பாடத்தின் நோக்கங்களுக்கும் இவைகளுக்கும் என்ன வித்தியாசம்?

செய்யுட் பாடத்தின் நோக்கங்கள் :

1. செய்யுளில் புலவரின் கருத்துக்கள், உணர்ச்சிகள், இயற்கையின் அழகு முதலியன உணர்தல்.

2. உண்மைகளைப் புலவன் அழகுபொருந்த எடுத்துரைக்கும் தன்மையை மாணவர் உணர்ந்து இன்புறுதல்.

3. செய்யுளின் ஓசை இன்பத்தை நுகர்தல்.

4. வாழ்க்கையை வளப்படுத்தும் மக்கள் பண்பை வளர்த்தல்.

5. நீதியை உணர்த்தி ஒழுக்கத்தைச் சீர்படுத்துதல்.

6. கற்பனைத் திறனை விருத்தி செய்தல்.

7. சொல் நயம், பொருள் நயம் அறிந்து செய்யுளின் நலத்தைப் பாராட்டி மகிழ்தல்.

8. வசன பாடத்தின் நோக்கங்கட்கும் செய்யுட் பாடங்களின் நோக்கங்கட்கும் வித்தியாசம்:—

வசன பாடத்தின் நோக்கங்கள் ஒரு பகுதியில் வரும் பொருளைச் சுருக்கமாக அறிந்து கொள்வதோடு அதில் வரும் புதிய சொற்களின் அறிவும் ஏற்படும் வண்ணம் பயிற்சி கொடுத்தலாகும். ஆனல் செய்யுள் கற்பிப்பது புலவனது உணர்ச்சிக் க்ருத்துக்களை உணர்தற்கும், சொல் நயம், பொருள் நயம் முதலியவற்றை அறிந்து செய்யுளின் நலத்தைப் பாராட்டி மகிழ்வதற்கும் பயிற்சி தருவதுமாகும். செய்யுட் பாடத்தில் ஓசையின்பம் நுகரும்படி செய்தல் வேண்டும். வசன பாடத்தில் அது தேவையற்றதாகின்றது.

1948

I. முதல் வகுப்பு மாணவருக்கு எழுத்துக்களை எழுதக் கற்பிக்கத் தொடங்குமுன் என்ன முற்பயிற்சிகள் (Preliminary Training) அளிக்கலாம்?

எழுத்துக்களை எழுதக் கற்பிக்குமுன் கை விரல்களும் தசைகளும் சரியானபடி இயங்கச் சாதகமான பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும், பல உருவங்களின் அறிவு பிள்ளைகளுக்கு ஏற்பட வேண்டும். அதற்கேற்ப கீழ்க்கண்ட முற்பயிற்சிகள் அளிக்கலாம்.

1. ப்ரோபெலின் பரிசில்களை உபயோகித்தல்:— பல வடிவங்களுள்ள கட்டைகள் ஒரு பலகையிலுள்ள சரியாகப் பொருந்திவிழும் குழிகளில் பார்த்துப் போட்டுப் பொருத்துதல்.

2. மாண்டிசோரி உபகரணங்களை உபயோகித்தல் :— பலவித வடிவங்களின் அறிவு ஏற்படுத்தல்.

3. பல வடிவமுள்ள மரக்கட்டைகளைக் கொடுத்து விளையாடச் செய்தல்.

4. களிமண்ணால் பல உருவங்கள் செய்தல்.

5. தாள்களை மடித்துப் பல வடிவங்களாகக் கிழித்தல்.

6. இஷ்டம்போல் வரைதல் — சீமைச் சுண்ணம்பு, குச்சிகளைக் கொடுத்துப் பிள்ளைகளை அவரவர் இஷ்டம் போல் வரையவோ கிறுக்கவோ விடுதல்.

7. எழுத்துக்களில் வரக்கூடிய பலவகைக் கோடுகளை எழுதிப் பழகச் செய்தல்.

8. மணல்தாளில் வெட்டி யெடுத்த எழுத்தின்மேல் விரலால் விளம்பச் செய்தல்.

9. விரலை நீட்டி ஆகாயத்தில் எழுதிக்காட்டச் செய்தல்.

II. ஐந்தாம் வகுப்புக்கேற்ற ஒரு செய்யுளை எப்படிக் கற்பித்து அதன் சுவையை மாணவர் உணரும்படி செய்வீர் என்பதை ஒரு பாடக் குறிப்பின் துணைகொண்டு விளக்குக.

வகுப்பு V நேரம்: 40 நிமிடம் தேதி 28–6–53.

பாடம்: செய்யுள் பாகம்: "ஆற்றுப் பெருக்கற்று"

நோக்கம்: செய்யுளின்பம், கவியின் கருத்து, உவமை வாயிலாக எடுத்துக் காட்டும் திறமை, சொல்லழகு, பொருளழகு உணரச்செய்தல், மொழிப் பயிற்சி.

உபகரணம் : ஆற்றில் கோடையில் ஊற்றுப் போட்டு பலர் நீர் எடுத்துச் செல்வதுபோன்ற படம்.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய ஔவையின் நூல்கள்.

விஷயம் :	முறை :
1. பீடிகை.	
ஆற்றுநீரின் உபயோகம், குடிக்க, குளிக்க, துவைக்க, ஆறு வற்றிப் போனாலும் உதவும் தன்மை.	படத்தைக் காட்டிக் கேள்விகள்மூலம் வருவித்தல். ஆற்றினால் நமக்கு என்னென்ன உபயோகம்? ஆறு வற்றிப் போனால் அதன் அடிப்பாகம் எப்படி இருக்கும்? வெயிலில் எப்படி இருக்கும்? அக்காலத்தில் எப்படித் தண்ணீர் எடுக்கிறார்கள்?
2. புதிய பாடம்.	இசையுடன் சீர் பிரித்துப் பாடிக் காட்டுதல்.
(i) செய்யுள். "ஆற்றுப் பெருக்கற்று.. ....இசைந்து"	மாணவர் பொருள் உணரும் வகையில் இருமுறை மும்முறை பாடிக் காட்டுதல்,
(ii) கருத்தினைக்கூறுதல்	
ஆறு வற்றிப் போய் அதன் அடிசுடும் காலத்தும் ஊற்று நீரினால் மக்களுக்கு உதவி செய்கிறது.	ஆறு வற்றிப் போகும் போது எப்படி நீர் கொடுக்கிறது? ஆறு வற்றிப் போவதுபோல பெரியோர் செல்வம் என்ன ஆகிறது? அக்காலத்தும் அவர்கள்

அதுபோல நல்லவர்கள் ஏழைகளானாலும் யாசிப்பவர்க்கு உதவி செய்வர்.	என்ன செய்வர்? என்பன போன்ற கேள்விகள் கேட்டுக் கருத்தினை உணரும் படிச் செய்தல்.
(iii) அருஞ்சொல் விளக்கம். பெருக்கு—வெள்ளம் உலகு—உலக மக்கள் ஏற்றவர்—யாசித்தவர் நல்கூர்ந்தார்— தரித்திரர் இசைந்து—மனம் ஒப்பி	ஏற்றவாறு உதாரணங்களுடன் விளக்கிக் காட்டுதல்.
3. சோதனை நற்குடிப் பிறந்தவர் எதைப் போன்றவர்? அவர்களுடைய தன்மை யாது?	கேள்விகள் கேட்டு விடை எழுதச் செய்தல்
4. பிறபயிற்சி குமண வள்ளலின் கதையைப் படித்தறியச் செய்தல்	நூல் நிலையத்திலிருந்து இக்கதை கொண்ட நூலை எடுத்து வாசித்தறியச் செய்தல்

III. மூன்றாம் வகுப்பிற்கேற்ற படிப்புத் தாள்களை எங்ஙனம் ஆயத்தம் செய்யலாம்?

1. வாசிப்புத் தாள்கள் — வாக்கிய அட்டைகள் :

படங்களுக்கு நேராக வாக்கியங்கள் எழுதப்பட்டவை.

2. கட்டளை அட்டைகள் :

கட்டளை வாக்கியங்கள் எழுதப்பட்டவை. மாணவர் அவற்றை வாசித்து அதன்படி செய்தல். மௌன வாசிப்பிற்கு உதவக் கூடியவை.

3. செய்திப் பலகை :

விருப்பம் ஊட்டும் செய்திகளைத் தினசரி எழுதிப் படிக்கச் செய்தல்.

4. விளம்பரத் தாள்கள் :

பலவித வியாபார விளம்பரங்கள், விவசாய, சுகாதார இலாக்காக்களின் விளம்பரங்கள், வெளியீடுகள் முதலியவற்றைச் சேகரித்து வைத்தல்.

5. கதைப் படங்கள் :

விளக்கம் எழுதப்பட்டவை.

6. பாப்பா பாட்டுக்கள், சுகாதாரப் பழமொழிகள் :

விடுகதைகள் எழுதப்பட்ட தாள்கள்.

7. படப் புத்தகம் :

படங்களைச் சேகரித்து ஒட்டி அடியில் குறிப்புகள் எழுதப்பட்டவை.

8. தொழிற் படங்கள் :

விளக்கம் எழுதப்பட்டவை.

9. பத்திரிக்கைகளில் வரும் பாலர்ப் பகுதிகள், கதைகளின் சேர்க்கை.

10. சிறுவர்க்கான பத்திரிக்கைகள்.

IV. ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் சொற்களஞ்சியத்தைப் பெருக்குவதற்கான வழிகளில் எவையேனும் நான்கினைக் குறித்து அவற்றுள் ஒன்றை எடுத்துக் காட்டுகள் தந்து விளக்குக.

1. பாட புத்தகங்களில் வரும் புதிய சொற்களைத் தினசரி ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறிக்கச் செய்தல்.

2. அவ்விதம் கற்ற சொற்களுக்குப் பல பொருள், எதிர்ப் பதங்கள், ஆண்பால் பெண்பால், ஒருமை பன்மை, ஒத்த ஓசையுடைய சொற்கள், அச்சொற்களின் பகுதிகளிலிருந்து உண்டாக்கக்கூடிய வேறு சொற்கள் முதலியவற்றையும் கற்பித்தல்.

3. புதிய சொற்கள் கற்பதற்கான நூல் நிலையப் புத்தகங்கள், உப பாடப் புத்தகங்கள், சிறுவர் பத்திரிக்கைகள் முதலியவற்றை வாசிக்கச் செய்தல்.

4. பொருட்காட்சிச்சாலைகளுக்கும் உல்லாசப் பிரயாணங்களுக்கும் அழைத்துச் செல்லுங்கால் பல பொருள்களின் பெயர்களையும், தொழில், குணங்களையும் அறிந்து சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக்கொள்ள வசதி அளித்தல்.

அவற்றுள் 2-வது வழிக்கான எடுத்துக்காட்டுகள்.
முதலில் கற்ற சொற்கள் :—

பணி, அரசன், கழி, கந்தம், காண்.

(a) பல பொருள் :

பணி=வேலை, தாழ்ந்து போ, வணங்கு.

ஒரு பொருள் பல சொற்கள்.

அரசன்=வேந்தன், இறை, கொற்றவன், மன்னன்.

(b) ஆண்பால் பெண்பால்

அரசன் அரசி

(c) ஒருமை பன்மை

அரசன் அரசர்கள்

(d) ஒத்த ஓசையுடைய சொற்கள்.

கந்தம், தந்தம், சந்தம், பந்தம், மந்தம்.
கழி, களி, கலி.

(e) ஒரு பகுதியிலிருந்து அமைக்கப்படும் சொற்கள்.

காண் — காட்சி
கண்டேன்.—காண்கிறேன், காண்பேன்,
காண்போர், கண்டவன்.

1949

I. விளையாட்டு முறையில் குழந்தைகளுக்கு வாசிப்பு கற்றுக்கொடுக்க அவசியமான உபகரணங்கள் எவை? அவற்றுள் ஒன்றை நீர் எப்படித் தயாரித்து எந்த விதத்தில் உபயோகப்படுத்துவீர் என்பதை விளக்கு.

1. மின்னல் அட்டைகள் :

படங்களும் சொற்களும் தனித்தனியாய் எழுதப்பட்டவை. படங்களைக் காட்டி அவற்றைக் குறிக்கும் சொற்களைக் கற்பிப்பதற்கானவை.

விளையாட்டுகள் :

(a) படங்களையும் சொற்களையும் இணைக்கும் விளையாட்டு.

(b) சொற்களை அடுக்கி வாக்கியங்கள் அமைத்தல்.

(c) புதிய சொல்லைக் கண்டுபிடித்தல்.

(d) பொருத்தும்படியாகச் சேர்த்து வாசித்தல்.

கிளி	குஞ்சு	இவ்விதம் வார்த்தைகளை
கோழி	பிள்ளை	மாற்றிவைத்துவிட்டுச் சரி
சிங்கம்	கன்று	யாகப் பொருத்தி வாசிக்
வாழை	குட்டி	கும்படி செய்தல்.

2. எழுத்து அட்டைகள்:

தனித் தனி எழுத்துக்கள் எழுதப்பட்டவை. அவற்றிலிருந்து பொறுக்கி எடுத்து குறிப்பிட்ட சொல் அமைத்தல். ஒரு சொல்லில் அமைக்க வேண்டிய எழுத்துக்களை முறை மாற்றி வைத்துப் பின்னர் சரியாக வைத்து வாசிக்கும்படி செய்தல்.

3. கட்டளை அட்டைகள்:

கட்டளைகளை வாசித்து அவற்றின்படி செய்யச் சொல்லுதல்.

4. விலாசச் சீட்டுகள்:

பொருள்களின் பெயர்கள் எழுதப்பட்ட அட்டைகளை வாசித்து அந்தந்தப் பொருளின்மீது வைக்கச் சொல்லுதல். பிள்ளைகளின் பெயர்களைத் தனித்தனி அட்டைகளில் எழுதி அந்தந்த பெயருள்ள பிள்ளைகளிடம் அவற்றை கொடுக்கச் செய்தல்.

5. வினாக்களும் அவற்றிற்கேற்ற விடைகளும்:

தனித் தனி அட்டைகளில் எழுதி, அவற்றை இணைத்துக் காட்ட உபயோகித்தல்.

6. விடுகதைகள் எழுதிய தாள்:

இதைப் படித்து விடுவிக்கச் செய்தல்.

7. சொல் ஏணி, சொல் சக்கரம்.

8. ஒப்பனைச் சட்டம்:

தயாரித்து உபயோகிக்கும் முறை.

ப	ட்	ட	ம்
ம			
வ			
ச			
க			

ஒரு செங்குத்தான அட்டையில் ப,ம, வ, ச, க என்ற எழுத்துக்களை தனித்தனியே மேலிருந்து கீழ் எழுத வேண்டும். அந்த அட்டைக்கு எதிரே மேலிருந்து கீழ் நகர்த்தும்படியாக, அதற்கு செங்குத்தாக மற்றொரு அட்டையில் 'ட்டம்' என்ற எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்கவேண்டும். அந்த அட்டையை நகர்த்தும் பொழுது செங்குத்தான அட்டை ஒவ்வொரு எழுத்தோடும் சேரும் பொழுது பட்டம், மட்டம், வட்டம், சட்டம், கட்டம் என்ற சொற்கள் அமைவதைப் பிள்ளைகள் பார்த்து வாசித்து உற்சாகமடைகின்றனர்.

II. முதல் 5 வகுப்புகளிலுள்ள பள்ளிக் குழந்தைகளின் மொழியில் வழக்கமாகக் காணப்படும் குறைகள் யாவை? அவற்றுள் ஒன்றை நீ எப்படித் திருத்துவாய் என்று ஒரு உபகரணத்தின்மூலம் விளக்குக.

பள்ளிக் குழந்தைகளின் மொழியில் வழக்கமாகக் காணப்படும் குறைகள்:—

1. கொச்சை மொழிகள்.

2. திக்கித் திணறிப் பேசுதல்.

3. துண்டுபட்ட சொற்களும் சொற்றொடர்களுமாகப் பேசுதல்.

4. கை கால் நடுக்கத்தோடு பேசுதல்.

5. தெளிவின்றிப் பேசுதல்.

நிருத்த வழிகள் :

இப்பிழைகளைத் திருத்த

(a) ஏளனம் செய்யக்கூடாது.

(b) அன்பும் ஆதரவும் காட்ட வேண்டும்.

(c) இவற்றின் காரணத்தைக் கண்டுபிடித்துப் பொறுமையோடு திருத்த முயற்சிக்க வேண்டும்.

1. கொச்சை மொழிகள் :

இவற்றிற்குக் காரணம் பிள்ளைகள் வீட்டிலும், சுற்றுப்புறத்திலும் அடைந்த அநுபவத்தால் ஏற்பட்டதாகும்.

நீக்க வழி:

ஆசிரியர் திருத்தமாகப் பேச வேண்டும். அதுவே பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக அமைந்து கொச்சை மொழிகளை நீக்கும். பிள்ளைகளையும் திருத்தமாகப் பேசப் பயிற்சி அளிக்க வேண்டும்.

2. திக்கித் திணறிப் பேசுதல்:

காரணம்		நீக்க வழி
பயம்	—	ஆசிரியர் பிள்ளைகளுடன் அன்பாகப் பழகுதல்.
கூச்சம்	—	அன்போடு மாணவர் பலரும்சேர்ந்து பேசச் சந்தர்ப்பம் அளித்தல்.

போதிய விஷய அறிவு இன்மை	பொருள்களை நேராகக் காட்டி அவற்றைப் பற்றிய கருத்துக்கள் ஏற்பட்ட பின் பேசச் செய்தல்.
அடி நாக்கின் ஓரத்தில் தசை வளர்ச்சி தசைகள் சரிவர வேலை செய்யாமை, நரம்புப் பிடிப்பு.	பெற்றோர்களிடம் அறிவித்து வைத்திய சிகிச்சை செய்யச் சொல்லுதல்.

3. துண்டுபட்ட சொற்களும் சொற்றொடர்களும்:

காரணம் :—வீடு, சுற்றுப்புறம் முதலியவற்றில் கொண்ட அநுபவத்தால் ஏற்பட்டவை.

நீக்க வழி :—ஆசிரியர் ஆரம்ப முதல் சிறு சிறு வாக்கியங்களாகவே பேசுதல் முன் மாதிரியாக அமைய வேண்டும்.

4. கை கால் நடுக்கத்தோடு பேசுதல்.

காரணம் :—அச்சத்தினாலும், போதிய விஷய அறிவு இன்மையாலும் ஏற்படலாம்.

நீக்க வழி :—ஆசிரியர் அன்பாகப் பழகுவது, பிள்ளைகள் சுயேச்சையாகப் பழகிப் பேசச் சந்தர்ப்பம் அளித்தல். தெளிவான கருத்துக்கள் மனதில் ஏற்படும்படி செய்தல்.

5. தெளிவின்றிப் பேசுதல்.

காரணம் :—விஷய அறிவு இன்மை, சந்தேகம், தைரியக் குறைவு.

நீக்க வழி :—தெளிவான கருத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களை உண்டாக்குதல். ஆசிரியர் அன்பாகப் பேசித் தைரிய மூட்டுதல்.

III. ஐந்தாம் வகுப்புக் குழந்தைகள் ஒரு கிராமப் பண்டிகையை வர்ணித்து ஒரு சிநேகிதனுக்குக் கடிதம் எழுதுவதற்கு என்ன குறிப்புகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பாய் ?

1. கடிதம் எழுதும்போது கவனிக்க வேண்டிய குறிப்புகள் :—

(a) இருப்பிடம்—எழுதும் நாள்

(b) மரியாதை முறை

(c) முடிவு—கையெழுத்து

(d) விலாசம்

2. விஷயம் :—

(i) கிராமப் பண்டிகை நடந்த நாள் விவரம்.

(ii) அப்பண்டிகை கொண்டாடுவதன் நோக்கம்.

(iii) அப்பண்டிகையை வீடுகளில் கொண்டாடிய விதம் : வீட்டைச் சுத்தம் செய்து அலங்கரித்தல் — விருந்து — தின்பண்டங்கள்— உடைகள்—குதூகலம்.

(iv) ஊரில் கொண்டாடிய விதம்:—அலங்கரிப்பு— கூட்டம் — மேள வாத்தியம் — நடனம் — பொய்க்கால் குதிரை ஆட்டம் — ராட்டினம் — திருநாள் கடைகள் — மக்கள் அடையும் மகிழ்ச்சி—செலவு—நன்மை, தீமை.

(v) கோவிலில் கொண்டாடிய விதம் :— அலங்காரம்—அபிஷேக ஆராதனைகள் — சுவாமி ஊர்வலம் ஆகிய தலைப்புகளில் வகைப் படுத்தி அப்பண்டிகையை வர்ணித்து எழுதச் செய்ய வேண்டும்.

IV. மௌன வாசிப்பின் நற்பயன்கள் யாவை? நான்காம் வகுப்புக் குழந்தைகள் மௌனப் படிப்பில் முன்னேற எந்த முறையைக் கையாளுவீர்?

1. வாழ்க்கையில் மௌன வாசிப்பே மிகுதியும் பயன்படுவது. எனவே இதனை இளமையிலேயே பழகுதல் நல்லது.

2. பேச்சு உறுப்புகளுக்கு வேலையில்லை. ஆகையால்,

(a) களைப்பின்றி நீண்ட நேரம் வாசிக்கலாம்.

(b) விரைவாக வாசிக்கலாம்.

(c) அருகில் இருப்பவருக்குத் தொந்தரவு இல்லாமல் வாசிக்கலாம்.

(d) வகுப்பில் உரக்கப் படிப்பதில் ஒருவர் படிப்பதுபோலல்லாமல் எல்லோரையும் ஒரே நேரத்தில் படித்தறியச் செய்யலாம்.

(e) கண்களும் மனமும் மட்டுமே வேலை செய்வதால் கருத்தை நன்கு கிரகிக்க முடியும்.

3. தாமாக வாசித்து அநுபவித்துச் சுவைக்க ஏற்றது. எனவே வாசிப்பில் பிரியம் ஏற்படுகிறது வாசிப்பின் முக்கிய நோக்கமாகிய வாசிப்புப் பழக்கம் ஏற்படுகிறது. சுயநம்பிக்கையும் சுயமுயற்சியும் உண்டாகின்றன.

நான்காம் வகுப்பில் மௌனப் படிப்பில் முன்னேறக் கையாளத் தக்க முறைகள்:

1. பாட புத்தகத்தில் ஒவ்வொரு வாசிப்புப் பாடத்தின் ஆரம்பத்திலும் ஒரு பகுதியை மௌனமாக வாசிக்கச் செய்ய வேண்டும். அப்பகுதிக்குரிய சிறு கேள்விகளை

முதலிலேயே கரும்பலகையில் எழுதி அவற்றிற்கு விடை காணச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு வாசிக்கச் செய்தல்.

2. மௌனமாக வாசிக்குப்போது சிறிதுகூட சப்தம் இல்லாமலும் தொண்டை, நாக்கு முதலியவை அசையாமலும் வாசிக்கப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

3. அமைதியாகக் கருத்தூன்றி வாசிக்கப் பயிற்றுதல்.

4. வாசிக்க ஆரம்பிக்கு முன்னரே அரும்பதங்களை விளக்கிக் காட்டி பிள்ளைகள் மௌனமாக வாசிக்கும் போது எளிதாக உணர்ந்துகொள்ள உதவி செய்ய வேண்டும்.

1950

I. வசனம் கற்பிக்கும் முறையிலிருந்து கவிதை கற்பிக்கும் முறை எவ்வாறு வேறுபட வேண்டியதென்பதை விளக்கு.

செய்யுட் பாடத்தின் நோக்கங்களும் வசன பாடத்தின் நோக்கங்களும் நடைமுறையில் நல்ல பயன்களாக விளையும்படி அப்பாடங்கள் போதிக்கப்பட வேண்டும். எனவே அவற்றைப் போதிக்கும் முறைகளும் வேறுபட்டுள்ளன :—

1. வசன பாடத்தின் நோக்கங்கள் ஒரு பகுதியில் வரும் பொருளைச் சுருக்கமாக அறிந்துகொள்வதோடு அதில் வரும் புதிய சொற்களின் அறிவு ஏற்படும் வண்ணம் பயிற்சி கொடுக்கவேண்டும்.

ஆனால் செய்யுள் கற்பிப்பது கவியினது உணர்ச்சிக் கருத்துக்களை உணர்தலும், சொல் நயம், பொருள் நயம் முதலிய செய்யுளின் நலங்களைப் பாராட்டி மகிழ்வதற்கும் மாணவரைப் பயிற்றுவதாக அமைய வேண்டும்.

2. செய்யுளை இசையோடு பாடுவதால் ஓசையின் பழும் உணர்ச்சியும் உண்டாகின்றன. எனவே செய்யுளைப் பாடிக் காட்டவேண்டும். ஆனால் வசன பாடத்தை உரக்க வாசித்தும் மௌனமாக வாசித்தும் கருத்தை உணரும்படி செய்ய வேண்டும்.

3. ஒரு வசன பாடத்தை விளங்குவதற்கேற்பப் பல பிரிவுகளாகப் பிரித்து, பொருள் கூறி விளக்கிப் போதிக்கலாம்; ஆனால் ஒரு செய்யுளைத் துண்டிக்காமல் முழுவதும் படித்தறிந்து கருத்துணரும்படி செய்ய வேண்டும். பதம் பதமாகப் பிரித்துப் பொருள் கூறிப் பாட்டின் நலத்தைக் கெடுத்து விடுதல் கூடாது.

4. செய்யுளைக் கற்பிப்பதின்முன் அதில் அடங்கியுள்ள கருத்தைக் கதை மூலமாகவோ, உதாரணங்கள் மூலமாகவோ விளக்கிக் காட்டலாம். வசன பாடத்திற்கு இத்தகைய விளக்கம் தேவையில்லை.

5. சில முக்கிய செய்யுட்களை மனப்பாடம் செய்யச் சொல்லலாம். செய்யுள் மனப்பாடமாவதும் சுலபம்.

ஆனால் வசன பாடத்தில் மனப்பாடம் செய்யத் தேவையில்லை அது மனப்பாடம் ஆவதும் கடினம்

II. ஆட்டப் பாடல்கள் கற்பிப்பதன் நோக்கம் என்ன? I, II வகுப்புகளுக்கு ஏற்ற ஆட்டப் பாடல்களின் வகைகள் எவை?

ஆட்டப் பாடல்கள் கற்பிப்பதன் நோக்கம்:—

1. சொற்களின் ஓசை, பாடலின் இனிமை இவற்றால் உற்சாகம் உண்டாக்குதல்.

2. புதிய சொற்களின் அறிவு, கருத்துக்களின் அறிவு பெறச் செய்தல்.

3. திருந்திய உச்சரிப்பு, நல்ல ஒலிப்பு, குரல் ஏற்றத் தாழ்வு முதலிய நல்ல மொழிப் பழக்கங்கள் அமையச் செய்தல்.

4. நீதிகளை உணரச் செய்தல்.

5. ஞாபக சக்தியை விருத்தி செய்தல்.

6. நடிப்புக்கு ஆரம்பப் பயிற்சியாகுமாறு செய்தல்.

7. பிள்ளைகளின் கூச்சம், பயம் முதலியவற்றை நீக்குதல்.

I, II வகுப்புகளுக்கு ஏற்ற ஆட்டப் பாடல்கள்,

1. கணக்கு சம்பந்தமான பாடல்கள்.

(உ-ம்) ஒன்றும் ஒன்றும் இரண்டு
கையில் பிடிக்கும் செண்டு

2. எழுத்துப் பயிற்சிப் பாடல்கள்.

(உ-ம்) 'அ' என்பவன் அத்திப்பழம்
'ஆ' என்பவன் ஆசைப்பட்டான்.

3. அசைப் பாட்டு.

(உ-ம்) நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா

4. பொருட் பாடல்கள் :— ஒரு பொருள் சம்பந்தமான விஷயங்களை உள்ளடக்கிய பாடல்கள்.

(உ-ம்) யானை யானை அசைந்து வா.

5. தேகாப்பியாசப் பாடல்கள் :

(உ-ம்) கை வீசம்மா கை வீசு

III. கவிதை கற்பிக்கும் முறையில் பகுதிகளாகக் கற்பிக்கும் முறையை எப்படித் தவிர்ப்பாய் என்று கூறு.

1. செய்யுளைப் பதம் பதமாகப் பிரித்துப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை எனப் பழைய முறைப்படி கற்பிக்காது செய்யுள் முழுமையும் எடுத்துக்கொண்டு ஒரே நோக்காக அதன் கருத்தை அறியுமாறு செய்ய வேண்டும். அக்கருத்தைச் சம்பாஷணை மூலம் முன்னுரையில் அறிவித்து மாணவர் செய்யுளைக் கற்குமாறு பயிற்ற வேண்டும்.

2. அர்த்தம் விளங்குமாறு வாசித்துக் காட்ட வேண்டும். இசையுடனும் இயற்கையான அபிநயங்களுடனும் இருமுறையோ மும்முறையோ வாசித்தல் நலம்.

3. பொருளை நன்கு விளக்குவதற்கு அதில் உள்ள வாக்கியத்தின் பயனிலையின் பேரில், யார்? எப்படி? எப்பொழுது? யாரால்? என்பன போன்ற கேள்விகளைக் கேட்டு வருவிக்க வேண்டும்.

4. செய்யுளின் முழுப் பொருளையும் மாணவர் தாமே தெரிந்துகொள்ள முடியாதபடி தடையாக நிற்கும் கடின பதங்களுக்கு மட்டுமே பொருள் கூறி அவற்றைக் கொண்டு மாணவரைச் செய்யுளின் பொருள் காணும்படி செய்தல் வேண்டும்.

5. பொழிப்புரை, கருத்துரை முதலியவற்றைத் தகுந்த வினாக்கள்மூலம் மாணவர்களிடமிருந்தே வருவிக்க வேண்டும்.

IV. 3-ஆம் 4-ஆம் வகுப்புக் குழந்தைகளின் சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வதற்கேற்ற நான்கு வழிகளைக் கூறு. அவற்றில் ஒன்றை விரிவாக விளக்கு.

1. பாட புத்தகங்களில் வரும் புதிய சொற்களைத் தினசரி ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறிக்கச் செய்தல்.

2. அவ்விதம் கற்ற சொற்களுக்குப் பல பொருள், எதிர்ப் பதங்கள், ஆண்பால் பெண்பால், ஒருமை பன்மை, ஒத்த ஓசையுடைய சொற்கள், அச்சொற்களின் பகுதிகளிலிருந்து உண்டாக்கக்கூடிய வேறு சொற்களையும் கற்பித்தல்,

3. புதிய சொற்கள் கற்பதற்கான நூல் நிலையப் புத்தகங்கள், உப பாடப் புத்தகங்கள், சிறுவர்க்கான பத்திரிக்கைகள் முதலியவற்றை வாசிக்கச் செய்தல்.

4. பொருட்காட்சிசாலைகளுக்கும், உல்லாசப் பிரயாணங்களுக்கும் அழைத்துச் செல்லுங்கால் பல பொருள்களின் பெயர்களையும், தொழில், குணங்களையும், அறிந்து சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக்கொள்ள வசதி அளித்தல்.

1. பாட புத்தகத்தில் ஒரு பாடத்தை வாசிக்கச் செய்து அதில் தெரியாத வார்த்தைகளை ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறிக்கச் செய்தல்.

(a) அவ்வார்த்தைகளுக்குப் பல பொருள் கூறுதல்.

(b) அதே அர்த்தமுள்ள பல சொற்கள் சொல்லுதல்.

(c) அவற்றை வாக்கியங்களில் அமைக்கச் செய்தல்.

(d) அவற்றைக் கோடிட்ட இடங்களில் பூர்த்தி செய்யும் பயிற்சி கொடுத்தல்.

(e) அச்சொற்களின் பகுதிகளிலிருந்து உண்டாக்கக்கூடிய மற்ற சொற்களைச் சொல்லுதல்.

(f) அச்சொற்களின் ஒத்த ஓசையமைந்த சொற்களைச் சொல்லுதல்.

(g) அவற்றின் எதிர்ப் பதங்கள், ஆண்பால் பெண்பால், ஒருமை பன்மை கூறுதல்.

1951

I. பாஷைகளைப் போதிப்பதில் முந்திய நிலைகளில் ஏன் வாய்மொழிப் பயிற்சிக்கு முக்கியம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை விளக்கு.

1. மொழியை நாம் பேசுவதற்கே முதன்மையாக வழங்குகிறோம். அப்பேச்சுப் பயிற்சியே வாசிப்பு, எழுத்துக்கு அடிப்படை; எனவே வாய்மொழிப் பயிற்சியை ஆரம்ப வகுப்பு முதல் தொடங்க வேண்டும்.

2. பேசுதல், படித்தல், எழுதுதல் என்பதே மொழிப் போதனையின் இயற்கை முறை. ஆதலின் வாய் மொழிப் பயிற்சியே படிப்பின் நோக்கங்களை அடைய முதற் படியாகும்.

3. வாய் மொழிப் பயிற்சியின்மூலம் எழுத்துக்களின் உச்சரிப்பைத் திருத்தமாகக் கற்க முடியும். திருத்தமான உச்சரிப்பு திருத்தமாகப் படிக்க, எழுத உதவும்.

4. இதனுல் மழலைச் சொற்கள், கொச்சை மொழிகளைத் திருத்தி அமைக்க முடிகிறது.

5. இதனுல் சொற் பெருக்கமும் கருத்து வளர்ச்சியும் ஏற்படும்; அறிவு விருத்தியாகும்.

6. மாணவர் தாம் கொண்ட கருத்தைத் தெளிவாகவும் கோர்வையாகவும் எடுத்துச் சொல்லும் திறமை ஆரம்ப முதலே ஏற்பட இது உதவுகிறது.

7. வாய்மொழிப் பயிற்சியில் சம்பாஷணை முதலியவைகளினால் ஆரம்ப நிலையில் ஆசிரியருடன் பிள்ளைகள் நெருங்கிப் பழக சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுப் பயம், கூச்சம் முதலியன நீங்கும்.

8 வாழ்க்கைக்குத் தேவையான சொல்வன்மை ஆரம்ப முதலே வளர்ச்சியடையும்.

எனவே பாஷைகளைப் போதிப்பதில் முந்திய நிலைகளில் வாய்மொழிப் பயிற்சிக்கு முக்கியம் கொடுக்கப்பட வேண்டும்.

II. உமது மாணவரிடத்தில் படிப்புப் பழக்கத்தை எவ்வாறு விருத்தி செய்வீர்?

மாணவர்களுக்குப் படிப்பதில் ஆவலைத் தூண்டுவதற்கான வழிகளை ஆரம்ப வகுப்புகள் முதற்கொண்டே தொடங்க வேண்டும்.

1. படிப்பதை இன்பமாகக் கருதும்படி பலவித விளையாட்டுகள்மூலம் வாசிப்பைக் கற்பித்தல்.

2. படப் புத்தகங்களைக் கொடுத்து மகிழச் செய்து அவற்றினைப்பற்றி அறிந்துகொள்ள படிக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்துதல்.

3. சுயநோக்க முறையைப் பயன்படுத்தி அதில் செய்ய வேண்டிய அலுவல்களை நல்ல முறையில் செய்து முடிக்கப் புத்தகங்களைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற மனப்பான்மையை உண்டாக்குதல்.

4. படங்களால் விளக்கப்பட்ட கதைகளைக் கொடுத்து வாசிக்கச் செய்தல்.

5. கதைகளைச் சுருக்கமாகச் சொல்லி அக்கதைகளை விவரமாகத் தெரிந்துகொள்ள வாசிக்க வேண்டும் என்ற ஆவலைத் தோற்றுவித்தல்.

6. புத்தகங்களிலிருந்து கதைகளை வாசித்து மாணவர்களைக் கேட்கச் செய்து, பின்பு மாணவர் தாமே வாசித்து அவ்விதக் கதைகளைத் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்துதல்.

7. மாணவர்க்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அட்டைகளில் எழுதித் தொங்கவிடுதல். படித்தால் அவ்விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம் என்ற நிலைமையை உண்டாக்குதல்.

8. தினமும் வகுப்பில் செய்திகள் வாசித்தல் என்ற பழக்கம் ஏற்படுத்தினுல் நாள்தோறும் பத்திரிக்கை வாசிக்க ஆர்வம் உண்டாகும். அதனுல் படிக்கும் பழக்கம் ஏற்படும்.

9. பாலர் பத்திரிக்கைகள், பலவித பத்திரிக்கைகளில் வரும் பாலர் பகுதிகள், சுவையுள்ள செய்தித் துணுக்குகள் முதலியன சேகரித்த புத்தகங்களைக் கொடுத்து வாசிக்கச் செய்தல்.

III. புராஜெக்ட் முறைப் போதனையின் வெவ்வேறு நிலைகளைக் (STAGES) கூறுக. ஆரம்பப் பள்ளிக்குப் பொருந்தக்கூடிய ஒரு புராஜெக்டைக் கூறி, அது பாஷைகள் கற்பதற்கு எப்படி உதவும் என்பதைக் காட்டுக.

புராஜெக்ட் முறையின் நான்கு படிகளாவன :—

1. தேர்ந்தெடுத்தல் (purposing stage) செய்ய வேண்டிய தொழிலைப் பிள்ளைகள் தாமாகத் தேர்ந்தெடுத்தல்.

2. திட்டம் செய்தல் (planning stage) அத்தொழில் செய்யவேண்டிய வழிவகைகளை ஆலோசித்துத் திட்டம் செய்தல்.

3. செய்து முடித்தல் (executing stags) தொழிலில் ஈடுபட்டு அதனைச் செய்து முடித்தல்.

4. மதிப்பிடுதல் (judging stage) வேலை சரிவர முடிந்துள்ளதா என மதிப்பிடுதல்.

ஆரம்பப் பள்ளிகளுக்குப் பொருந்தக்கூடிய ஒரு புராஜெக்ட் : தேனீ வளர்த்தல்.

அது பாஷை கற்பதற்கு உதவும் விதம் :

1. பேச்சுப் பயிற்சி : இத்தொழிலைத் தேர்ந்தெடுக்கும்போது தத்தம் கருத்துக்களையும். விருப்பத்தையும் காரண காரியத்துடன் தெரிவிப்பதன் மூலம் பேச்சுப் பயிற்சி யடைகின்றனர். பின்னர் திட்டம் செய்தலில் தேனீ பிடிக்கவும், வளர்க்கவும் வேண்டிய வழிவகைகளைப் பற்றிப் பேசுகின்றனர்.

2. வாசிப்புப் பயிற்சி : தேனீ வளர்ப்பது சம்பந்தமான விஷயங்களைச் சேகரிக்கப் பல நூல்களையும், பத்திரிக்கைகளையும், விளம்பரங்களையும், வெளியீடுகளையும் வாசிக்கின்றனர்.

3. எழுத்துப் பயிற்சி : வாசித்தவற்றிற்குக் குறிப்பு எழுதுதல். பலவித முயற்சிகளையும் பதிவு செய்தல். அதற்கான சாமான்களைப் பெறுவதற்குக் கடிதங்கள் எழுதுதல். தேவையான பணம் இடம் முதலியவற்றிற்காக ஆசிரியருக்கு விண்ணப்பங்கள் எழுதுதல். தொழில்கள் மூலம் கிடைத்த சாமான்களை விற்பனை செய்ய விளம்பரங்கள் எழுதுதல் முதலியவற்றின் மூலம் எழுத்துப் பயிற்சி யடைகின்றனர்.

IV. பாஷை பயிலுவதில் எழுத்துப் பயிற்சி செய்யும் உதவிகள் யாவை ?

பாஷை பயிலுவதில் எழுத்துப் பயிற்சிகளாவன :—

1. பார்த்தெழுதுதல்.

2. சொல்வதெழுதுதல்.

3. கட்டுரை எழுதுதல்.

அவை செய்யும் உதவிகளாவன :—

1. பார்த்தெழுதுதல் :

எழுத்துப் பிழை சொற் பிழை நீங்கும். கையெழுத்து விருத்தியடைகிறது. சுத்தமாகவும் நிறுத்தற் குறிகளைக் கவனித்தும் எழுதும் பழக்கத்தை ஏற்படுத்துகிறது.

2. சொல்வதெழுதுதல் :

பிழையின்றித் துரிதமாக எழுதப் பழகுவதற்குப் பயிற்சியளிக்கின்றது. சொற்பிழை ஏற்படாதிருக்கவும், சொற் பிழைகளைத் திருத்திக் கொள்ளவும் உதவுகிறது.

3. கட்டுரை எழுதுதல் :

மொழி அறிவு, நடை முதலியவற்றை விருத்தி செய்கின்றது. வெளியிட விரும்பும் கருத்துக்களைச் சுலபமாகவும், தெளிவாகவும், ஒழுங்காகவும், விரைவாகவும் வெளியிடப் பயிற்சியளிக்கின்றது.

1952

I. படிப்புப் பயிற்சிக்காகும் ஆறு வகை உபகரணங்களை விவரிக்க -

1. பின்னல் அட்டைகள் — படங்களும் சொற்களும் கொண்டவை.

2. கட்டளை அட்டைகள் — அவற்றை வாசித்து அதன்படி செய்தல்.

3. வாக்கிய அட்டைகள் — படங்களும் வாக்கியங்களும் எழுதப்பட்டவை.

4. கதை விளக்கப் படங்கள்.

5. வகுப்பு விளம்பரப் பலகை.

6. ஒப்பனைச் சட்டம் — பலகையில் அல்லது அட்டையில் அமைக்கப்பட்டது. புது எழுத்து வார்த்தையின் முதல் இடை கடைசியில் நகர்த்தி வாசிப்பதற்கு ஏற்ப அமைத்தல்.

II நல்ல முறையில் கேள்வி கேட்டலின் குறிசயங்கள் யாவை?

1. கேள்வியின் கருத்து விளங்கத்தக்கதாக சுலபமான சொற்களால் தெளிவான நடையில் இருக்க வேண்டும். ஏனெனில் பிள்ளைகள் பெரும்பாலும் கேள்விகளைப் புரிந்துகொள்ள முடியாத காரணத்தால் தவறான பதிலை எழுதுகின்றனர் அல்லது பதில் எழுதவே தவறிவிடுகின்றனர்.

2. ஒரு கேள்விக்குச் சரியான விடை ஒன்றுதான் இருக்கவேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளைக் கொண்டு சந்தேகமூட்டுவதாக இருக்கக்கூடாது.

3. கற்பிக்கப்பட்ட பாடத்தில் கேட்கப்படும் கேள்விகள் கூடிய அளவு முயற்சி செய்து விடை கண்டுபிடிப்பனவாக இருக்கவேண்டும்.

4. கேள்விகள் ஒரே மாதிரி இல்லாமல் பலதிறப்பட்டனவாக இருக்கவேண்டும்.

5. விடையை முயற்சியின்றித் தானே வெளிப்படுத்தும் கேள்விகள் கேட்கக்கூடாது.

6. கூடியமட்டும் சுருக்கமான-நேரான கேள்விகளாய் இருக்கவேண்டும்.

7. வகுப்பில் வரிசையாகக் கேட்கக் கூடாது. கேள்வியைச் சொல்லி ஒவ்வொரு பிள்ளையும் தான் பதில் சொல்லும்படி நேரும் என்று பதிலைச் சிந்திக்கும்வண்ணம் செய்ய வேண்டும். அநேகமாக எல்லாப் பிள்ளைகளுக்கும் பரவி வரும்படி கேள்விகள் கேட்கவேண்டும்.

III. வசன பாடத்தில் புதிய சொற்களை விளக்க எம்முறைகளைக் கையாளுவீர்? உதாரணங் காட்டுக.

புதிய சொற்களை விளக்க :—

1. அவற்றிற்குரிய பொருள்களைக் காட்டுதல்.

(உ-ம்) 'தக்ளி' என்ற சொல்லை விளக்க தக்ளியையே நேரில் காட்டி அறிவித்தல்.

2. படங்களைக் காட்டுதல்.

(உ-ம்) 'தறி' என்ற சொல்லை விளக்க ஒரு தறியின் படத்தைக் காட்டுதல்.

3. பொருள் கூறுதல்.

(உ-ம்) 'இழைக்கப்படும்' என்ற சொல்லை விளக்க அதன பொருள் நூற்கப்படும் எனக் கூறுதல்.

4, செய்கை அல்லது நடிப்பினுல் தெரிவித்தல்.

(உ-ம்) 'நொடி' என்ற சொல்லே விளக்க விரல்களால் நொடித்துக் காட்டுதல்.

5 வாக்கியத்தில் அமைத்துக் காட்டுதல்.

(உ-ம்) 'இன்றியமையாதது' என்ற சொல்லே விளக்க உயிர் வாழ காற்று இன்றியமையாதது; உணவு இன்றியமையாதது; தண்ணீர் இன்றியமையாதது என வாக்கியங்களில் அமைத்துக் காட்டுதல்.

6. மாதிரி வாக்கியத்தைப்போல் வேறு வாக்கியங்களில் அமைக்கச் செய்தல்.

(உ-ம்) 'பெரும்பாலும்' மாதிரி வாக்கியம். கிராமத்தில் உள்ளவர் பெரும்பாலும் பயிர்த் தொழில் செய்கின்றனர். அதேபோல் கடற்கரையில் உள்ளவர் பெரும்பாலும் மீன் பிடிக்கின்றனர். காடுகளில் உள்ளவர்கள் பெரும்பாலும் வேட்டையாடுகின்றனர், மலைச் சரிவில் உள்ளோர் பெரும்பாலும் தோட்ட வேலை செய்கின்றனர் என்பனபோன்று வேறு வேறு வாக்கியங்களில் அமைக்கச் செய்து பொருள் அறிவித்தல்.

IV. உமது வகுப்புப் புத்தகசாலைக்குத் தகுந்த புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில் நீர் கருதவேண்டிய விஷயங்களில் முக்கியமான நான்கை விளக்குக.

1. பிள்ளைகளின் வயதிற்கும், மனேநிலைக்கும் விருப்பத்திற்கும், மொழியறிவிற்கும் பொருத்தமான புத்தகங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

2. தெளிவான, சுலபமான, இனிய நடையுள்ளதாயும், பிறர் உதவியின்றி வாசித்துத் தெரிந்து கொள்ளத் தக்கதாயும், குழப்பத்தைத் தராத கருத்துக்கள் கொண்டனவாயும், வகுப்புக்கேற்ற விஷயங்கள் கொண்டனவாயும் இருக்கவேண்டும்

3. சுலபமாக வாசிக்கத்தக்கதாகத் தெளிவாகப் பெரிய எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. மனதைக் கவரக்கூடிய அழகிய படங்கள் இருப்பது நல்லது. இவை அவற்றை எடுத்துப் படிக்கும் ஆவலைத் தூண்டும்.

1953

I. ஆரம்பப் பள்ளிகளில் கவிதையைக் கற்பிக்கலாமா? காரணங் காட்டி விடையளிக்கவும்: கற்பிக்கலாமென்றால் எந்தெந்த நிலைகளில் எத்தகைய செய்யுட்களைக் கற்பிக்கலாம் என்பதை உதாரணங்களுடன் குறிப்பிடுக.

ஆரம்பப் பள்ளிகளில் கவிதையைக் கற்பிக்கலாம். தாய்மொழிப் போதனையில் செய்யுள் படிப்பதும் ஒரு பெரும் பகுதியாகும்.

1. மொழியில் செய்யுளே உயிர்நிலையான பகுதி.
2. மனித அநுபவத்தின் உணர்ச்சி: உயர்கருத்து, ஓசை இனிமை, சொல் நயம், பொருள் நயம் உடையது.
3. செய்யுளைச் சொல் ஓவியம் எனலாம்.
4. முன்னோர்களுடைய அறிவுச் செல்வம் செய்யுள் வடிவில் உள்ளது.

5. ஒன்பது வகைச் சுவைகளும் பத்துவகை அழகுகளும் செய்யுளில் காணப்படுகின்றன.

6. மனம் ஈடுபடக்கூடிய ஓசை நயம், மனப்பாடம் செய்யும் எளிமை, சுருக்கம், செறிவு முதலியன செய்யுளுக்கே உண்டு,

இவற்றைக் கண்டு இன்பமடையும் திறமையை இளமையிலேயே பெறுமாறு பயிற்றுவித்தல் வேண்டும். எனவே ஆரம்பப் பள்ளிகளில் கவிதையைக் கற்பித்தல் அவசியம். ஆரம்பப் பள்ளிகளில் கீழ் வகுப்புகளில் (1—3) அவர்களது அநுபவத்திற்கேற்ற உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டும், சந்தம் உள்ள சொல் திரும்பத் திரும்ப வந்து ஒலிக்கும் பாடல்களாக இருக்க வேண்டும்.

விளையாட்டுக்குகந்த இனிய பாடல்கள் இருக்க வேண்டும்.

(உ-ம்) ஆட்டப் பாடல்கள், அசைப் பாடல்கள், பாப்பா பாட்டுக்கள், விளையாட்டிற்கான பாட்டுக்கள்.

சிறு நீதிப் பாடல்கள்.

(உ-ம்) உலக நீதி, ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன்

மேல் வகுப்புகளில் :—(4—5)

மேற்சொன்ன இன்னிசைப் பாடல்களோடு அறநெறிப் பாடல்களும், கதைப் பாடல்களும் கற்பிக்கலாம்.

(உ-ம்) மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம்—அறநெறிப் பாடல்கள்.
காகமும் பாம்பும்—கதைப் பாடல்.

II. மௌன வாசிப்பால் விளையும் நன்மைகள் எவை? கீழ்நிலை ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் மௌன வாசிப்புப் பயிற்சியை எவ்விதம் ஏற்பாடு செய்வாய்?

மௌன வாசிப்பால் விளையும் நன்மைகள்:

1. வாழ்க்கையில் மௌன வாசிப்பே மிகுதியும் பயன்படுவது.

2. மௌன வாசிப்பின் மூலம்தான் விரைவாக வாசிக்க முடியும்.

3. மௌன வாசிப்பினால்தான் எளிதில் பொருளை கிரகிக்க முடியும்.

4. மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் வாசிக்க முடியும்.

5. களைப்பு ஏற்படாது.

6. வாசிப்பின் முக்கிய நோக்கமாகிய படிக்கும் பழக்கம் ஏற்படும்.

7, வாசிக்கும் நூலைச் சுவைத்து இன்பமடைய முடியும்.

கீழ் வகுப்புகளில்:

1. படங்களையும் வார்த்தைகளையும் இணைக்கும் பயிற்சி.

2. கட்டளை அட்டைகளை வாசித்து அதன்படி செய்யச் சொல்லுதல்.

3. தபால்காரன் விளையாட்டு. பிள்ளைகளின் விலாசம் எழுதிய அட்டைகளைக் கொடுத்து அந்தந்த விலாசம் உள்ளவரிடம் கொடுக்கும் பயிற்சி.

4. பிள்ளைகள் தாமாகப் பதில் கண்டுபிடிக்கக்கூடிய கேள்விகளை வாசித்து விடை அளிக்கும் பயிற்சி.

5. வார்த்தைகள் எழுதப்பட்ட அட்டைகளை வாக்கியங்களாக அமைக்கச் செய்தல்.

6. படங்கள் சேகரித்து ஒட்டப்பட்ட புத்தகத்தில் படத்தின் அடியில் சிறு வாக்கியங்கள் எழுதி வைத்து அவற்றைப் படித்து அறியச் செய்தல்.

7. சுலபமாக வாசிக்கக்கூடிய வாக்கியங்களை எழுதித் தொங்கவிடுதல்.

8. படங்களோடு கூடிய வாக்கிய அட்டைகள், படங்கள் இடையிட்ட கதைகள்.

9. பலவித வியாபார விளம்பரங்கள் முதலியவற்றை வாசித்தறியும் பயிற்சி.

III. ஆரம்பப் பள்ளிகளில் எவ்விதம் வாய்மொழிப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்வாய்?

வாய்மொழிப் பயிற்சிக்குச் செய்யவேண்டிய ஏற்பாடுகள்:

1. பிள்ளைகள் ஒருவரோடொருவர் பேசிப் பழகுதல்.
2. மாணவர்கள் ஆசிரியரோடு பேசிப் பழகுதல்.
3. கதை சொல்லுதல்.
4. கதை நடித்தல்.
5. அபிநயப் பாட்டுகள் பாடுதல்.
6. பாட்டுகள் பாடுதல்.

7. ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லுதல்.

8. சொற்பொழிவு, விவாதங்கள், செய்திகள் வாசித்தல் முதலியன.

9. ஆசிரியரின் பேச்சை முன் மாதிரியாகக் கொள்ளுதல்.

10. உரக்க வாசித்தல்.

IV. பிள்ளைகளின் பேச்சிற் காணப்படும் சாதாரண குற்றங்கள் எவை? எவ்வகைகளில் அவற்றைப் போக்குவாய்?

பிள்ளைகள் பேச்சில் காணப்படும் சாதாரண குற்றங்கள் :—

1. கொச்சை மொழிகள்.

2. திக்கித் திணறிப் பேசுதல்.

3. துண்டுபட்ட சொற்களும், சொற்றொடர்களுமாகப் பேசுதல்.

4. கை கால் நடுக்கத்தோடு பேசுதல்.

5. தெளிவின்றிப் பேசுதல்.

திருத்த வழிகள் :

இக்குற்றங்களைத் திருத்த

(1) ஏளனம் செய்யக்கூடாது.

(2) அன்பும் ஆதரவும் காட்ட வேண்டும்.

(3) இவற்றின் காரணத்தைக் கண்டுபிடித்துப் பொறுமையோடு திருத்த முயற்சிக்க வேண்டும்.

1. கொச்சை மொழிகள் :

இவற்றிற்குக் காரணம் பிள்ளைகள் வீட்டிலும் சுற்றுப்புறத்திலும் அடைந்த அநுபவத்தால் ஏற்பட்டதாகும்.

2. நீக்க வழி :

ஆசிரியர் திருத்தமாகப் பேச வேண்டும். அதுவே பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக அமைந்து கொச்சை மொழிகளை நீக்கும். பிள்ளைகளையும் திருத்தமாகப் பேசப் பயிற்சி அளிக்க வேண்டும்.

திக்கித் திணறிப் பேசுதல் :

காரணம்.	நீக்க வழி.
பயம்	— ஆசிரியர் பிள்ளைகளுடன் அன்பாகப் பழகுதல்.
கூச்சம்	— அன்போடு மாணவர் பலரும் சேர்ந்து பேசச் சந்தர்ப்பம் அளித்தல்.
போதிய விஷய அறிவு இன்மை	பொருள்களை நேராகக் காட்டி அவற்றைப்பற்றிய கருத்துக்கள் ஏற்பட்ட பின் பேசச் செய்தல்.
அடி நாக்கின் ஓரத்தில் தசை வளர்ச்சி, தசைகள் சரிவர வேலை செய்யாமை, நரம்புப் பிடிப்பு	பெற்றோர்களிடம் அறிவித்து வைத்திய சிகிச்சை செய்யச் சொல்லுதல்.

3. துண்டுபட்ட சொற்களும் சொற்றொடர்களும் :

காரணம் :—வீடு, சுற்றுப்புறம் முதலியவற்றில் கொண்ட அநுபவத்தால் ஏற்பட்டவை.

நீக்க வழி :—ஆசிரியர் ஆரம்ப முதல் சிறு சிறு வாக்கியங்களாகவே பேசுதல் முன் மாதிரியாக அமைய வேண்டும்.

4. கை கால் நடுக்கத்தோடு பேசுதல் :

காரணம் :—அச்சத்தினாலும் போதிய விஷய அறிவு இன்மையாலும் ஏற்படலாம்.

நீக்க வழி :—ஆசிரியர் அன்பாகப் பழகுவது, பிள்ளைகள் சுயேச்சையாகப் பழகிப் பேசச் சந்தர்ப்பம் அளித்தல், தெளிவான கருத்துக்கள் மனதில் ஏற்படும்படி செய்தல்.

5. தெளிவின்றிப் பேசுதல் :

காரணம் :—விஷய அறிவு இன்மை சந்தேகம், தைரியக் குறைவு.

நீக்க வழி :—தெளிவான கருத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களை உண்டாக்குதல். ஆசிரியர் அன்பாகப் பேசித் தைரிய மூட்டுதல்.

இம்பீரியல் அச்சகம், பெரியகம்மாளத் தெரு, திருச்சிராப்பள்ளி.

பரிசு ரூ. 165 பரிசு ரூ. 165

— — முத்து — —

அதிட்ட பரிசுகள்

பின்பக்கமுள்ள கூப்பனைப் பூர்த்திசெய்து பிரதி வருஷம் பிப்ரவரி மாதம் 15-ம் தேதிக்குள் எமது புக் டிப்போவிற்கு அனுப்பவேண்டும் குலுக்கு முறையில் யாருக்கு அதிட்ட பரிசு விழுகிறதோ அவர்கள் பெயரைச் செய்தித்தாள்களில் வெளியிடப் பெறும்.

பரிசு பெற்றவர்களுக்குத் தபால்மூலம் பரிசுத்தொகை அனுப்பிவைக்கப்பெறும்.

பரிசு விவரம்

		ரூ. அ. பை.
1.	முதற் பரிசு	50—0—0
2.	2-ம் பரிசு	40—0—0
3,	3-ம் பரிசு	30—0—0
4.	4-ம் பரிசு	20—0—0
5,	5-ம் பரிசு	15—0—0
6.	6-ம் பரிசு	10—0—0

முத்து புக் டிப்போ,

மைலஞ்சந்தை :: திருச்சிராப்பள்ளி

இம்பீரியல் அச்சகம், திருச்சிராப்பள்ளி

முத்து அதிட்ட பரிசுக் கூப்பன். [பூர்த்தி செய்க]

1. புத்தகத்தின் பெயர் ....

2. வாங்கின இடத்தின் விலாசம் ....

....

3 வாங்கின தேதி ______________

4. கூப்பன் அனுப்புவோரின் விலாசம் ....

....

5. கூப்பன் அனுப்பும் தேதி ....

கையெழுத்து.

N. B :—இக்கூப்பனைப் பூர்த்திசெய்து பிரதி வருஷம் பிப்ரவரி மாதம் 15-ம் தேதிக்குள் எமது புக் டிப்போவுக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

தமிழ்ப் போதனுமுறை

விஞ - விடை

[SECONDARY GRADE]

ஆசிரியர் :
வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை
திருச்சிராப்பள்ளி

வெளியிடுவோர் :
முத்து புக் டிபோ
மயிலஞ்சந்தை : : திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1954 [விலை ரு. 1

முன்னுரை

ஆசிரிய மாணவ மணிகாள்,

தாய்மொழியாகிய நம் தமிழ்மொழியைத் தமிழ் மாணவர்க்குக் கற்பிக்கும் போதனைமுறையினை மிகத் தெளிவுற எடுத்துக் கூறுவது இப்புத்தகம் ஆகும். இதனுள் 1942-ம் ஆண்டு முதல் 1953-ம் ஆண்டு முடிய அரசியலாரின், ஆசிரியப் பயிற்சித் தேர்வு (T. S. L. C. Examination—Secondary Grade) தமிழ்ப் போதனைமுறை வினாக்களுக்கு ஏற்ற விடைகள் நல்ல முறையில் கொடுக்கப் பெற்றுள்ளன.

ஆசிரியர் பயிற்சி பெறும் அன்பர்கட்கு இப்புத்தகம் எல்லா வகையினும் உறுதுணை புரியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தேர்ச்சியில் வெற்றிபெற விழையும் ஒவ்வொரு ஆசிரிய மாணவரும் இதனை விருப்புடன் ஏற்றுப் பயன் அடைவார்களாக.

ஆசிரிய மாணவர்கட்குத் தமது வெளியீடுகளின் மூலம் உற்ற துணை புரிந்துவரும் திருச்சிராப்பள்ளி முத்து புத்தக நிலையத்தார் (Muthu Bcok Depot) க்கு என் நன்றி.

'தமிழகம்'
திருச்சிராப்பள்ளி,
4—1—1954.

கோ. இரத்தினம் பிள்ளை,
தமிழாசிரியர்.

53654

METHODS OF TEACHING TAMIL

SECONDARY GRADE

QUESTIONS & ANSWERS

1942

I. சிறந்த செய்யுளின் நலத்தைப் பாராட்டி மகிழ்தற்கு மாணவர்களை எப்படிப் பழக்குவீர்கள்?

செய்யுள் கற்பிப்பதன் நோக்கம் கவிஞனது கருத்துக்கள், உணர்ச்சிகள், இயற்கையிடம்கொண்ட அன்பு ஆகியவற்றை மாணவர் உணரும்படி செய்வதேயாகும். எனவே, அதற்குரிய பயிற்சிகளை அளித்தால்தான் மாணவர் செய்யுளின் நலத்தைப் பாராட்டி மகிழ நாட்டம் ஏற்படும். அதற்குச் செய்யுளின் பொருள் அறிவு ஏற்படுதல் மட்டும் போதாது; அதன் உணர்ச்சியும் ஏற்படுதல் அவசியம். கவி என்ன உணர்ச்சியோடு இயற்றினாரோ, அதனை உணரத் தகுந்த சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும். கற்போருக்கு அவ்வுணர்ச்சி உள்ளத்தே தோன்றும்போதுதான் செய்யுளின் கருத்து நயம், அழகு முதலியவற்றைச் சுவைத்து இன்புற இடம் ஏற்படுகின்றது.

அதற்கேற்ப கீழ்க்கண்ட முறையைக் கையாளலாம்:—

1. செய்யுளின் பொருள் தொடர்புடைய சிறிய முன்னுரையை முதலிற் கூறுதல்.

2. ஆசிரியர் தெளிவாக உணர்ச்சி ததும்ப பாடிக்காட்டுதல். இது கருத்தின் நலத்தைக் கிரகிக்கவும், சொல்லழகின் இன்பத்தைக் காணவும் சாதகமாகும்.

3. கதைகள், உதாரணங்கள், மேற்கோள்கள், படங்கள் மூலமாகக் கவியின் கருத்து, உணர்ச்சிகளை அறியச் சாதகமான சூழ்நிலை ஏற்படுத்துதல். இயற்கையினிடத்து கவிஞனுக்குள்ள பற்றினையும் இன்பத்தையும் மாணவர் உணரும் வண்ணம் எடுத்து காட்டுதல்.

4. சொல்லழகு, எதுகை, மோனை, அணி முதலியவற்றின் இன்பம் காணச் செய்தல்.

5. துண்டு துண்டாகச் செய்யாமல் செய்யுளின் முழுக் கருத்தும் உணருமாறு போதித்தல்.

II. மூன்றும் வகுப்பு மாணவர்களது வாசிப்புத் திறமையை வளர்த்தற்கு உதவக் கூடிய உபகரணங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றைப் பயன்படுத்தும் விதத்தைக் கூறுக :—

1. வாசிப்புத் தாள்கள் — வாக்கிய அட்டைகள் — படங்களுக்கு நேராக வாக்கியங்கள் எழுதப்பட்டவை.
2. கட்டளை அட்டைகள் — கட்டளை வாக்கியங்கள் எழுதப் பட்டவை. மாணவர் அவற்றை வாசித்து அதன்படி செய்தல். இவை மௌன வாசிப்பிற்கு உதவும்.
3. செய்திப் பலகை: விருப்ப மூட்டும் செய்திகளைத் தினசரி எழுதிப் படிக்கச் செய்தல்.
4. விளம்பரத்தாள்கள் — பலவித வியாபார விளம்பரங்கள், விவசாய சுகாதார இலாகாக்களின் விளம்பரங்கள் வெளியீடுகள் முதலியவற்றைச் சேகரித்து வைத்தல்.
5. கதைப்படம் — விளக்கம் எழுதப்பட்டவை.

6. பாப்பா பாட்டுகள், சுகாதாரப் பழமொழிகள், விடுகதைகள் எழுதப்பட்ட தாள்கள்.

7. படப் புத்தகம் (Picture Album)—குறிப்புகள் எழுதப்பட்டவை.

8. தொழிற் படங்கள் — விளக்கம் எழுதப்பட்டவை.

9. சிறுவர் பத்திரிகைகள்.

10. பத்திரிகைகளில் வரும் பாலர் பகுதிகள் — கத்தரித்துச் சேகரிக்கப்பட்டவை.

11. கதைத் திரட்டுப் புத்தகம்.

12. பாடபுத்தக வார்த்தைகள் ஜாபிதா.

சிறுவர் பத்திரிகைகளைப் பயன்படுத்தும் விதம்.

இவற்றில் மூன்றாவது வகுப்பு மாணவர் அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற பகுதிகளில் விருப்பமூட்டக் கூடியவைகளை வகுப்பில் வாசிக்கச் செய்யலாம். வாரத்திற்கு ஒரு கதை படிப்பது என்ற திட்டம் ஏற்படுத்திக்கொள்வது நலம். ஓய்வு நாட்களில் மாணவர் வீட்டிலிருந்து தாமே படித்துவரச் செய்யலாம்.

III. ஒரு இலக்கண விதியை ஆகமன முறைப்படி எவ்வாறு கற்பிப்பீர்கள் என்பதை உதாரண வாயிலாக விளக்குக:—

தெரிந்த வாக்கியங்களை உதாரணங்களாகக் கொடுத்து அவற்றிலிருந்து பிள்ளைகள் இலக்கண விதியைத் தாமே அறிந்து அமைத்துக் கொள்ளச் செய்யும் முறையே ஆகமன முறைப்படி கற்பித்தலாகும்.

(உதாரணம்)

கண்ணன் குழல் ஊதினன்.
கிட்டு பந்து ஆடினன்.
இலக்குமி வீணை வாசிக்கிறாள்.
ஆசிரியர் பாடம் கற்பிக்கிறார்.

இவற்றுள் ஒவ்வொருவரும் என்ன செய்கிருர்கள் என்று கேட்டு ஒவ்வொரு வாக்கியத்திலும் காணப்படும் செய்கையைக் குறிக்கும் சொல்லைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

ஊதினன்
ஆடினன்
வாசிக்கிருள்
கற்பிக்கிருர்

என்ற சொற்கள் செய்கையைக் குறிப்பன. செய்கை=வினை. எனவே இவ்விதம் வினையைக் குறிக்கும் சொற்கள் வினைச் சொற்கள் என்ற விதியைக் காணும்படி செய்யலாம்.

IV. கட்டுரை அப்பியாசங்களைத் திருத்தும்போது கவனிக்க வேண்டிய விஷயங்களைக் குறிப்பிடுக. மாணவர்கள் எழுதும்போது சாதாரணமாய்ச் செய்யும் பிழைகள் மீண்டும் வராமல் தடுப்பதற்கு என்ன உபாயம் பண்ணுவீர்கள் என்பதைக் காட்டுக.

கட்டுரை அப்பியாசங்களைத் திருத்தும்போது கவனிக்க வேண்டிய விஷயங்கள் :—

(a) பயிற்சி எண், தேதி, ஓரக்கோடு, கட்டுரையின் தலைப்பு, பாராக்களாகப் பிரித்து எழுதப்பட்டிருத்தல், கையெழுத்து.

(b) விஷயத் தொடர்பு, நடை, ஆரம்பம், முடிவு.

(c) பிழைகள்.

(i) விஷயங்களில் — தவருனவை, பொருத்தமற்றவை, தெளிவில்லாதவை.

(ii) இலக்கணத்தில் — எழுத்து, சொல், அமைப்பு, நிறுத்தற் குறிகள்.

(d) மாணவர்கள் முன்னிலையில் திருத்துதல்.

(i) பிழைகளை எடுத்துக் காட்டுதலில் அவர்களுடைய மனத்தைப் புண்படுத்தாமல், ஊக்கத்தைக் குறைக்காத வண்ணம் செய்ய வேண்டும்.

(ii) பிழைகளைச் சில குறிகளால் எடுத்துக்காட்டி அவற்றை மாணவர்களே உணர்ந்து திருத்தும்படி செய்ய வேண்டும்.

(iii) பல பிள்ளைகளால் பொதுவாகச் செய்யப்பட்ட பிழைகளைத் தனியே குறித்து வைத்து வகுப்பில் அவற்றைத் திருத்திக் காட்ட வேண்டும். மாண வர்கள் கட்டுரை எழுதும்போது சாதாரணமாக இரண்டு காரணங்களால் பிழைகள் செய்கின்றனர். (1) கவனக் குறைவு. (2) அறியாமை.

1. கவனக் குறைவால் ஏற்படும் பிழைகள் :—

தலைப்பு, பயிற்சி எண், தேதி, ஓரக்கோடு நிறுத்தற் குறி கள், பாரா பிரித்தல் முதலியவற்றில் ஏற்படுவன.

நீக்க வழிகள் :—

(i) பயிற்சி எழுதுமுன் இவற்றைப்பற்றி எச்சரிக்கை செய்தல்.

(ii) எழுதியதைத் திருப்பி வாசிக்கும் பழக்கத்தை வற்புறுத்துதல்.

2. அறியாமையால் ஏற்படும் பிழைகள் :—

கருத்து, நடை, இலக்கண அமைதி, எழுத்துப் பிழைகள் முதலியன.

நீக்க வழிகள் :—

(i) வாய்மொழிக் கட்டுரைப் பயிற்சி

(ii) பல நூல்களை வாசிக்கச் செய்தல் — அகன்ற படிப்பு கருத்துக்கள் சேகரித்து எழுதவும், நல்ல நடையில் எழுதவும், எழுத்துப் பிழைகளை நீக்கவும் உதவும்.

(iii) பிழைகளைக் கவனித்துப் பலதடவைகள் திருத் தச்செய்தல்.

(iv) பொதுவாக ஏற்படும் பிழைகளை எடுத்துக் காட்டி உணர்ந்து திருத்திக் கொள்ளும்படி செய்தல்.

1943

I. மௌன வாசிப்பு எப்படி முக்கியமானது? அதனை விருத்தி செய்ய என்ன வசதிகளை ஏற்படுத்தித் தருவீர்கள்?

மௌன வாசிப்பு முக்கியமானது என்பதற்குரிய காரணங்கள்:

1. வாழ்க்கையில் மௌன வாசிப்பே மிகுதியும் பயன்படுவது.
2. மௌன வாசிப்பின் மூலம்தான் விரைவாக வாசிக்க முடியும்.
3. மௌன வாசிப்பினால்தான் எளிதில் பொருளைக் கிரகிக்க முடியும்.
4. மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் வாசிக்க முடியும்.
5. களைப்பு ஏற்படாது.
6. வாசிப்பின் முக்கிய நோக்கமாகிய படிக்கும் பழக்கம் ஏற்படும்.
7. வாசிக்கும் நூலைச் சுவைத்து இன்பமடைய முடியும்.

மௌன வாசிப்பை விருத்தி செய்ய ஏற்படுத்த வேண்டிய வசதிகள் :—

கீழ் வகுப்புகளில்

1. படங்களையும் வார்த்தைகளையும் இணைக்கும் பயிற்சி.
2. கட்டளை அட்டைகளை வாசித்து அதன்படி செய்யச் சொல்லுதல்.

3. தபால்காரன் விளையாட்டு. பிள்ளைகளின் விலாசம் எழுதிய அட்டைகளைக் கொடுத்து அந்தந்த விலாசம் உள்ளவரிடம் கொடுக்கும் பயிற்சி.

4. பிள்ளைகள் தாமாகப் பதில் கண்டுபிடிக்கக்கூடிய கேள்விகளை வாசித்து விடை அளிக்கும் பயிற்சி.

5. வார்த்தைகள் எழுதப்பட்ட அட்டைகளை வாக்கியங்களாக அமைக்கச் செய்தல்.

6. படங்கள் சேகரித்து ஒட்டப்பட்ட புத்தகத்தில் படத்தின் அடியில் சிறு வாக்கியங்கள் எழுதிவைத்து அவற்றைப் படித்து அறியச் செய்தல்.

7. சுலபமாக வாசிக்கக்கூடிய வாக்கியங்களை எழுதித் தொங்கவிடுதல்.

8. படங்களோடு கூடிய வாக்கிய அட்டைகள், படங்கள் இடையிட்ட கதைகள்.

9. பலவித வியாபார விளம்பரங்கள் முதலியவற்றை வாசித்தறியும் பயிற்சி.

மேல் வகுப்புகளில்

10. ஒவ்வொரு வாசக பாட ஆரம்பத்திலும் சிறிது நேரம் மௌனமாக வாசிக்கும் பயிற்சி கொடுத்தல்.

கேள்விகளை முன்னதாகக் கொடுத்து மௌனமாக வாசித்து விடை கண்டறியச் செய்தல்.

11. படங்களால் விளக்கப்பட்ட கதைகளைக் கொடுத்து வாசிக்கப் பிரியம் உண்டாக்குதல்.

12. வாசகசாலையில் கதைப் புத்தகங்கள் எடுத்துப் படிக்கும் விருப்பத்தைத் தூண்டுதல்.

13. வாசித்த புத்தகத்தில் சிறு கேள்விகளுக்கு விடை எழுதப் பயிற்சி.

II. மோசமான எழுத்துப் பிழைகள் சாதாரணமாய் எக் காரணங்களால் உண்டாகின்றன? அவற்றைத் தவிர்க்க என்ன செய்வீர்கள்?

மோசமான எழுத்துப் பிழைகள் சாதாரணமாக

1. *கவனக் குறைவினாலும்*
2. *தெளிந்த அறிவின்மையினாலும் ஏற்படுகின்றன.*

அவற்றைத் தவிர்க்க வழிகள் :—

1. கவனக் குறைவால் ஏற்படும் பிழைகளை நீக்க

(a) *எழுதும் விஷயங்கள் பிள்ளைகளுக்கு உற்சாகம் அளிக்கும்படியாய் இருத்தல்.*

(b) *எழுதும்போது ஆசிரியர் கவனித்தல்.*

2. அறியாமையினால் ஏற்படும் பிழைகளை நீக்க

(a) *எழுத்துக்களின் திருத்தமான உச்சரிப்பைக் கற்பித்தல்.*

(b) *ர, ற; ண, ன, ந; ல, ள, ழ; ங, ஞ; குறில், நெடில் ஆகிய பேதங்களைத் தனித்தும் சொற்களில் அமைத்துக் காட்டியும் தெளிந்த அறிவு ஏற்படும்படி செய்தல்.*

(c) *வாசிக்கும்போது சொற்களை ஊன்றிக் கவனித்து வாசிக்கச் செய்தல்.*

(d) *பார்த்து எழுதுதல்*

(e) *சொல்வதெழுதுதல்*

(f) *பயிற்சிக்குமுன் பிழை விழக்கூடிய சொற்களைக் கரும்பலகையில் எழுதிக் கவனிக்கச் செய்தல்.*

(g) பிழைபட எழுதும் சொற்களைப் பலமுறை எழுதச் செய்தல்.

(h) எழுத்துப் பிழை விழக் கூடிய சொற்களைத் திருத்தி, மாணவரை ஒரு தனி நோட்டில் பதிவு செய்யச் சொல்லுதல்.

(i) பொதுவாகப் பிழைவிழக்கூடிய சொற்களைத் தொகுத்து எழுதி வகுப்பில் தொங்கவிடுதல்.

(j) எழுத்துப் பிழை விழாமல் எழுதுவதற்குதவியான இலக்கண விதிகளை அறியச் செய்தல்.

III. முதல் மூன்று பாரங்களில் ஏதாவதொன்றுக்குக் கற்பிக்கப்படும் உரை நடைப் பாடத்தின் பல்வேறு படிகளை வருணிக்க.

1. முன்னுரை :

(a) நடத்தப் போகும் பாடத்தின் பொருளுக்குத் தொடர்புடைய, மாணவர்களுக்கு முன்னரே தெரிந்த விஷயங்களைப் பற்றிச் சம்பாஷித்தல்.

(b) படங்களைக் காட்டிச் சம்பாஷித்தல்.

(c) அப்பாடம் கதையானால் அதன் சுருக்கத்தைக் கூறுதல்.

(d) முன்னர் நடத்திய பாடத்தின் தொடர்ச்சியானால் முன் பாடத்தில் கேள்வி கேட்டல்.

இவற்றுள் ஒன்றை முன்னுரையாகக் கொள்ளலாம். அஃது ஐந்து நிமிஷங்களுக்கு மேற்படாதிருத்தல் நலம்.

2. பாடத்தின் பொருளைக் கிரகித்தல்:

(a) பாட சம்பந்தமான சில கேள்விகளை முதலிலேயே கரும்பலகையில் எழுதிப் பாடத்தைக் குறித்த காலத்தில் வாசிக்கச் செய்து அவற்றின் விடைகளைக் கண்டுபிடிக்கச் செய்தல்

7. தொழில்கள்—வேளாளன், கொல்லன், தச்சன், வண்ணான், குயவன் முதலியோர் தொழிலும் அவர்கட்கு உபயோகப்படும் கருவிகளும்.

8. விடுமுறை நாட்கள் — வார விடுமுறை, விசேஷ விடுமுறை.

9. பண்டிகைகள்—தீபாவளி, பொங்கல், சரஸ்வதி பூஜை, கிறிஸ்மஸ், மொகரம் முதலியவை.

10. உற்சவங்கள்—கோவில் உற்சவங்கள், தேர் திருவிழாக்கள்.

1944

I. முதலாம் இரண்டாம் வகுப்புகளில் பாஷா போதனையில் நீர் உபயோகிக்கும் சாதன உபகரணங்களை எடுத்துரைக்கவும். அவற்றில் ஒன்றை விசேஷமாக நீர் எவ்வாறு தயாரித்து உபயோகிப்பீர் என்று கூறுக.

1. பின்னல் அட்டைகள்—படங்களும் சொற்களும் கொண்டவை.
2. கட்டளை அட்டைகள்—அவற்றை வாசித்து அதன்படி செய்தல்.
3. வாக்கிய அட்டைகள் — படங்களும் வாக்கியங்களும் எழுதப்பட்டவை.
4. கதை விளக்கப் படங்கள்.
5. வகுப்பு விளம்பரப் பலகை.
6. ஒப்பனைச் சட்டம் — பலகையில் அல்லது அட்டையில் அமைக்கப்பட்டது. புது எழுத்து வார்த்தையின் முதல் இடை கடைசியில் நகர்த்தி வாசிப்பதற்கு ஏற்ப அமைத்தல்.

7. சொல் சக்கரம் — ஒத்த ஓசையுள்ள வார்த்தைகளை வட்டத்தினுள் அமைத்துச் சக்கரம்போல்எழுத்துக்களை சுற்றிக் காட்டுதல்.

8. எழுத்து அட்டைகள்; வார்த்தை அட்டைகள்—வார்த்தைகளும் வாக்கியங்களும் அமைப்பதற்கானவை.

9. பாப்பா பாடல்களும் அவற்றை விளக்கும் படங்களும்.

10. படச் சேர்க்கைப் புத்தகம் (Picture Album). படங்களின் அடியில் வார்த்தைகள் வாக்கியங்கள் எழுதப் பட்டவை.

இவற்றுள் ஒப்பனைச் சட்டம் தயாரித்து உபயோகிக்கும் முறை :—

இது வாசிப்புப் பயிற்சி அளிப்பதற்கு உதவுகிறது.

ப	ட	ம்
ம		
த		
வ		

ஒரு செங்குத்தான அட்டையில் ப, ம, த, வ என்ற எழுத்துக்களைத் தனித்தனியே மேலிருந்து கீழ் எழுத வேண்டும். அந்த அட்டைக்கு எதிரே மேலிருந்து கீழ் நகர்த்தும்படியாகவும் அதற்குச் செங்குத்தாகவும் உள்ள மற்றொரு அட்டையில் ட, ம் என்ற எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். அந்த அட்டையை நகர்த்தும்பொழுது செங்குத்தான அட்டையில் உள்ள ஒவ்வொரு எழுத்தோடும் சேரும்பொழுது படம், மடம், தடம், வடம் என்ற சொற்கள் அமைவதைப் பிள்ளைகள் பார்த்து வாசித்து உற்சாகம் அடைவர். இதே போல புது எழுத்துக்கள் வார்த்தையின் இடையிலும் கடையிலும் நகர்த்தி வாசிப்பதற்கு ஏற்பவும் அமைத்துக் கொள்ளலாம்.

II. செய்யுள் கற்பிக்கும்போது முழுப் பாட்டையும் ஒருங்கே எடுக்காமல் துண்டித்துக் கற்பிக்கும் முறையைக் கையாளுவதனுல் ஏற்படும் குறைகள் யாவை? அவற்றைத் தடுப்பது எங்ஙனம்?

1. ஒவ்வொரு செய்யுளும் ஒரு முழுக் கருத்து அடங்கியதாகவே இருக்கும். தனித் தனிப் பகுதிகள் கொண்டதல்ல. எனவே முழுப்பாட்டையும் ஒருங்கே எடுக்காமல் துண்டித்துக் கற்பித்தால் செய்யுளின் கருத்தை அறிதல் கடினமாகும்.

2. செய்யுள் போதிப்பதன் நோக்கம் அதன் அர்த்தத்தை அறிந்து கொள்வதற்காக மட்டும் அல்ல. அதைவிடச் சிறப்பாக கவியின் கருத்து, உணர்ச்சி, நயம், இன்பம் முதலியவற்றை மாணவர் அநுபவிக்கும்படி செய்ய வேண்டும். ஒரு செய்யுள் ஒரு மலர் போன்றது. மலரின் அழகையும் மணத்தையும் அநுபவிக்க அதனை இதழ் இதழாகப்பிரித்து நுகர்தல் சரியன்று; அதுபோன்றே செய்யுளின் நலத்தைப் பாராட்டி மகிழ அதனைத் துண்டித்துப் போதிக்கும் முறை சரியானதல்ல. செய்யுள் முழுமையும் ஒன்று சேரப் பார்க்கும்போதுதான் கவியின் கருத்தைத் தெளிவாக உணர முடியும். நயங்களை நன்கு காணச் சாதகமாகும்.

எனவே செய்யுளை வரி வரியாகப் பிரித்தும் பதம் பதமாக அர்த்தமும் விளக்கமும் சொல்லிச் செய்யுளைப் போதிக்காமல் செய்யுளின் முழுக் கருத்தும் மாணவர்க்கு விளங்குமாறு செய்து இசையுடன் பாடிக் காட்டி இன்பம் அநுபவிக்கும்படி செய்ய வேண்டும்.

III. இரண்டாவது மூன்ருவது படிவங்களில் எத்தகைய கட்டுரைகள் எழுதும்படி பயிற்சி செய்தல் ஏற்றதாகும்?

குறிப்பிட்ட ஒரு விஷய சம்பந்தமாய் உம்முடைய மாணவர் பயன் பெறுமாறு எத்தகைய குறிப்புகளை அளிப்பீர்?

இரண்டாம் மூன்றும் படிவங்களில் பயிற்சி அளிக்கக் கூடிய கட்டுரைகள் :—

1. **வர்ணனைக் கட்டுரைகள் :**—*மாணவர்களின் சிந்தனுசக்தி உற்று நோக்கும் தன்மை முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டவை.*

2. **விருத்நாந்தக் கட்டுரைகள் :**—*விஷய அறிவை வளர்த்துக் கோவையாக விவரிக்கப் பயிற்சி அளிப்பன.*

3. **சிந்தனைக் கட்டுரைகள் :**—*உண்மைத் தத்துவங்களைச் சிந்தனை செய்து விளக்கிச் சொல்லப் பயிற்சி அளிப்பவை.*

4. **கற்பனைக் கட்டுரைகள் :**—*கற்பனு சக்தியை வளர்த்து விளக்குவன.*

5. **விவாதக் கட்டுரைகள் :**—*காரண காரியங்களைப் பகுத்தறிய உதவுவன.*

6. **சம்பாஷணைக் கட்டுரைகள்.**

7. **கடிதம் எழுதுதல்.**

8. **சுருக்கி எழுதுதல் :**—*கதைகள், பாடங்கள் முதலியவற்றைப் படித்துச் சுருக்கி எழுதும் பயிற்சி.*

வர்ணனைக் கட்டுரைகளில் ஒன்றைப்பற்றி எழுத அளிக்கக்கூடிய குறிப்புகள்.

சுதந்திர தின விழா.

மாணவர்கள் தங்கள் பள்ளியிலும், ஊரிலும் நேரில் கண்டு அநுபவித்த சுதந்திர தின விழாவைப்பற்றி வாய்மொழிப் பயிற்சியாகச் சம்பாஷணை செய்து பல தலைப்புகளில் குறிப்புகள் தயாரிக்க உதவி செய்தல். பின்னர் எழுதச் செய்தல்.

குறிப்புகள் :—1. *சுதந்திர தின விழா கொண்டாடுவதன் காரணம்—முக்கியத்துவம்.*

2. *பள்ளியில் அலங்காரம்-கொண்டாட்டத்தின் நிகழ்ச்சிகள்.*

3. *ஊரில் பல இடங்களில் அலங்கரிப்புகள்—நடைபெற்ற நிகழ்ச்சிகள்.*

IV. படிக்கும் பழக்கத்தை உம்முடைய மாணவரிடம் உண்டு பண்ணும் சில வழிகளைக் கூறுக.

முதல் மூன்று படிவங்களிலுள்ள மாணவருக்கு எத்தகைய புத்தகங்கள் விருப்பம் அளிக்கக்கூடியவை?

மாணவரிடம் படிக்கும் பழக்கத்தை உண்டுபண்ணும் வழிகள்.

1. *அறிவு வளர்ச்சிக்கு விஷய அறிவு வேண்டும். அதைப் பெற படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தை உண்டாக்க வேண்டியது அவசியம். அதற்காக*

(a) *சுய நோக்க முறையைக் கையாளுதல். அதன் செயல் திட்ட சம்பந்தமான விஷயங்களைச் சேகரிக்கும் முயற்சியில் மாணவர் ஊக்கத்துடன் படிக்கும் பழக்கம் உண்டாகும்.*

(b) *மாணவர்களுக்குப் பிரியமூட்டும் வேலைகளில் ஈடுபடுத்தினால் அவ்வை பற்றிய விஷயங்கள் அடங்கியுள்ள புத்தகங்களைத் தாமே வாசிக்க ஆரம்பிப்பர்.*

(c) *மாணவர்களுக்கு அன்றாட வாழ்க்கையில் உதவக்கூடிய விஷயங்களைப் பற்றிய புத்தகங்களைக் கொடுத்தால் ஆர்வத்துடன் படிப்பர்.*

(d) *சங்கக் கூட்டங்களில் பேச உற்சாக மூட்டுதல். இக் கூட்டங்களில் பேச வேண்டிய விஷயங்களைச் சேகரிக்கும் முயற்சியில் பலவற்றைப் படிக்க முற்படுவர்.*

2. *சுவைத்து இன்புறுவதற்குப் பல நூல்களைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஊட்டவேண்டும். அதற்காக*

(a) *இன்பத்தை அளிக்கும் கதைப் புத்தகங்கள்*
(b) *நாடகங்கள்*
(c) *நகைச் சுவைக் குறிப்புகள்*

(d) பாலர் பத்திரிகைகள் முதலியவைகளைக் கொடுத்து வாசிக்கச் செய்தல்.

3. தினமும் வகுப்பில் செய்திகள் வாசித்தல் என்ற பழக்கம் ஏற்படுத்தினால் தினசரி பத்திரிக்கை வாசிக்க ஆர்வம் உண்டாகும். அதனால் படிக்கும் நல்ல பழக்கம் ஏற்படும்.

முதல் மூன்று படிவங்களிலுள்ள மாணவர்களுக்கு விருப்பம் அளிக்கக்கூடிய புத்தகங்கள் :

1. பிரியம் ஊட்டும் கதைகள், செய்யுட்கள், கட்டுரைகள் அடங்கியவை.

2. எளிதாக விளங்கக்கூடிய அழகிய நடையில் உள்ளவை

3. மிக அதிகமான கடின பதங்கள் இல்லாதவை.

4. படிக்கப் படிக்க மேன்மேலும் ஆர்வத்தை உண்டாக்கும் பாடங்கள் அமையப் பெற்றவை.

5. அதிகக் கடினமாகவும் மிகச் சுலபமாகவும் இல்லாதவை.

6. பழமொழிகள், செய்யுள் வரிகள் மேற்கோள்கள் கொண்டவை.

7. நகைச் சுவை, வீரம், அன்பு முதலிய பலப்பல விதமான உணர்ச்சி ஊட்டும் விஷயங்கள் அடங்கியவை.

1945 .

I. புதிதாகப் பள்ளிக்கூடம் வரும் மாணவர்களின் பேச்சில் பொதுவாகக் காணப்படும் குறைகள் எவை ? அவற்றை எப்படித் திருத்தலாம் என விளக்கிக் கூறுக.

புதிதாக பள்ளிக்கூடம் வரும் மாணவர்களின் பேச்சில் காணப்படும் குறைகள் :—

1. கொச்சை மொழிகள்.

கூடிய இன்னிசையும் எளிமையும் உள்ள கதைப் பாடல்களும், நன்னெறியும் நல்லொழுக்கமும் கூட்டுவிக்கும் பாடல்களும் கற்பிக்கப்பட வேண்டும்.

அச் செய்யுள்களின் இயல்புகள்.

1. உணர்ச்சியையும் உயர்ந்த கருத்துக்களையும் வெளியிடுதல்.
2. ஓசை யினிமை.
3. சொல் நயம்.
4. பொருள் நயம்.

இவற்றை மாணவர் உணர்ந்துகொள்ள அளிக்கக்கூடிய உதவி.

1. கவியினுடைய கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் மாணவர் உணர்ந்து அநுபவிக்கச் செய்யுளைத் துண்டித்துப் போதிக்கக்கூடாது. சிறு முன்னுரையுடன் செய்யுளின் கருத்து முழுவதும் அறியுமாறு செய்ய வேண்டும். இதற்குத் தகுந்த கதையோ சித்திரமோ உபயோகித்தல் சிறந்த பயனைத்தரும். உரை நடையைப்போலப் போதித்துச் செய்யுள் உண்டாக்கும் உணர்ச்சி குன்றும்படி செய்யக்கூடாது. கவி எந்த உணர்ச்சியோடு செய்யுளை இயற்றினரோ அந்த சந்தர்ப்பத்தை மாணவர் உணருமாறு செய்தால் செய்யுளின் உணர்ச்சியை அநுபவிக்க முடியும்.

2. ஆசிரியர் இசையோடு பாடிக் காட்டி மாணவர்களும் அவ்விதமே பாடி இன்பமடையச் செய்ய வேண்டும். இது செய்யுளைச் சுலபமாகக் கற்க ஏதுவாகும்.

3. சொல் நயம் உணருமாறு செய்ய எதுகை, மோனை, அணி முதலியவற்றைப் போதிய அளவு எடுத்துக்காட்ட வேண்டும்.

4. பொருள் நயம் உணரச் செய்யுளில் கூறப்பட்டுள்ள உபமான உபமேயங்களைப் பொருத்திக்காட்டி மாணவர்கள் எளிதாக உணரும்படி செய்ய வேண்டும்.

(b) செய்யுள், உரை நடையின் வேறுபாடுகள்.

செய்யுள் :	உரை நடை :
1. அசை, சீர், தளை, அடி முதலிய அங்கங்களை உடையது. ஓசை இனிமை உடையது அணி, எதுகை, மோனை, சொல் நயம், பொருள் நயம் உடையது	1. செய்யுளின் அங்கங்கள் இன்றிச் சாதாரண வாக்கியங்களால் ஆனது
2. செய்யுட் பாடத்தில் கருத்து, அழகு, நயம் முதலியவற்றை உணர்ந்து இன்புறும் பயிற்சி வேண்டும்	2. புதிய சொற்களை அறிதலும் பொருளை உணரக் கூடிய திறமையும் உண்டாதல் வேண்டும்
3. செய்யுட் பாடத்தைப் பதம் பதமாகப் பிரித்துக் கற்பிக்காமல் முழுதும் எடுத்துக்கொண்டு கருத்து உணருமாறு செய்தல் வேண்டும்	3. உரை நடைப் பாடத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து பொருள் கூறி விளக்கலாம்.
4. சில முக்கிய செய்யுட்களை மனப்பாடம் செய்யச் சொல்லலாம். இசையுடன் படித்தால் மனப்பாடம் ஆவதும் சுலபம்.	4. மனப்பாடம் செய்யவேண்டிய அவசியம் இல்லை; மனப்பாடம் ஆவதும் கடினம்.
5. செய்யுளின் கருத்தை உதாரணத்தைக் கொண்டோ, கதைகளைக் கொண்டோ விளக்கிக் காட்ட வேண்டியிருக்கலாம்.	5. உரைநடையை உதாரணக் கதைகளைக்கொண்டு விளக்க வேண்டிய அவசியமில்லை.

III. எழுத்துக்களை எழுதக் கற்பிக்குமுன் மாணவர்க்கு நீர் அளிக்கும் முற்பயிற்சிகள் எவை?

எழுத்துக்களை எழுதக் கற்பிக்குமுன் கை விரல்களும் தசைகளும் சரியானபடி இயங்கச் சாதகமான பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும். பல உருவங்களின் அறிவு பிள்ளைகளுக்கு எற்பட வேண்டும். அதற்கேற்ப கீழ்க்கண்ட முற்பயிற்சிகள் அளிக்கலாம்.

1. ப்ரோபெலின் பரிசில்களை உபயோகித்தல் — பல வடிவங்களுள்ள கட்டைகள் ஒரு பலகையிலுள்ள சரியாகப் பொருந்தி விழும் குழிகளில் பார்த்துப் போட்டு பொருத்துதல்.

2. மாண்டிசோரி உபகாணங்களை உபயோகித்தல்—பலவித வடிவங்களின் அறிவு எற்படுத்தல்.

3. பல வடிவமுள்ள மரக்கட்டைகளைக் கொடுத்து விளையாட்ச் செய்தல்.

4. களிமண்ணால் பல உருவங்கள் செய்தல்.

5. தாள்களை மடித்துப் பல வடிவங்களாகக் கிழித்தல்.

6. இஷ்டம்போல் வரைதல் — சீமைச் சுண்ணும்பு, குச்சிகளைக் கொடுத்துப் பிள்ளைகளை அவரவர் இஷ்டம்போல் வரையவோ கிறுக்கவோ விடுதல்.

7. எழுத்துக்களில் வர்க்கூடிய பலவகைக் கோடுகளை எழுதிப் பழகச் செய்தல்.

8. மணல்தாளில் வெட்டி யெடுத்த எழுத்தின்மேல் விரலால் விளம்பச் செய்தல்.

9. விரலை நீட்டி ஆகாயத்தில் எழுதிக் காட்டச் செய்தல்.

IV. எழுத்துக் கட்டுரைக்குமுன் வாய்மொழிக் கட்டுரை என் நடத்தப்பட வேண்டும்? ஐந்தாம் வகுப்புக்கேற்ற ஒரு கட்டுரைப் பொருளைத் தேர்ந்தெடுத்து அதைத் தழுவிய வாய்மொழி உரையை நடத்த என்ன திட்டம் போடுவீர் எனக் காட்டுக.

எழுத்துக் கட்டுரைக்கு முன் வாய்மொழிக் கட்டுரை நடத்த வேண்டியதற்குரிய காரணங்கள் :—

1. *மாணவர் எழுதும் கட்டுரைகளில் பல போதிய விஷயமின்மையால் நன்றாயிருப்பதில்லை. இக்குறைபாட்டை நீக்க வாய்மொழிக் கட்டுரை பெரிதும் பயன்படுகிறது.*

2. *விஷயங்களைத் தெளிவாக எழுதுவதற்கு வேண்டிய சொற்களும் முறையும் இப்பயிற்சியில் ஏற்படுகின்றது.*

3. *பிழைகளைத் தவிர்க்க உதவி புரிகின்றது. ஆதலால், எழுத்துக் கட்டுரையைத் திருத்தும் வேலையும் எளிதாக்கப்படுகின்றது.*

4. *சாதாரணமாகச் செய்யும் எழுத்துப் பிழைகளை எடுத்துக் காட்டி எழுதுவதற்கு முன்னரே பயிற்சி கொடுப்பதால் பிழையற எழுத உதவுகின்றது.*

5. *எழுதவேண்டிய பல கருத்துக்களையும் ஒழுங்கு படுத்தி இன்னின்ன தலைப்புகளில் எழுத வேண்டும் என்ற குறிப்புகள் தயாரிக்க உதவி செய்கின்றது.*

6. *வாக்கிய அமைப்புகளைப் பிள்ளைகள் அறிந்துகொள்ள ஏதுவாகின்றது.*

ஆறுகள் என்ற கட்டுரை எழுத அதைத் தழுவிய வாய்மொழி உரையை நடத்தத் திட்டம் :—

1. *விஷயச் சேகரிப்புகள் — மாணவர்களைப் பூகோள புத்தகம் மற்ற பாட புத்தகங்களிலிருந்து ஆறுகளைப்பற்றிய விஷயங்*

களைப் படித்துவரச் செய்தல். அவர்கள் பார்த்துள்ள ஆறுகளைப் பற்றிய விஷயங்களைப்பற்றி யோசிக்கச் செய்தல்.

2. விஷயங்களைப் பல தலைப்புகளில் சொல்லச் செய்தல் — குறிப்பு தயாரித்தல் (கேள்விகள் கேட்டு மாணவர்களைப் பதில் சொல்லச் செய்தல்).

(a) **ஆறுகளின் உற்பத்தி** :—மலையில் மழை பெய்தல், அருவிகளாக ஓடி, ஒன்று சேர்ந்து நதியாதல்.

(b) **பாய்ச்சல்** :—உப நதிகள் சேர்தல், கிளை நதிகள் பிரிதல், அணைகள், கால்வாய்கள்.

(c) **உபயோகம்** :—நீர்ப்பாசனம் – குடிக்க, குளிக்க, துவைக்க உதவுதல் – மின்சார உற்பத்தி, போக்கு வரவு மார்க்கமாக உதவுதல்.

V. ஆரம்பப் பருவத்தில் மொழியைக் கற்பிப்பதில் நடித்துக் காட்டும் முறையில் விளையும் நற்பயன்களை விளக்கிக் கூறு.

நடிப்பு முறையில் விளையும் நற்பயன்கள்.

1. கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லப் பயிற்சியாதல்.

2. சந்தர்ப்பத்திற் கேற்றவாறு பேசப் பயிற்சியாதல்.

3. மனப்பாடம் செய்து ஒப்பிக்காது, தாமாகவே பேசத் திறமை ஏற்படுதல்.

4. உணர்ச்சியோடு கருத்துக்களை எடுத்துச் சொல்லப் பயிற்சி உண்டாதல்.

5. பொருள் உணர்ந்து சொல்லும் திறமை ஏற்படுதல்.

6. பயம், கூச்சம் நீங்கிப் பேசும் திறமை உண்டாதல்.

7. திருத்தமாகச் சொல்லும் ஆற்றல் ஏற்படுதல்.

8. ஞாபக சக்தி கற்பனை சக்தி விருத்தியாதல்.

9. சொற்களஞ்சியம் பெருகுதல்.

10. தொடர்ச்சியாக எண்ணங்களை வெளியிடும் திறமை உண்டாதல்.

1946

I. திருந்திய பேச்சின் நல்லியல்புகள் எவை? அவற்றைப் பெற உம்முடைய மாணவர்களை எவ்வாறு பயிற்றுவீர்கள்?

திருந்திய பேச்சின் நல்லியல்புகள் :

1. ஒவ்வொரு எழுத்தும் வார்த்தையும் திருத்தமாகவும் தெளிவாகவும் உச்சரிக்கப்பட வேண்டும். ல, ள, ழ; ர, ற; ன, ண; ங, ஞ முதலிய எழுத்துக்கள் சரியானபடி ஒலிக்கப்படுதல் வேண்டும்.

2. அனாவசியமான வார்த்தைகள் இன்றிப் பேசுதல்

3. இலக்கணப் பிழையின்றிப் பேசுதல்

4. கொச்சை வார்த்தைகளை நீக்கிப் பேசுதல்

5. கூச்சம், பயம், படபடப்பின்றிப் பேசுதல்

6. கருத்துக்களை ஒழுங்குபடுத்திக் கோவையாகப் பேசுதல்

7. உணர்ச்சி யூட்டும் வகையில் குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் இயல்பாகப் பேசுதல்.

8. நகைச்சுவையோடு இன்பம் பயக்கும் வகையில் பேசுதல்.

9. எளிமையும் இனிமையும் பொருந்திய நடையில் பேசுதல்

பேச்சின் நல்லியல்புகளைப் பெறப் பயற்சிகள் :

1. ஆசிரியர் முன் மாதிரியாகத் திருத்தமாகவே பேசுதல்.

2. ஒலி இயல் பயிற்சிகள் கொடுத்தல்.

3. நல்ல சொற்பொழிவுகளைக் கேட்கும் சந்தர்ப்பம் அளித்தல்.

4. மாணவர்கள் சொற்பொழிவாற்றப் பயிற்சி கொடுத்தல்.

5. கதை சொல்லல், கதை நடித்தல், நாடகம் நடித்தலில் பயிற்சி.
6. தாய்மொழிப் போதனையில் மட்டுமல்லாது மற்ற பாடங்களிலும் திருத்தமாகப் பேசும் பழக்கம்.
7. பிள்ளைகள் ஆசிரியருடனும், மற்ற பிள்ளைகளுடனும் சகஜமாகப் பேச சந்தர்ப்பம் அளித்தல்.

II- மௌன வாசிப்பினுல் பெறக்கூடிய நன்மைகள் எவை? இத்தகைய பழக்கத்தை உற்றுடைய மாணவர்கள் பெறுவதற்காக அவர்களை எவ்வாறு பழக்குவீர்கள்?

மௌன வாசிப்பு முக்கியமானது என்பதற்குரிய காரணங்கள்:

1. வாழ்க்கையில் மௌன வாசிப்பே மிகுதியும் பயன் படுவது.
2. மௌன வாசிப்பின் மூலம்தான் விரைவாக வாசிக்க முடியும்.
3. மௌன வாசிப்பினுல்தான் எளிதில் பொருளைக் கிரகிக்க முடியும்.
4. மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் வாசிக்க முடியும்.
5. களைப்பு ஏற்படாது.
6. வாசிப்பின் முக்கிய நோக்கமாகிய படிக்கும் பழக்கம் ஏற்படும்.
7. வாசிக்கும் நூலைச் சுவைத்து இன்பமடைய முடியும்.

மௌன வாசிப்பை விருத்தி செய்ய ஏற்படுத்த வேண்டிய வசதிகள் :—

கீழ் வகுப்புகளில்

1. படங்களையும் வார்த்தைகளையும் இணைக்கும் பயிற்சி.

2. கட்டளை அட்டைகளை வாசித்து அதன்படி செய்யச் சொல்லுதல்.

3. தபால்காரன் விளையாட்டு. பிள்ளைகளின் விலாசம் எழுதிய அட்டைகளைக் கொடுத்து அந்தந்த விலாசம் உள்ளவரிடம் கொடுக்கும் பயிற்சி.

4. பிள்ளைகள் "தாமாகப் பதில் கண்டுபிடிக்கக்கூடிய கேள்விகளை வாசித்து விடை அளிக்கும் பயிற்சி.

5. வார்த்தைகள் எழுதப்பட்ட அட்டைகளை வாக்கியங் களாக அமைக்கச் செய்தல்.

6. படங்கள் சேகரித்து ஒட்டப்பட்ட புத்தகத்தில் படத்தின் அடியில் சிறு வாக்கியங்கள் எழுதிவைத்து அவற்றைப் படித்து அறியச் செய்தல்.

7. சுலபமாக வாசிக்கக்கூடிய வாக்கியங்களை எழுதித் தொங்கவிடுதல்.

8. படங்களோடு கூடிய வாக்கிய அட்டைகள், படங்கள் இடையிட்ட கதைகள்.

9. பலவித வியாபார விளம்பரங்கள் முதலியவற்றை வாசித்தறியும் பயிற்சி.

மேல் வகுப்புகளில்

10. ஒவ்வொரு வாசக பாட ஆரம்பத்திலும் சிறிது நேரம் மௌனமாக வாசிக்கும் பயிற்சி கொடுத்தல்.

கேள்விகளை முன்னதாகக் கொடுத்து மௌனமாக வாசித்து விடை கண்டறியச் செய்தல்.

11. படங்களால் விளக்கப்பட்ட கதைகளைக் கொடுத்து வாசிக்கப் பிரியம் உண்டாக்குதல்.

12. வாசகசாலையில் கதைப் புத்தகங்கள் எடுத்துப் படிக்கும் விருப்பத்தைத் தூண்டுதல்.

13. வாசித்த புத்தகத்தில் சிறு கேள்விகளுக்கு விடை எழுதப் பயிற்சி.

III. மூன்றும் வகுப்பு மாணவருடைய தமிழ்மொழி போதனைக்குப் பயன்படக் கூடியதும் செயல் திட்ட முறைக்கு ஏற்றதுமான ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு, அதை எவ்வாறு பயனுடையதாகச் செய்வீர் என்பதனை விவரிக்க.

ரயில் பிரயாணம் என்னும் விளையாட்டை மாணவர்கள் செயல் திட்ட முறையாக எடுத்துக்கொண்டு அதைப் பின்வருமாறு மொழிப் போதனைக்குப் பயனுடையதாகச் செய்யலாம்.

(1) அவ்விளையாட்டை விளையாடுவதற்கு வழிகளையும் விளையாட்டின் விவரங்களையும், முறையையும்,, அதனால் ஏற்படும் இன்பத்தையும் நன்மைகளையும் பற்றிய உரையாடல்கள் செய்யச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தி வாய்மொழிப் பயிற்சியை விருத்தியடையச் செய்யலாம்.

(2) விளையாட்டுக்குத் தேவையான ரயில்வே ஸ்டேஷன்களின் பெயர்கள், உத்தியோகஸ்தர்களின் பெயர்கள், அங்குள்ள கட்டிடங்கள், இடங்கள், பொருள்களின் பெயர்கள், அங்குள்ள அலுவல்கள் முதலியவற்றைப் பற்றிக் குறிப்புகள் எழுதச் செய்து எழுத்துக் கட்டுரைப் பயிற்சிகளுக்குப் பயனுடையதாகச் செய்யலாம்.

3. மேற்கண்ட குறிப்புகளையும் அவை சம்பந்தமான இதர விஷயங்களையும் படிக்கும்போது வாசிப்புப் பயிற்சி ஏற்படும்.

IV. செய்யுட் பாடத்தினை நடத்தும்போது நீங்கள் கவனத்தில் வைக்க வேண்டிய விஷயங்கள் எவை?

(1) செய்யுளின் முக்கிய கருத்தை விளக்கக்கூடிய கதை அல்லது மற்ற சிறு விளக்கத்தை முன்னுரையாகக் கொண்டு போதிக்க வேண்டும்.

(2) செய்யுளின் முழுக் கருத்தையும் மாணவர் அறிந்த பின்னரே அதனைப் பிரித்துப் பொருள் காணும்படி செய்தல் வேண்டும்.

(3) உணர்ச்சியோடு இனிமையாகச் செய்யுளைப் பாடிக் காட்டுதல் வேண்டும். ஏனெனில் அது பொருளைக் கிரகிக்கவும் இன்பத்தை அநுபவிக்கவும் சாதகமாகும்.

(4) அளவுக்கு மிஞ்சிய விளக்கம் கூடாது.

(5) கடின பதங்களுக்குப் பொருள் கொடுத்துப் பிள்ளைகள் தாமாகச் செய்யுளின் பொருள் முழுதும் காணுமாறு செய்யவேண்டும்.

(6) பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, உபமான உபமேயம் ஆகியவற்றை வரிசையாகப் போதிப்பது என்ற கண்டிப்பான முறையைக் கையாளுதல் தவறு. இவற்றை மாணவர் தாமாகவே உணரச் செய்தல் உகந்தது.

(7) தேவையான இலக்கண அமைதிகள், நயம், எதுகை, மோனை, அணி முதலியவற்றையே சொல்ல வேண்டும்.

(8) சிறந்த சொல் நயம், பொருள் நயம், மிகுந்த பயன் படக்கூடிய செய்யுட்களையே மனப்பாடம் செய்யச் சொல்ல வேண்டும்-

V. கட்டுரை அல்லது வியாசப் பயிற்சியின் வாயிலாக உம்முடைய மாணவரின் படைக்கும் ஆற்றலை எவ்வாறு தூண்ட முடியும்?

மாணவரிடம் ஆக்கத் திறமை இயற்கையாகவே காணப்படு கின்றது. தம் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளையும் கருத் துக்களையும் தாம் விரும்பும் வண்ணம் வெளியிட வேண்டுமென்று எண்ணுவர். அத்திறமையை வளர்க்கப் பயிற்சிகள் கொடுக்க வேண்டும்.

1. மாணவர் தம் கருத்தினைப் பயப்படாது எடுத்துச் சொல்ல ஊக்குவித்தல் அதற்கான சந்தர்ப்பங்களைக் கட்டுரைப் பயிற்சியில் அளித்தல்.

2. அவர்கள் அடைந்துள்ள அநுபவங்களைப் பற்றிக் கடிதங்கள் எழுதச் சொல்லல். மற்றவர் எழுது வதை ஒட்டி எழுதாமல் சுயமாக எழுதினால் அதிக மார்க்குகள் கொடுத்து இயற்கையாக எழுதத் தூண்டுதல்.

3. கதையின் ஒரு பாகத்தைக் கொடுத்து மீதியைப் பூர்த்தி செய்யச் சொல்லுதல்.

4. கொடுக்கப்பட்ட சிறு குறிப்புகளைக்கொண்டு கதையை விரிவாக எழுதச் சொல்லுதல்.

5. 'நீ அரசனாக இருந்தால் என்னென்ன நன்மைகள் செய்வாய்?' என்பது போன்ற சிந்தனைக் கட்டுரைகள் எழுதச் சொல்லுதல்.

6. கற்பனை செய்து தாமாகச் சிறு கதைகள் எழுதச் செய்தல்.

1947 Emergency.

I. ஒரு வசன பாகத்தை உமது மாணவர்கள் படித்து அநுப விப்பதைவிட அதே விஷயத்தைக் கொண்ட ஒரு செய்யுள் பாகத்தை அவர்கள் இன்னும் நன்ருக அநுபவிக்க நீர் என்ன செய்வீர் என்று விளக்கிக் காட்டுக.

1. *வசன பாடம் கற்பிப்பதில் மாணவர்கள் புதிய சொற்களையும் பொருளையும் உணருமாறு செய்தால் போதும். ஆனால் அதே விஷயத்தைக் கூறும் ஒரு செய்யுளைக் கற்பிக்கும்போது அதன் பொருள் உணர்தலோடு கவியினுடைய உணர்ச்சியையும் கருத்துக்களையும் அறியும்படி செய்தால்தான் அவர்கள் அதை அநுபவிக்க முடியும். கவிஞன் உவமை சொல் நயம் முதலியவற்றின் வாயிலாகக் கருத்துக்களை உணர்ச்சி ததும்ப வெளிப்படுத்தும் திறமையைக் கண்டு களிக்கவும், சொல் நயம், பொருள் நயம் முதலியவற்றின் இன்பத்தை அநுபவிக்கவும் செய்ய வேண்டும்.*

2. *வசன பாடத்தை உணர்ந்து அநுபவிக்க மௌனமாகப் படிப்பது எற்றதாகும். ஆனல் செய்யுளை உரக்கப் பாடுவதே ஓசை நயத்தையும் கவியினது உணர்ச்சியையும் உணர்ந்து அநுபவிக்க உகந்ததாகும்.*

3. *வசன பாடத்தைப் பல பகுதிகளாகப் பிரித்துப் பொருள் கூறி விளக்கலாம். ஆனல், செய்யுள் பாகத்தை முழுமையும் எடுத்துக் கொண்டு கருத்து உணருமாறு செய்தல் வேண்டும். பல பகுதிகளாகப் பிரித்துப் பொருள் கூறக்கூடாது. கதை, உதாரணம், படம் மூலமாக விளக்கிக் காட்டுதல் இக்கருத்தை எளிதில் அறிய எதுவாகும். வசன பாடத்தில் இவ்விதம் செய்யவேண்டிய அவசியமில்லை.*

4. வசன பாடத்தை மனப்பாடம் செய்யச் சொல்ல வேண்டியதில்லை. அது மனப்பாடம் ஆவதும் கடினம். ஆனால், செய்யுளின் சொல்லழகு கருத்தழகு ஆகியவற்றில் மாணவர்களின் மனம் ஈடுபடும்படி செய்தால் எளிதாக மனப்பாடம் செய்ய உதவியாகும்.

5. சுருங்கக் கூறின் மாணவர் உள்ளத்தில் உணர்ச்சியை எழுப்புவதும் கவியின் கற்பனை, கருத்தழகு, அதனை வெளிப்படுத்தும் முறை, அதிலுள்ள நயங்கள் முதலியவற்றில் மாணவர்கள் இன்பம் காணச் செய்வதும் செய்யுள் கற்பிக்கும்போது கவனிக்க வேண்டுவனவாகும்.

II. முதல் இரண்டாம் வகுப்புகளுக்குப் பாஷை போதிக்க எவ்வித உபகரணங்களை நீர் சேகரம் செய்வீர்?

1. பின்னல் அட்டைகள்—படங்களும் சொற்களும் கொண்டவை.

2. கட்டளை அட்டைகள்—அவற்றை வாசித்து அதன்படி செய்தல்.

3. வாக்கிய அட்டைகள் — படங்களும் வாக்கியங்களும் எழுதப்பட்டவை.

4. கதை விளக்கப் படங்கள்.

5. வகுப்பு விளம்பரப் பலகை.

6. ஒப்பனைச் சட்டம் — பலகையில் அல்லது அட்டையில் அமைக்கப்பட்டது. புது எழுத்து வார்த்தையின் முதல் இடை கடைசியில் நகர்த்தி வாசிப்பதற்கு ஏற்ப அமைத்தல்.

7. சொல் சக்கரம் — ஒத்த ஓசையுள்ள வார்த்தைகளை வட்டத்தினுள் அமைத்துச் சக்கரம்போல் எழுத்துக்களைச் சுற்றிக் காட்டுதல்.

8. எழுத்து அட்டைகள்; வார்த்தை அட்டைகள்—வார்த்தைகளும் வாக்கியங்களும் அமைப்பதற்கானவை.

9. பாப்பா பாடல்களும் அவற்றை விளக்கும் படங்களும்.

10. படச் சேர்க்கைப் புத்தகம் (Picture Album). படங்களின் அடியில் வார்த்தைகள் வாக்கியங்கள் எழுதப் பட்டவை.

இவற்றுள் ஒப்பனைச் சட்டம் தயாரித்து உபயோகிக்கும் முறை :—

இது வாசிப்புப் பயிற்சி அளிப்பதற்கு உதவுகிறது.

ப	ட	ம்
ம		
த		
வ		

ஒரு செங்குத்தான அட்டையில் ப, ம, த, வ என்ற எழுத்துக்களைத் தனித்தனியே மேலிருந்து கீழ் எழுத வேண்டும். அந்த அட்டைக்கு எதிரே மேலிருந்து கீழ் நகர்த்தும்படியாகவும் அதற்குச் செங்குத்தாகவும் உள்ள மற்றொரு அட்டையில் ட, ம் என்ற எழுத்துக்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். அந்த அட்டையை நகர்த்தும்பொழுது செங்குத்தான அட்டையில் உள்ள ஒவ்வொரு எழுத்தோடும் சேர்ந்து படம், மடம், தடம், வடம் என்ற சொற்கள் அமைவதைப் பிள்ளைகள் பார்த்து வாசித்து உற்சாகம் அடைவர். இதே போல புது எழுத்துக்கள் வார்த்தையின் இடையிலும் கடைசியிலும் நகர்த்தி வாசிப்பதற்கு ஏற்பவும் அமைத்துக் கொள்ளலாம்.

III. (a) வாய்மொழிப் பயிற்சியின் நோக்கங்கள் யாவை?

(b) பாலர்கள் திருத்தமாகப் பேசப் பயிற்சி செய்ய எவ்வித முறைகள் சிறந்ததென விளக்குக.

(a) வாய்மொழிப் பயிற்சியின் நோக்கங்கள்:—

1. மாணவர்கள் பயப்படாமல் திருத்தமாகவும், தெளிவாகவும் பேசும் ஆற்றல் அடைதல்.
2. புதிய சொற்களைப் பற்றிய அறிவுபெறச் செய்தல்.
3. திருத்தமான வாசிப்பு, எழுத்துப் பயிற்சிகளுக்கு உதவும்படி செய்தல்.
4. பிழையின்றிப் பேசும் வன்மை உண்டாக்குதல்.
5. கேள்விகளுக்குத் தகுந்த விடை அளிக்கும் ஆற்றல் அடைதல்.
6. கிரகிக்கும் சக்தியை விருத்தி செய்தல்.
7. பற்பல பொருள்களைப்பற்றிய அறிவு அடைதல்.
8. சொற்பொழிவாற்ற, கட்டுரைகள் எழுத முற்பயிற்சியாதல்.

(b) 1946 முதல் கேள்வியின் பிற்பகுதி.

IV. மாணவர்களது எழுத்து வேலையை அமைக்க ஆசிரியர் கொள்ளவேண்டிய முறைகள் யாவை? இரண்டாம் படிவத்திற்கு உபயோகிக்கக்கூடிய எழுத்து வேலை வகைகளில் ஐந்து எழுதுக.

எழுத்து வேலையை அமைக்க முறைகள்:—

1. மாணவர் அறிந்த விருப்பமான பொருள்களைப்பற்றி எழுதுவது எளிதாகலின் அவற்றைக்கொண்டு ஆரம்பித்தல் ஏற்புடையது.
2. எழுத்துப் பயிற்சிகளில் தெளிவு, வேகம், அழகு ஆகிய மூன்று அம்சங்களையும் விருத்தி செய்தலைக் கவனிக்க வேண்டும்.

3. சொல்வன்மை வளர எழுத்து வன்மையும் வளரும். எனவே வாய்மொழிப் பயிற்சியின்மூலம் பல தலைப்புகளில் விஷயங்களைச் சேகரித்த பின்னரே கட்டுரை எழுதும் பயிற்சி அளிக்கவேண்டும்.
4. மாணவர் சுலபமாக எழுதும் திறமையை வளர்க்கும் பயிற்சி கொடுக்கவேண்டும்.
5. இயற்கையான இனிய நயம் மிகுந்த இலக்கணப் பிழையற்ற நடையில் எழுதப் பயிற்சி அவசியம்.
6. அநுபவங்களைப்பற்றி எழுதவும் கற்பனை செய்து எழுதவும் பயிற்றுதல் வேண்டும்.
7. முறையாகக் கட்டுரை எழுதத் திட்டமும் அதற்கென கால அட்டவணையில் நேரமும் வகுத்தல் வேண்டும்.

இரண்டாம் படிவத்திற்கு எழுத்து வேலை வகைகளில் ஐந்து :—

1. வரலாற்றுக் கட்டுரை.
2. சிந்தனைக் கட்டுரை.
3. கதைக் குறிப்பை விரித்துப் பெரிதாக எழுதுதல்.
4. கடிதம் எழுதுதல்.
5. சுருக்கி எழுதுதல்—ஒரு கதையையோ பாடத்தையோ படித்து அதன் சுருக்கத்தை எழுதுதல்.

V. மௌன வாசிப்பின் பலன்களை எழுது. மௌன வாசிப்பை விருத்தி செய்ய நீர் எவ்வித முறைகளைக் கையாளுவீர் என்று விவரிக்க.

மௌன வாசிப்பு முக்கியமானது என்பதற்குரிய காரணங்கள் :—

1. வாழ்க்கையில் மௌன வாசிப்பே மிகுதியும் பயன்படுவது

2. மௌன வாசிப்பின்மூலம்தான் விரைவாக வாசிக்க முடியும்.
3. மௌன வாசிப்ினுல்தான் எளிதில் பொருளைக் கிரகிக்க முடியும்.
4. மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் வாசிக்க முடியும்.
5. களைப்பு ஏற்படாது.
6. வாசிப்பின் முக்கிய நோக்கமாகிய படிக்கும் பழக்கம் ஏற்படும்.
7. வாசிக்கும் நூலைச் சுவைத்து இன்பமடைய முடியும்.

1947

I. மொழிக் கல்வியில் மற்ற அம்சங்களுடன் சம்பந்தப்படுத்தி (Correlate) போதிப்பதுதான் இலக்கணம் போதிப்பதற்கு மிகவும் சிறந்த முறையாகும் — இதை விளக்கிக் காட்டுக.

மாணவர்கள் இலக்கண அறிவு பெறுவது அதனைப் பயன்படுத்தி நடை முறையில் இலக்கணப் பிழையின்றி மொழியின் மற்ற அம்சங்களான பேச்சு, எழுத்து இவற்றில் திறமையடைவதற்கேயாகும். ஆகவே, இலக்கணத்தைத் தனித்த முறையில் கற்பித்துவிட்டுவிடுவது சரியல்ல.

பேச்சுக்கும் எழுத்துக்கும் பயிற்சி அளிக்கும்போதே, இலக்கணத்தையும் சம்பந்தப்படுத்திப் போதிப்பதே சிறந்தது. அப்போதுதான் இலக்கணத்தின் பொருளும் அதனை உபயோகிக்கும் முறையும் சந்தர்ப்பமும் நன்கு விளங்கும். மாணவர் வெறுப்பின்றி இலக்கணத்தை எளிதில் கற்கவும், அதன் அவசியத்தை உணரவும், உதவியாகும்.

உரைநடை செய்யுள் வகுப்புக்களில் அப்பாடங்களில் விளங்கும் இலக்கண விதிகளைப் பொருத்திக் காட்ட வேண்டும்.

பேச்சுப் பயிற்சி, எழுத்துப் பயிற்சி கொடுக்கும்போது அவை பிழையின்றி அமையத் தேவையான இலக்கணம் போதிக்கப் பட வேண்டும். உதாரணமாக வாக்கியத்தில் எழுவாய் பயனிலை களின் தன்மைகள், பொருத்தம், அமைப்பு முதலியவற்றைக் கூறு தல். வாய் மொழி, எழுத்துக் கட்டுரைகளில் மாணவர் பெற்ற இலக்கண அறிவைப் பயன்படுத்துமாறு பயிற்சி அளிக்க வேண்டும்.

II. கட்டுரை வரைதல் பயிற்சிக்குமுன் ஆயத்தமான முக்கிய வழிகள் யாவை? மூன்றும் படிவ மாணவர்கள் தென்னைமரம் என்ற கட்டுரை தயார் செய்ய எவ்விதம் உதவி செய்வீர் என்று விளக்குக.

கட்டுரைகள் வரைதல் பயிற்சிக்கு முன் ஆயத்தமான **முக்கிய வழிகள் :—**

1. வாய்மொழிப் பயிற்சி அளித்தல்.
2. விஷயங்களைச் சேகரிக்கச் செய்தல்.
3. பல தலைப்புக்களின் விஷயங்களை ஒழுங்குபடுத்திக் குறிப்பு தயாரிக்கச் செய்தல்.
4. கட்டுரையில் பிழைகள் ஏற்படாமல் கவனித்து எழுது வதற்கான உதவி செய்தல்.

தென்னை மரம் என்ற கட்டுரை தயார் செய்ய அளிக்கக் கூடிய உதவி.

1. வாய் மொழிப் பயிற்சி :—

தென்னை மரத்தைப்பற்றிய சம்பாஷணை—மாணவர் அநுபவத்தில் அடைந்துள்ள அறிவைக் கூறும்படி செய்தல்.

2. விஷயங்களைச் சேகரித்தல் :—

இயற்கை, பூகோள பாட புத்தகங்களில் தென்னை மரத்தைப்பற்றிக் கூறப்பட்டுள்ள விஷயங்களைப் படித் துச் சேகரிக்கச் செய்தல்.

3. விஷயங்களைப் பல தலைப்புகளில் ஒழுங்குபடுத்திக் குறிப்பு தயாரித்தல் :—

(i) தென்னையின் வகை, வளரும் இடம்.

(ii) பயிர் செய்து பாதுகாக்கும் விதம்.

(iii) தென்னையின் பாகங்கள்: வேர், அடிமரம், மட்டை, பூ, காய் முதலியன.

(iv) அவற்றின் உபயோகம்: மேற்கூறிய ஒவ்வொரு பாகத்தினுடைய உபயோகம்—வீடு கட்ட, பாலம் அமைக்க, கீற்று, விசிறி, துடைப்பம், எண்ணெய் முதலியன.

(v) தென்னையைப் பற்றிய பழமொழிகளும் மேற்கோள்களும் — "நின்று தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தரும்".

III. கீழ் வகுப்புகளில் Spelling அபிவிருத்தி செய்ய சில முறைகளை எழுதுக.

1. பிள்ளைகள் பிழையாக உச்சரிக்கும் சொற்களைப் பிழையாகவே எழுதுவர். ஆதலின், உச்சரிப்புப் பிழைகளைத் திருத்துவதற்கான பயிற்சிகள் கொடுக்க வேண்டும்.

(a) ல, ள, ழ ; ர, ற ; ன, ண ; ங, ஞ முதலிய ஒலிகளைத் திருத்தமாக உச்சரிக்க நாக்கு, உதடு அசையும் விதங்களை நேரிலும் படங்கள் மூலமாகவும் விளக்கிக் காட்டலாம்.

(b) ஆசிரியருடைய பேச்சு தெளிவாகவும் திருத்தமாகவும் முன் மாதிரியாக இருக்க வேண்டும்.

2. பார்த்தெழுதுதல், சொல்வதெழுதுதல் பயிற்சிகள் மிகுதியாகக் கொடுக்க வேண்டும்.

3. பிழை பண்ணக்கூடிய வார்த்தைகளைத் தொகுத்து எழுதி வகுப்பில் தொங்கவைத்து அவற்றை வாசிக்கச் செய்ய

வேண்டும். அடிக்கடி ஊன்றிப் பார்த்தலும், திரும்பத் திரும்ப எழுதுவதும், பிழைகளைத் தவிர்க்க நல்ல சாதனமாகும். வார்த்தைகள் கட்டுதல், வார்த்தைகளில் விடப்பட்ட எழுத்துக்களைப் பூர்த்தி செய்தல், குறில் நெடில், ல, ள, ழ, ன, ண, ர, ற பேதங்கள் கொண்ட வார்த்தைகள் முதலியவற்றில் பயிற்சி கொடுப்பதும் நன்மை பயக்கும்.

IV. வகுப்பு நூல் நிலையங்களின் பிரயோஜனங்களை விவரிக்க. இவ்வித நிலையங்களை எவ்வாறு அமைப்பீர்? இவ்வித நிலையங்களில் எவ்வித புத்தகங்களை நீர் சேகரித்து வைப்பீர்?

வகுப்பு நூல் நிலையங்களின் பிரயோஜனங்கள்.

1. ஒவ்வொரு வகுப்பிலும் வைக்கப்பட்டிருப்பதால் பிள்ளைகள் அவற்றை எடுத்து வாசிக்கத் தூண்டப்படுவர். படிப்பில் பற்று ஏற்பட்டு அறிவு வளர்ச்சி அடையும்.

2. வகுப்புக்கேற்ற மொழித் தேர்ச்சியடையச் சாதகமாகும்.

3. மௌன வாசிப்புப் பயிற்சிக்குச் சாதனமாகும்.

4. மாணவர் விரும்புகின்றனவும் அவர்களது அறிவுக்கும் ஆற்றலுக்கும் ஏற்றனவுமாகிய நூல்களே இருப்பதால் அவற்றை விரும்பிப் படிக்க ஏதுவாகும்.

அமைக்கும் விதம்.

1. வருடந்தோறும் அரசியலார் புத்தகங்களுக்காகக் கொடுக்கும் உதவிப் பணத்திலிருந்து சில புத்தகங்கள் வாங்கலாம்.

2. மாணவர்களது வீடுகளில் பெரியோர்கள் வாசித்து முடித்த புத்தகங்களை மாணவர்களே நன்கொடையாகக் கேட்டு வாங்கி வந்து வைக்கலாம்.

3. மாணவர்களிடம் சிறு தொகை வசூலித்துச் சில புத்தகங்கள் வாங்கலாம்.

4. இசைப் போட்டிகள், சொற்பொழிவுப் போட்டிகள் நாடகங்கள் நடத்திப் பொருள் சேகரித்துச் சில புத்தகங்கள் வாங்கலாம்.

5. ஊரிலுள்ள பெரியோர்களிடமும் கூட்டுறவுச் சங்கத்தாரிடமும் நன்கொடை பெற்றுச் சில புத்தகங்கள் வாங்கலாம்.

6. பள்ளியை விட்டு நீங்கும் பிள்ளைகள் தாங்கள் உப பாடமாகப் படித்த புத்தகங்களில் ஒவ்வொன்று கொடுத்துப் போகும்படி செய்து அவற்றை இதில் சேர்க்கலாம்.

சேகரித்து வைக்கக் கூடிய புத்தகங்களின் வகை

1. நிகழ்ச்சிகளும், செயல்களும் நிறைந்த கதைப் புத்தகங்கள்.

2. பிரயாணம், புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட வரலாறுகளைப் பற்றியவைகள்.

3. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் இயந்திர சாதனங்களைப்பற்றிக் கூறும் விளக்கப் படங்களுடன் கூடிய நூல்கள்.

4. நம் நாட்டு, அயல்நாட்டுக் காட்சிகள், பழக்க வழக்கங்களைப்பற்றிக் கூறும் நூல்கள்.

5. பலத்திறப்பட்ட பொருள்களைப்பற்றிப் பல வகையான நடையில் எழுதப்பட்ட நூல்கள்.

6. கலை வளர்ச்சியை வளர்க்கும் நூல்கள்.

இவை அந்தந்த வகுப்பு மாணவரது அறிவுக்கும் விருப்பத்திற்கும் ஏற்றதாக இருத்தல் வேண்டும்.

1948

1. கதை சொல்லல் அல்லது செய்யுள் ஒப்பித்தல் (Story telling or Recitation) என்பது வாய்மொழிப் பயிற்சியில் என்ன இடத்தைப் பெற்றிருக்கிறது என விளக்கி இரண்டாம் வகுப்பிற்கு இவற்றுள் ஒரு பாடத்தை எப்படி நடத்துவீர் எனக் கூறுக.

கதை சொல்லுதல் அல்லது செய்யுள் ஒப்பித்தல் வாய்மொழிப் பயிற்சியில் முக்கிய அம்சமாகும்.

காரணங்கள் :—

1. மாணவர் கூச்சம், பயம் தெளிந்து உணர்ச்சியோடு தங்கள் கருத்தை வெளியிடுவதற்குச் சிறந்த வாய்மொழிப் பயிற்சியாக அமைகிறது.

2. நிகழ்ச்சிகளைக் கோவையாகச் சொல்லும் திறமை உண்டாகிறது.

3. கற்பனா சக்தி விருத்தியாகின்றது.

4. பயன்படுத்தும் சொற்றொகையை அதிகரிக்கின்றது.

5. முழு வாக்கியமாக, உணர்ச்சியோடு கூடிய நடையில் திருத்தமாகப் பேசும் ஆற்றலை உண்டாக்குகிறது.

6. சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பேசும் திறமை எற்படுகிறது.

7. சுவையூட்டும் வகையில் பேசக் குரலையும், சொல்லையும், செயலையும் மாற்றக்கூடிய பயிற்சி உண்டாகின்றது.

8. கேட்டவற்றை மனத்தில் கிரகித்து, ஞாபகத்தில் வைத்துத் திருப்பிச் சொல்லும் சக்தி விருத்தியடைகின்றது.

இரண்டாம் வகுப்பிற்குக் கதை சொல்லப் பழக்குதல் : 'காகமும் குடமும்' என்ற கதை.

1. கதையை விளக்கும் படத்தை உபகரணமாக வைத்துக் கொண்டு ஆசிரியர் திறமையாகச் சுவையோடு கதையைச் சொல்ல

வேண்டும். 6, 7 சிறிய வாக்கியங்களாக இருந்தால் போதும்; மாணவர் மனதில் நன்கு பதிந்துவிடும்.

2. அவற்றை மாணவர்கள் திருப்பிச் சொல்லும்படி செய்யவேண்டும்.

(a) முதலில் கதையைக் குறிக்கும் தொடர்ச்சியான படங்களைப் பார்த்துக் கதையைச் சொல்லப் பயிற்சி கொடுக்கலாம்.

(b) ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு வாக்கியமாகச் சொல்லிக் கதையைப் பூர்த்தி செய்யலாம்.

(c) கதையைச் சிறிது சொல்லிவிட்டு மாணவரை இஷ்டம்போல் முடிக்கச் செய்யலாம்.

3. மாணவர் விருப்பப்பட்டால் கதையை நடிக்கப் பயிற்சி கொடுக்கலாம்.

II. மூன்றும் வகுப்புக்கேற்ற வாய்க்குள் படிப்பிற்கு உதவக் கூடிய தனிப் பயிற்சித் தாள்களை (Individual work sheets) எவ்வாறு ஆயத்தம் செய்யலாம்?

மூன்றும் வகுப்பில் மௌன வாசிப்பில் வாக்கியத் தொடர்களின் முக்கிய கருத்தை எடுத்துக் காட்டுவதிலும் படித்த கதைகளின் சாரத்தைச் சுருக்கிக் கூறுவதிலும் பழக்கம் தந்து பொருள் அறியும் திறமையை வளர்க்க வேண்டும். இவற்றிற்குத் தகுதியாகக் கீழ்க்கண்ட தனிப் பயிற்சித் தாள்கள் தயாரிக்கலாம்.

1. ஒரு வாக்கியத்தில் விடை தரக்கூடிய கேள்விகள்.

(உதாரணம்) கதை: குல்லா வியாபாரி.

கேள்விகள்: 1. குல்லா வியாபாரி எங்கே சென்றான்?

2. அவன் தூங்கும்போது குரங்குகள் என்ன செய்தன?

2. சரியான சொல்லைப் பொறுக்கி எடுத்து வாக்கியத்தைப் பூர்த்தி செய்யும் பயிற்சி.

(உதாரணம்) பொங்கல் பண்டிகை — மாதத்தில் வரும்
(வைகாசி, ஆனி, தை, பங்குனி)

3. சொற்களைத் தக்கபடி மாற்றிப் பொருள்படும் வாக்கியமாக அமைத்து எழுதும் பயிற்சி.

(உதாரணம்) சென்றான் சரவணன் பள்ளிக்குத் தினந்தோறும்.

4. சரியானபடி இணைத்து எழுதும் பயிற்சி.

(உ-ம்) அறிஞர்க் கழகு	தறுகண் ஆண்மை
உண்டிக் கழகு	கற்றுணர்ந் தடங்கல்
தந்திரிக் கழகு	விருந்தோடுண்டல்

5. ஒவ்வொரு தொகுதியிலும் பொருத்தமில்லாத சொல்லை நீக்கும் பயிற்சி.

(உ-ம்) (a) வருஷம், வீசை, மாதம், தேதி, மணி.

(b) மா, பலா, இரும்பு, வாழை.

6. எதிர்ப் பதங்களைப் பொறுக்கி எழுதும் பயிற்சி.

(உதாரணம்) நன்மை × தீமை.
நல்ல, உண்மை, ஏழை, கஷ்டம், பகல், பணக்காரர், சுகம், இரவு, பொய், கெட்ட.

7. சரியா, தவறா. சரியென்றால் அதன் எதிரில் ✓ என அடையாளம் செய், தவறு என்றால் × என அடையாளம் செய்.

1. பசுவுக்குக் குளம்புகள் பிளவுபட்டிருக்கும்.
2. சாலையில் விளையாடுதல் நல்லது.
3. கெட்ட பிள்ளைகள் போற்றப்படுவர்.
4. மாலையில்தான் விளையாட வேண்டும்.

III. மூன்றும் அமைப்பு (III Form) அல்லது எட்டாம் வகுப்பு மாணவர்கள் மனப்பாடம் செய்வதற்கேற்ற (memorisation) செய்யுட்களைத் தேர்ந்தெடுப்பதில் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகளைக் கூறுக.

1. மாணவர்களுக்கு விருப்பம் உண்டாக்கும் செய்யுட்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

2. சொல்லழகு, பொருளழகு நிறைந்தவையாக இருக்க வேண்டும்.

3. நுண்ணிய கருத்துக்கள் அடங்கியவையாக இருத்தல் நல்லது.

4. செய்யுள் அழகினையும் இனிமையையும் சுவைத்து இன்புறவும் புலவனது உணர்ச்சியை மாணவர் ஆழ்ந்து அநுபவிக்கவும் ஏற்றனவாகிய செய்யுட்களாக இருக்கவேண்டும்.

5. வேறு நூல்களைக் கற்கும்பொழுது எடுத்துக் காட்டாக உபயோகப்படக்கூடிய செய்யுட்களாக இருக்கவேண்டும்.

6. பிற்கால வாழ்க்கைக்கு உதவக்கூடியவைகளாக இருக்க வேண்டும்.

7. பலவகைக் காட்சிகளைப்பற்றிக் கூறும் பகுதிகள், ஒழுக்கத்தை ஊட்டவல்ல செய்யுட்கள், இன்னோசையும் பொருட்செறிவும் உள்ளவை, கடவுள் வணக்கப் பாடல்கள் முதலியவற்றை மனப்பாடம் செய்யச் சொல்லுதல் சிறந்தது.

IV. கற்பனைக் கட்டுரையை எந்த வகுப்பில் நுழைக்கலாம் என்பதைக் காரணங்களுடன் கூறி அவ்வகைக் கட்டுரையை அவ்வகுப்புக்கு நடத்துவதற்கான ஒரு பாடக் குறிப்பால் விளக்குக.

கற்பனை செய்வது அநுபவப்படாத ஒரு காரியத்தை இருப்பதாகப் பாவனை செய்து எழுதுவதாகும். பிள்ளைகளுக்கு இவ்வாறு பாவனை செய்யும் சக்தி அதிகம் உண்டு. சிறு பிள்ளைகள்

விளையாட்டுகளில் இவ்வித பாவனையை உபயோகிக்கின்றனர். குச்சியைக் குதிரையாகவும், பலகையை ரயிலாகவும், மண்ணைச் சுவராகவும், கல்லைக் காசாகவும், பலவிதமாகப் பாவனை செய்து விளையாடுவது இயற்கையாகும். எனவே நான்கு, ஐந்தாம் வகுப்புகளிலேயே கற்பனைக் கட்டுரையை எழுதப் பயிற்சி கொடுக்கலாம்.

உதாரணம்:— நீ பஞ்சாயத்து சபை தலைவரானால் என்னென்ன பொது நன்மைகளைச் செய்வாய்? உனக்கு 100 ரூ. பரிசு கிடைத்தால் எவ்விதம் செலவு செய்வாய்? என்ற கேள்விகளுக்கு பதில் எழுதுதலும், ஏதாவது ஒன்று தன் சுயசரிதையைச் சொல்வதுபோல எழுதுவதும் கற்பனைக் கட்டுரையாகும்.

உதாரணம்: தபால் கார்டு தன் பிரயாணத்தைப்பற்றிச் சொல்லுதல்.

பாடக் குறிப்பு :—

வகுப்பு : 5 நேரம் : 45 நிமிஷம்,

பாடம் : தபால் கார்டு பிரயாணம் : சுவசரிதை.

நோக்கம் : கற்பனா சக்தியைத் தூண்டுதல்,

சொல் வன்மை எழுத்து வன்மையை உண்டாக்குதல்,

1. **முன் ஆயத்தம் :** தபால் கார்டு வாங்குமிடம்—அதில் எழுதுதல்—தபால் பெட்டியில் போடுதல்—முத்திரையிடப்படுதல்—ரயிலில் சேர்தல்—சேரவேண்டிய ஊரை அடைதல்—விலாசதாரரிடம் சேர்க்கப்படுதல் இவைபற்றிய கேள்விகள் கேட்டுச் சம்பாஷித்தல்.

2. விஷயத்தை ஒழுங்குபடுத்திப் பல தலைப்புகளில் குறிப்பு தயாரித்தல்,

(a) கார்டு தபால் பெட்டியில் சேரும் வரையில் செய்யப்படுவன.

(b) தபால் ஆபீசில் அதற்குச் செய்யப்படுவன.

(c) ரயிலில் அதற்கு செய்யப்படுவன.

(d) விலாசதாரரிடம் போய்ச் சேரும் விதம்.

3. மேற்கண்ட விஷயங்களைத் தபால் கார்டு தானே பேசுவது போல மாணவர்களைச் சொல்லச் செய்து பின்னர் எழுதவேண்டும்,

(உதாரணம்) நான் தபாலாபீசிலிருந்து முக்காலணு கொடுத்து வாங்கி வரப்பட்டேன்.

1949

I. குழந்தைகளுக்கு வாய்மொழிப் பயிற்சி அளிப்பதற்குரிய நான்கு முறைகளைக் கூறுக. அவற்றுள் ஒன்றை முதல் பாரத்துக் குழந்தைகளுக்குப் பயன்படும்படியாக எப்படி உபயோகிப்பீர் என விளக்குக :

1. உரையாடல் — சொற்பொழிவுகள் — விவாதங்கள் நடத்துதல்.
2, சிறுவர்களுக்கான இசைப் பாடல்கள்—ஆட்டக் கதைப் பாடல்கள், பழமொழிகள் முதலியவற்றை ஒப்புவிக்கும்படி செய்தல்.
3. கதை சொல்லுதல்.
4. நடிக்கச் செய்தல்.

அவற்றுள் முதல் பாரத்துக் குழந்தைகளுக்கு நடிக்கச் செய்தலை பயன்படும்படியாக உபயோகிக்கலாம்.

பாடம் : கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழியனிடம் வழக்குரைத்த பகுதி,

கதாப் பாத்திரங்கள் : நெடுஞ்செழியன், காவலர்கள், வாயில் காப்போன், கண்ணகி இவர்களை மாணவர்களுக்குள் தேர்ந்தெடுத்தல்.

முறை:—அவரவர் நடிக்க வேண்டிய பகுதிகளைக் குறிப்பிட்டுக் கொடுத்தல், பேசவேண்டிய பேச்சுக்களை அவர்கள் விளங்கும்படி சொல்லி நன்றாகப் படித்து வரச் செய்தல். மாணவர்கள் அந்தந்த கதாப் பாத்திரங்கள் எனப் பாவித்து மெய்ப்பாடுதோன்றப் பேசி நடிக்கப் பயிற்சி கொடுத்தல். இவ்விதம் நடிப்பது மாணவர்க்கு மிகுதியும் விருப்பத்தை ஊட்டும்; சொல் வன்மையையும் விருத்தி செய்யும்.

II. எழுத்துப் பயிற்சியில் நான்கு இனங்களைக் கூறுக. அவற்றுள் ஒன்றை ஐந்தாம் வகுப்பிற்கு எப்படி உபயோகிப்பீர் என்பதைத் தெளிவுபடுத்துக.

1. பார்த்து எழுதுதல். (Transcription)
2. சொல்வதெழுதுதல். (Dictation)
3. காப்பி எழுதுதல். (Copy writing)
4. கட்டுரை எழுதுதல். (Composition)

இவற்றுள் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்குச் சொல்வதெழுதுதல் பயிற்சி,

மாணவர்களை முகத்துக்கு முகம் நின்று எழுதச் சொல்லுதல். அவர்கள் படித்த பாடத்தில் சில கடின பதங்களையும், வாக்கியங்களையும் எழுதச் செய்தல். ஆசிரியர் அவற்றைத் தெளிவாகச் சொல்லுதல். மாணவர்கள் கவனித்துக் கேட்டுப் பின்னர் எழுதுதல். அவற்றைத் திருப்பித் திருப்பிச் சொல்லுதல் கூடாது. மாணவர்கள் கற்பலகைகளை முறையே மாற்றிக்கொள்ளச் செய்தல். ஆசிரியர் அவற்றைக் கரும்பலகையில் எழுதிக்காட்டி மாணவர்களைத் திருத்தச் செய்து, பின்னர் அவரவர் கற்பலகைகளை வாங்கிக்கொள்ளச் செய்தல். ஆசிரியர் அவைகளைப் பார்த்து மதிப் பெண்கள் கொடுத்தல். பிழைகளைத் திருத்திக் காட்டச் செய்தல். அவற்றோடுகூடப் பொதுவாகக் காணப்படும் பிழைகளை விளக்கிக் காட்டி அவற்றை நீக்குவதற்கான வழிகளைக் கையாளுதல்.

III. நடிப்பு முறையினால் குழந்தைகளுக்கு விளையும் பயன்கள் யாவை? இரண்டாம் படிவ மாணவர்களுக்கு எத்தகைய நடிப்புப் பயிற்சியை அளிப்பீர்? உதாரண மூலமாக விளக்குக.

நடிப்பு முறையின் பயன்கள் :

1. கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லுதல்.
2. சந்தர்ப்பத்திற் கேற்றவாறு பேசும் திறமை உண்டாதல்.
3. உணர்ச்சியோடு கருத்துக்களை எடுத்துச் சொல்லப் பயிற்சி.
4. பொருள் உணர்ந்து சொல்லும் திறமை ஏற்படுதல்.
5. பயம், கூச்சம் நீங்கிப் பேசும் திறமை ஏற்படுதல்.
6. திருத்தமாகப் பேசும் ஆற்றல் ஏற்படுதல்.
7. ஞாபக சக்தி, கற்பனு சக்தி விருத்தியாதல்.
8. சொற்களஞ்சியம் பெருகுதல்.
9. கதைகளைத் தாமே நாடகங்களாக மாற்றி எழுதும் திறமை உண்டாதல்.
10. நடிப்புக்கு வேண்டிய பொருள்களைத் தாமே தயாரிப்பதால் சுய பொறுப்பும் தற்சார்பும் ஏற்படுகின்றன.

இரண்டாம் படிவம் மாணவர்களுக்கு அளிக்கக்கூடிய நடிப்பு பயிற்சிகள்

1. தபால் நிலைய அலுவல்கள்.
2. வைத்தியசாலை நடத்துதல்.
3. கடை வைத்து விற்றல்.
4. பள்ளியில் பிள்ளையைச் சேர்த்தல்.
5. அதிகாரிகளிடம் வேலை தேடும் சந்தர்ப்பம்.
6. ரயில்வே ஸ்டேஷனில் நடைபெறும் நிகழ்ச்சிகள்.

(உ-ம்.) **தபால் நிலைய அலுவல்கள்** — தபால் சேவகன்-கடிதங்களைச் சேகரித்து வருதல் – முத்திரையிடுதல் – பைகளில் கட்டுதல் – புகைவண்டி நிலையத்திற்கு எடுத்துச் செல்லுதல் – தபால் நிலைய அதிகாரி குமாஸ்தாக்கள் அலுவல் பார்க்கும் விதம், பொது மக்களிடம் நடந்துகொள்ளும் விதம், மணியார்டர் செய்தல், ரெஜிஸ்தர் செய்தல், தந்தி அடித்தல், சேவிங்ஸ் பேங்கில் பணம் போடுதல், திருப்பி எடுத்தல்.

இதனை நடத்தும்போது [illegible]னவர்கள் சுயமாகப் பேச, நடிக்க உற்சாகம் கொடுக்க வேண்டும். இவற்றை எழுதிக் கொடுத்து மனப்பாடம் செய்து வந்து ஒப்பிப்பதுபோல் இருக்கக் கூடாது.

1950

I. (i.) **நன்றாய்க் கதை சொல்வதின் முக்கிய அம்சங்கள் (Characteristics) எவை?**

(ii.) **மூன்றாவது வகுப்பிற்குக் கதை சொல்வதில் நீ கையாளும் முறையை விளக்கிக் கூறுக.**

1. நன்றாய்க் கதை சொல்வதின் அம்சங்கள் :—

(a) ஆசிரியர் சொந்த வார்த்தைகளில், எளிய நடையில், இனியகுரலோடு, இயற்கையாகப் பேசுவதுபோலக் கதை சொல்ல வேண்டும். மனப்பாடம் செய்து ஒப்பிப்பது போலவோ, படிப்பது போலவோ இருக்கக் கூடாது.

(b) கதையின் பல சம்பவங்களையும் மனக் கண்ணில் படமாகத் தோன்றும்படி சொல்ல வேண்டும்.

(c) சந்தர்ப்பத்திற் கேற்றவாறு குரலைத் தாழ்த்தியும் உயர்த்தியும், அபிநயத்துடனும், உற்சாகத்தோடும், உணர்ச்சியோடும் சொல்ல வேண்டும்.

(d) ஆசிரியர் தம்மை மறந்து மாணவரோடு மாணவராகத் தம்மை மதித்துச் சொல்ல வேண்டும்.

(e) கதையிலுள்ள நீதியை வெளிப்படையாகக் கூறாது மாணவர்களே அறிந்து கொள்ளும் வண்ணம் சொல்ல வேண்டும்.

(f) கதை சொல்லும்போது இடையில் நிறுத்திக் கேள்விகள் கேட்டுக் கிரகிக்கச் செய்வதும் நல்ல பலனைத் தரும்.

2. மூன்றாம் வகுப்பிற்குக் கதை சொல்வதில் கையாளும் முறை :—

குல்லா வியாபாரி என்ற கதை.

அக் கதையைக் காட்சி காட்சியாகக் குறிக்கும் படங்களைக் காட்டி ஆசிரியர் கதையைச் சொல்லுதல். இடையிடையே கேள்விகள் கேட்டும் வருவிக்கலாம்.

(உ–ம்) வியாபாரி எங்குப் படுத்தான். குரங்குகள் குல்லாய்களை ஏன் தூக்கின. பின் ஏன் எறிந்தன.

பின் மாணவர்களைக் கதை சொல்லச் செய்தல்.

1. படத்தைப் பார்த்து.
2. படத்தைப் பாராமல்.
3. ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு காட்சியாக.
4. கேள்விகளுக்கு விடையளித்தல். கதையை ஆயத்தமின்றி மாணவரே நடித்து விளையாடுதல்.

II. (a) பாரம் III-ல் கட்டுரை எழுதுவதற்கு (written composition) ஐந்து பயிற்சிகளுக்கு ஒரு பட்டியல் (Scheme) வரை. அவைகளில் ஒவ்வொன்றுக்கும் உன் மாணுக்கர்களுக்கு நீ எவ்வித உதவியளிப்பாய் ?

(b) கட்டுரை எழுதுவதில் ஏற்படும் பொதுப் பிழைகளைப் பற்றிய குறிப்புப் புத்தகத்தை (Book of common Errors) நீ எவ்விதம் கையாண்டு பயன்படுத்துவாய் ?

(a) 1. *வரலாற்றுக் கட்டுரை—நேரு.*

2. *வருணனைக் கட்டுரை—சுதந்திர தின விழா.*

3. *சிந்தனைக் கட்டுரை —வாய்மை.*

4. *கடிதம் எழுதுதல் —வேலை தேட விண்ணப்பம்.*

5. *சுருக்கி எழுதுதல் —கதையைப் படித்துச் சுருக்கம் எழுதுதல்.*

1. நேரு :—

அவரது வரலாற்றைப்பற்றி மாணவர்களை வாசித்து வரச் செய்து, உரையாடல் மூலம் விஷயங்களைப் பல தலைப்புகளின்கீழ் குறிப்புகள் தயாரிக்க உதவுதல்.

(a) இளமைப் பருவம். (b) கல்வி. (c) வாழ்க்கை.

(d) தேசத் தொண்டு. (e) இந்தியாவின் முதன் மந்திரி.

2. சுதந்திர தின விழா :—

மாணவர்கள் தங்கள் பள்ளியிலும் ஊரிலும் நேரில் கண்டு அநுபவித்த சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தைப்பற்றிக் கூறும்படி செய்து பல தலைப்புகளில் குறிப்புகள் தயாரித்து எழுத உதவுதல்.

(a) சுதந்திர தின விழா கொண்டாடுவதன் காரணம்-முக்கியத்துவம்.

(b) பள்ளியில் அலங்காரம் — கொண்டாட்டத்தின் நிகழ்ச்சிகள்.

(c) ஊரில் பல இடங்களிலும் அலங்கரிப்பு — நடைபெற்ற நிகழ்ச்சிகள்.

3. வாய்மை :—

சம்பாஷித்து இதைப்பற்றி மாணவர் அறிந்துள்ளவற்றைச் சேகரித்து அதிகமாக எழுதவேண்டுவனவற்றை ஆசிரியர் சொல்லிக் குறிப்பு தயாரித்து எழுத உதவுதல்.

(a) வாய்மை என்பதன் பொருள்விளக்கம்.

(b) வாய்மையினால் ஏற்படும் நன்மைகள்.

(c) வாய்மையை அறிவுறுத்தும் கதை.

(d) வாய்மையைப்பற்றிய பழமொழிகளும் மேற்கோள்களும்.

4. வேலை தேடும் விண்ணப்பம் :—

எழுதவேண்டிய முறைகளை அறிவுறுத்தி பின் எழுதச் செய்தல்.

1. எழுதப்படும் இடம், தேதி.
2. எழுதுபவரின் விலாசம்.
3. அதிகாரியின் விலாசம்.
4. மரியாதை முறை.
5. எழுதப்படும் பொருள்.
6. முடிவு — வணக்கம், கையெழுத்து.

5. சுருக்கி எழுதுதல் :—

கதையை வாசிக்கச் செய்தல்.

அதன் முக்கிய கருத்தை மனதில் கிரகித்தல்.

முக்கிய தலைப்புகளில் சிறு குறிப்புகள் தயாரித்தல்

பின் எழுதும்படி செய்தல்.

b. மாணவர்களது எழுத்துக் கட்டுரைகளைத் திருத்தும்போது ஆசிரியர் காணும் பொதுவான பிழைகளைப் பொதுப் பிழைகள் பற்றிய குறிப்புப் புத்தகத்தில் பலவித தலைப்புகளில் வகைப்படுத்தி எழுதி வைத்துக்கொள்ள வேண்டும்.

(உம்–) குறில் நெடில் பேதங்கள் ர, ற; ண, ன, ந; ல, ள, ழ பேதங்கள், எழுவாய் பயனிலைப் பொருத்தம், ஒற்றுக்கள் மிகும் இடங்கள்.

(a) இப்பிழைகளை நீக்கும் வழிகளை ஆராய்ந்து கட்டுரையைத் திருத்திய பின்னர் இவற்றை மாணவர்களுக்கு விளக்கிக் கூறி அவற்றை மீண்டும் அவர்கள் செய்யாத வண்ணம் அறிவுறுத்தலாம்.

(b) கட்டுரை எழுதுவதற்கு முன்னரே இப்பொதுப் பிழைகளைச் செய்யாமல் எழுதுவதற்கான உபாயங்களைத் தேடலாம்.

III 1. பாரம் II-ல் விதிவரும் முறையில் (Inductive Method) இலக்கணம் கற்பிப்பதைத் திருஷ்டாந்தங்களுடன் சுருக்கமாய் விளக்குக ?

1. விதி வரும் முறை என்பது உதாரணங்களிலிருந்து இலக்கண விதியை அறிந்து அமைத்துக்கொள்ளும் முறையாகும். பல உதாரணங்களைக் கொடுத்து அவற்றைக் கவனிக்கச் செய்து அவற்றிலிருந்து மாணவர்களே விதிகளை யூகித்து அறிவதாகும்.

(உ-ம்) கந்தன் வந்தான்—எவன் வந்தான்?

தஞ்சாவூரில் இருக்கிறார்—எவ்வூரில் இருக்கிறார்?

அப்பா வந்தார் — யார் வந்தார்?

ஐயர் வந்தார் — ஐயரா வந்தார்?

ஐயரோ வந்தார்?

கிட்டு படிக்க வந்தான்—கிட்டு ஏன் வந்தான்?

கோபாலன் வந்தான்—கோபாலனே வந்தான்?

மாணவர்கள் மேற்கண்ட வாக்கியங்களைக் கவனித்து முன் உள்ள சாதாரண வாக்கியங்களை வினா வாக்கியங்களாக மாற்றிய எழுத்துக்கள் எவை? அவை வார்த்தையில் எங்கெங்கு வந்துள்ளன? அவற்றுள் வார்த்தையின் முதலில் வந்துள்ள எழுத்துக்கள் எவை? வார்த்தையின் கடைசியில் வந்துள்ளவை எவை? வார்த்தையின் முதலிலும் கடைசியிலும் வந்துள்ள எழுத்து எது? எனக் கவனித்து கீழ்க்கண்ட விதியை அமைக்கச் செய்யலாம்.

1. எ, யா, ஆ, ஓ, ஏ இவை ஐந்தும் வினாஎழுத்துக்கள்.
2. அவற்றுள் வார்த்தையின் முதலில் வருவன :—எ, யா.
3. வார்த்தையின் கடைசியில் வருவன :—ஆ, ஓ.
4. வார்த்தையின் முதலிலும் கடைசியிலும் வருவது :—

ஏ.

இதன்பின் இவ்விதியை நன்னூலில் எவ்விதம் சூத்திரமாக செய்யப்பட்டிருக்கிறது எனக் காணச் செய்யலாம்.

எ, யா முதலும் ஆ, ஓ ஈற்றும்
ஏ இருவழியும் வினா ஆகும்மே.

பின்னர் வினா எழுத்துக்களைக் கண்டுபிடிக்கும் பயிற்சிகள் கொடுக்கலாம்.

2. ஐந்தாம் வகுப்பிற்குப் பின்வரும் பாடங்களுக்கேற்ற பயிற்சிப் பட்டியல் தயாரி.

(a.) பெயற்ச்சொற்கள்—எண்; பால்

(b.) வினைச்சொற்கள்—இறந்தகாலம், நிகழ்காலம்.

1. கீழே கொடுக்கப்பெற்ற வார்த்தைகளில் ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும் எழுதுக.

மலைகள், அவன், சிறுமி, அரசர்கள், ஆசிரியர்.

2. கீழ்க்கண்ட வாக்கியங்களில் பெயர்ச்சொற்களின் எண்களை மாற்றித் தகுந்தபடி எழுதுக.

பையன் ஓடுகிறான். பறவைகள் பறக்கின்றன
பெண்கள் ஆடுகிறார்கள். நாய் குரைக்கிறது.

3. கீழ்க்கண்டவற்றில் ஆண்பாலுக்குப் பெண்பாலும், பெண்பாலுக்கு ஆண்பாலும் கூறுக.

அரசன், தங்கை, மாமன், ஒருவன், வேலைக்காரன், வண்ணாத்தி.

4. கீழ்க்கண்ட பெயர்ச்சொற்களை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என வகைப்படுத்தி எழுதுக:

கந்தன், நாய், பையன்கள், கமலா, குதிரைகள், பெட்டிகள், சீதை, பெரியோர்கள், நாற்காலி, கண்ணன்.

(b) 1. கோடிட்ட இடத்தில் சரியான வினைச்சொற்களை அமைக்க :—

நேற்று என் மாமா ஊருக்குப் — .
இப்பொழுது நான் பாடம் — .

2. பின்வரும் வாக்கியங்களில் வினைச்சொற்களின் காலங்களைக் கேட்டபடி மாற்றி எழுதுக :—

என் தங்கை பாடினாள் (நிகழ்காலமாக)

பையன்கள் ஓடுகிறார்கள் (இறந்தகாலமாக)

3. 5-ம் பாடத்திலிருந்து ஆறு வினைச்சொற்களை எடுத்து எழுதி அவை இறந்தகாலமா நிகழ்காலமா எனக் கூறுக.

1951

I. 1. மொழிப் போதனையில் படங்கள் எவ்வகையில் பயன்படுகின்றன ?

2. முதல் வகுப்பில் நீர் உபயோகிக்கும் மூன்றுவிதமான படங்களை விவரித்துக்கூறி ஒவ்வொன்றையும் எவ்விதம் உபயோகிப்பீர் என்றும் சுருக்கமாய் விளக்குக.

1. மொழிப் போதனையில் படங்கள் பயன்படும் வகை :

(a) வாய்மொழிப் பயிற்சியில் படங்களைப்பற்றி சம்பாஷித்தல்.

(b) படங்கள் மூலமாக கதைகளை விளக்குதல்.

(c) வாசிப்புக் கற்பித்தல்—படங்களும் வார்த்தைகளும் வாக்கியங்களும் எழுதப்பட்டவை.

(d) கட்டுரை எழுத உதவுதல்—படங்களைப் பார்த்து வருணித்து எழுதுதல்.

(e) படங்களைக்கொண்டு கடின பதங்களையும் பாடத்தில் உள்ள விஷயங்களையும் விளக்குதல்.

2. முதல் வகுப்பில் உபயோகிக்கும் மூன்றுவிதமான படங்களும் அவற்றை உபயோகிக்கும் விதமும் :

(1) படமும் அதற்கு நேரே சொல்லும் எழுதப்பட்ட படங்கள்—இவற்றை வாசிப்புப் பயிற்சிக்கு உபயோகிக்கலாம். சொல்லை மறைத்து படத்தைமட்டும் காட்டி பிள்ளைகளை அதன் பெயரை எழுதச்சொல்லி, பின் சரிபார்க்கச் செய்யலாம். எனவே எழுத்துப் பயிற்சிக்கும் உபயோகமாகும்.

(2) பட அட்டைகள்—கற்பிக்கவேண்டிய ஒவ்வொரு சொல்லுக்கும் பட அட்டை, சொல் அட்டை எனத் தனித்தனி வேண்டும். ஆசிரியரே இப்படத்தை வரைதல் நலம். ஒட்டுப்படமோ வெட்டுப்படமோ உபயோகிக்கலாம். பலவித வர்ணமிட்டு கண்ணைக் கவரும் வண்ணம் இருந்தால் பிள்ளைகளுக்கு இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். படங்களையும் சொல்லையும் இணைக்கும் விளையாட்டாகவும், மௌன வாசிப்புக்கும், சோதனைப் பயிற்சிக்கும் உபயோகிக்கலாம்.

(3) கதைப் படங்கள்—இவற்றைக்காட்டி கதைகளை விளக்கிச் சொல்லுவதற்கும் பின்னர் மாணவர்களைக் கதை சொல்லச் செய்வதற்கும் உபயோகிக்கலாம்.

II. (1) **மௌனப் படிப்பின் அநுகூலங்களை விளக்குக.**

(2) **மௌனப் படிப்புப் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள உமது மாணவர்க்கு எவ்வாறு உதவுவீர் ?**

மௌன வாசிப்பு முக்கியமானது என்பதற்குரிய காரணங்கள்:

1. வாழ்க்கையில் மௌன வாசிப்பே மிகுதியும் பயன்படுவது.
2. மௌன வாசிப்பின் மூலம்தான் விரைவாக வாசிக்க முடியும்.
3. மௌன வாசிப்பினால்தான் எளிதில் பொருளைக் கிரகிக்க முடியும்.
4. மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் வாசிக்க முடியும்.
5. களைப்பு ஏற்படாது.

6. வாசிப்பின் முக்கிய நோக்கமாகிய படிக்கும் பழக்கம் ஏற்படும்.
7. வாசிக்கும் நூலைச் சுவைத்து இன்பமடைய முடியும்.

மௌன வாசிப்பை விருத்தி செய்ய ஏற்படுத்த வேண்டிய வசதிகள் :—

கீழ் வகுப்புகளில்

1. படங்களையும் வார்த்தைகளையும் இணைக்கும் பயிற்சி.
2. கட்டளை அட்டைகளை வாசித்து அதன்படி செய்யச் சொல்லுதல்.
3. தபால்காரன் விளையாட்டு. பிள்ளைகளின் விலாசம் எழுதிய அட்டைகளைக் கொடுத்து அந்தந்த விலாசம் உள்ளவரிடம் கொடுக்கும் பயிற்சி.
4. பிள்ளைகள் தாமாகப் பதில் கண்டுபிடிக்கக்கூடிய கேள்விகளை வாசித்து விடை அளிக்கும் பயிற்சி.
5. வார்த்தைகள் எழுதப்பட்ட அட்டைகளை வாக்கியங்களாக அமைக்கச் செய்தல்.
6. படங்கள் சேகரித்து ஒட்டப்பட்ட புத்தகத்தில் படத்தின் அடியில் சிறு வாக்கியங்கள் எழுதிவைத்து அவற்றைப் படித்து அறியச் செய்தல்.
7. சுலபமாக வாசிக்கக்கூடிய வாக்கியங்களை எழுதித் தொங்கவிடுதல்.
8. படங்களோடு கூடிய வாக்கிய அட்டைகள், படங்கள் இடையிட்ட கதைகள்.
9. பலவித வியாபார விளம்பரங்கள் முதலியவற்றை வாசித்தறியும் பயிற்சி.

மேல் வகுப்புகளில்

10. ஒவ்வொரு வாசக பாட ஆரம்பத்திலும் சிறிது நேரம் மௌனமாக வாசிக்கும் பயிற்சி கொடுத்தல்.

கேள்விகளை முன்னதாகக் கொடுத்து மௌனமாக வாசித்து விடை கண்டறியச் செய்தல்.

11. படங்களால் விளக்கப்பட்ட கதைகளைக் கொடுத்து வாசிக்கப் பிரியம் உண்டாக்குதல்.

12. வாசகசாலையில் கதைப் புத்தகங்கள் எடுத்துப் படிக்கும் விருப்பத்தைத் தூண்டுதல்.

13. வாசித்த புத்தகத்தில் சிறு கேள்விகளுக்கு விடை எழுதப் பயிற்சி.

III. செய்யுள் போதிப்பதன் வெவ்வேறு நிலைகளைச் சுருக்கமாய் வருணிக்க.

1. முன்னுரை—செய்யுள் சம்பந்தமான கதை, படம், சம்பாஷணை, இயற்றியவர் வரலாற்றுக் குறிப்புகள், முன்பாட சம்பந்தம் முதலியவற்றுள் ஒன்றைப் பீடிகையாக எடுத்துக்கொள்ளலாம். ஐந்து நிமிஷங்களுக்கு மேற்படாமலிருக்க வேண்டும்.

(உ-ம்) 'ஆற்றுப் பெருக்கற்று...' என்ற செய்யுளுக்குப் பீடிகையாகக் குமணன் கதையைக் குறிப்பிடலாம். 'காகமும் பாம்பும்' என்ற செய்யுளை நடத்த அக்கதையை விளக்கும் படத்தைக் கவனிக்கச் செய்து படத்தில் காண்பவற்றைப்பற்றிக் கேள்விகள் கேட்பதையே முன்னுரையாகக் கொள்ளலாம்.

2. புதிய பாடம்:—

(a) வாசித்தல் — செய்யுளில் உள்ள பதங்களை அறிந்து திருத்தமாக வாசிக்கவும் பாடவும் பயிற்சி. ஆசிரியர் வாசித்துப் பாடிக்காட்டிப் பிள்ளைகளைப் பாடச் செய்தல்.

(b) செய்யுளில் கூறப்பட்டுள்ள விஷயங்களை யார், எது, யாரால், எப்படி, யாரை, எதை, என் என்பன போன்ற கேள்விகள் மூலம் உணரச் செய்து பொருள் கண்டுபிடிக்க உதவுதல்.

(உ–ம்.) ஆற்றுப் பெருக்கற்று.
எது ஊட்டும்? யாருக்கு ஊட்டும்?
எப்போது ஊட்டும்? என்ன ஊட்டும்?

(c) கடின பதங்களுக்குப் பொருள் கூறல்.
ஒற்றுமை வேற்றுமை, உவமை முதலியவற்றால் கருத்தை விளக்குதல்.
ஆறு வரண்டுபோன காலத்தும் தன் ஊற்று நீரினால் உலகத்தவரை உண்பிக்கச் செய்யும் என்ற உவமையினால் அதன் கருத்தை விளக்குதல்.

(d) இலக்கணக் குறிப்புகள்.
செய்யுளில் காணப்படும் எதுகை, மோனை முதலியவற்றில் தேவையானவற்றைக் கண்டறியச் செய்தல்.

(உ–ம்.) மோனை : ஆற்றுப் பெருக்கற் றடிசுடும் அந்நாளும்
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்

எதுகை : ஆற்றுப்.......அந்நாளும்
ஊற்றுப்......உலகூட்டும் – ஏற்றவர்க்கு

3. **திருப்பிப் பார்த்தலும் கரும்பலகைச் சுருக்கமும் :—**

கேள்விகள் மூலம் போதிக்கப்பட்ட விஷயங்களைப் பொழிப்புரை, கருத்துரை முதலியவற்றை வருவித்துக் கரும்பலகையில் எழுதுதல்.

(உ–ம்.) ஆறு வறண்டுபோன காலத்தும் தனது ஊற்று நீரினால் மக்களை உண்பிக்கச் செய்யும். அதுபோல நல்ல குடும்பத்தில் பிறந்தவர்கள் ஏழைகளானாலும்

தம்மிடம் வந்து பிச்சை கேட்பவர்களுக்கு மனம் ஒப்பி இல்லை என்று சொல்லமாட்டார்கள்.

4. அப்பியாசங்கள் :—

செய்யுளின் கருத்துக்களை வசன நடையில் எழுதுதல், இராகத்துடன் பாடுதல், மனப்பாடம் செய்தல் முதலிய அப்பியாசங்கள் வகுப்பிலும் வீட்டிலும் செய்யுமாறு கொடுக்கலாம்.

1952

I. (1) மேல் வகுப்புகளில் பரந்த படிப்பினுல் விளையும் பயன்களை விளக்குக.

(2) எட்டாம் வகுப்புப் பிள்ளைகள் பரந்த படிப்பைப் பயிற்சிக்க எவ்வாறு உதவுவீர் ?

1. *மேல் வகுப்புகளில் பரந்த படிப்பினுல் விளையும் பயன்கள் :—*

(1) *மொழி அறிவு வளர்தல்.*

(2) *சொற்களஞ்சியம் பெருகுதல்.*

(3) *பொது அறிவும் உலக அறிவும் விருத்தியாதல்.*

(4) *படிப்பில் பற்று உண்டாதல் – தாமாகவே படிக்க வேண்டும் என்ற ஆர்வமும் படிக்கும் பழக்கமும் ஏற்படுதல்.*

(5) *விரைவாகப் படிக்கும் திறமை உண்டாதல்.*

(6) *தன்னம்பிக்கையும் தன் முயற்சியும் வளர்தல்.*

(7) *காலத்தை வீணாக்காமல் ஓய்வு நேரத்தை நல்ல வழியில் செலவழித்தல்.*

(8) *பிற்கால வாழ்க்கையில் தாமாகவே வேண்டியவற்றைப் படித்துப் பயன்பெற பழக்கம் ஏற்படுதல்.*

II. எட்டாம் வகுப்புப் பிள்ளைகள் பரந்த படிப்பைப் பயிற்சிக்க அளிக்கும் உதவி :—

1. அவ்வப்போது துணைப்பாட நூற்படிப்புக்கு உதவி செய்தல்.

(a) அவற்றின் பொதுப்போக்கைக் கற்பித்து மாணவரையே படிக்கச் செய்தல்.

(b) முன்னுரையாக அவற்றில் கூறப்பட்டுள்ள கதை முதலியவை நடக்கும் காலம், இடம், சூழ்நிலை முதலியவற்றைப்பற்றிய துணைக் குறிப்புகள் கொடுத்தல்.

2. நூல் நிலையப் படிப்பு :—

நூல் நிலைய வகுப்பில் சில நூல்களைப் பொறுக்கி எடுத்துக் கொடுத்து மௌனமாக வாசிக்கச் செய்தல். அந்தந்த நூலின் உள்ளடக்கத்தைச் சுருக்கமாகக் கூறல், அருஞ் சொற்களை விளக்குதல் முதலிய சிற்சில உதவிகள் செய்தல்.

3. செய்தித் தாள்கள், வார, மாத இதழ்களைப் படித்து வரச் செய்தல் :—

வகுப்பில் தினசரி செய்திகள் எழுதி வந்து வாசிக்கும்படி சந்தர்ப்பம் அளித்தல்.

II. கட்டுரை எழுதும் பயிற்சியின் வெவ்வேறு நிலைகள் யாவை? உமது விடையை முதல் பாரத்திற்குக் கொடுக்கப்படும் ஒரு பயிற்சி சார்ந்த உதாரணங் காட்டி விளக்குக.

கட்டுரை எழுதும் பயிற்சியின் வெவ்வேறு நிலைகள் :—

(பயிற்சி முதல் பாரத்திற்கு – பொங்கல் பண்டிகை)

1. விஷயச் சேகரிப்பு.

பொங்கல் பண்டிகையைப்பற்றி முதலில் வாய்மொழிப் பயிற்சியாக மாணவர்களுக்குத் தெரிந்த விஷயங்களைக் கேட்டுச் சம்பாஷித்தல். சமூக நூல், அறிவு நூல், இதர பாடங்களில் உள்ள விஷயங்களையும் படிக்கச் செய்யலாம்.

2. விஷயங்களைப் பல தலைப்புகளின்கீழ்க் கோவைப்படுத்தலும் விஷயக் குறிப்பு தயாரித்தலும்.

1. பொங்கல் பண்டிகையின் நோக்கம். கொண்டாடும் மாதம், நாள்.
2. அதற்கெனத் தயாரிக்கப்படும் பொருள்கள் — செய்யப்படும் அலங்காரம்.
3. நடைபெறும் நிகழ்ச்சிகள்.
4. அதனால் ஏற்படும் பயன்.

3. பிற வகைக் குறிப்பு வைத்தலும், பிழை நீக்க உதவுதலும்.

எழுதும்போது அது சம்பந்தமான கடின பதங்களில் ஏற்படக்கூடிய பிழைகளை நீக்க உதவி செய்தல்.

4. மாணவர்கள் எழுதுதல்.

பயிற்சி எண், தேதி, ஓரக்கோடு, தலைப்பு, பத்தி ஆகியவற்றைக் கவனித்து எழுதச் செய்தல்.

5. திருத்துதல்.

(a) மாணவரை அருகில் வைத்துக்கொண்டு அன்பாய்த் திருத்துதல்.
(b) பிழைகளைச் சில குறிகளால் எடுத்துக் காட்டுதல்.
(c) எதிர்ப் பக்கத்தில் பிழைகளைத் திருத்தச் செய்தல்.
(d) பொதுப் பிழைகளை வகுப்பில் விளக்கிக் காட்டித் திருத்துதல்.

III. (1) பேச்சுப் பழக்கங்களை வளர்த்துக்கொள்ள மாணவர்களுக்குப் பாடசாலையில் கிடைக்கக் கூடிய வசதிகளை விவரிக்க.

(2) முதல் வகுப்பில் பிழைபட்ட பேச்சைத் திருத்த எவ் வழிகளை மேற்கொள்வீர்கள் ?

1. *பேச்சுப் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள மாணவர்களுக்குப் பாடசாலையில் கிடைக்கக்கூடிய வசதிகள்.*

1. *பிள்ளைகள் ஒருவரோடொருவர் பேசிப் பழகுதல்.*
2. *மாணவர்கள் ஆசிரியர்களோடு பேசிப் பழகுதல்.*
3. *கதை சொல்லுதல்.*
4. *கதை நடித்தல்.*
5. *அபிநயப் பாட்டுகள் பாடுதல்.*
6. *பாட்டுகள் பாடுதல்.*
7. *ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லுதல்.*
8. *சொற்பொழிவு, விவாதங்கள், செய்திகள் வாசித்தல் முதலியன.*
9. *ஆசிரியரின் பேச்சை முன்மாதிரியாகக் கொள்ளுதல்.*
10. *உரக்க வாசித்தல்.*

திருத்த வழிகள் :

இப் பிழைகளைத் திருத்த •

(a) *ஏளனம் செய்யக் கூடாது.*
(b) *அன்பும் ஆதரவும் காட்ட வேண்டும்.*
(c) *இவற்றின் காரணத்தைக் கண்டுபிடித்துப் பொறுமையோடு திருத்த முயற்சிக்க வேண்டும்.*

1. கொச்சை மொழிகள் :—

இவற்றிற்குக் காரணம் பிள்ளைகள் வீட்டிலும், சுற்றுப் புறத்திலும் அடைந்த அநுபவத்தால் ஏற்பட்டதாகும்.

3. முதல் வகுப்பு மாணவர்களின் பேச்சில் காணப்படும் குறைகள் :—

1. கொச்சை மொழிகள்.
2. திக்கித் திணறிப் பேசுதல்.
3. துண்டுபட்ட சொற்களும் சொற்றொடர்களுமாகப் பேசுதல்.
4. கை கால் நடுக்கத்தோடு பேசுதல்.
5. தெளிவின்றிப் பேசுதல்.

திருத்த வழிகள் :

இப்பிழைகளைத் திருத்த

(a) ஏளனம் செய்யக்கூடாது.
(b) அன்பும் ஆதரவும் காட்டவேண்டும்.
(c) இவற்றின் காரணத்தைக் கண்டுபிடித்துப் பொறுமையோடு திருத்த முயற்சிக்க வேண்டும்.

1. கொச்சை மொழிகள் :

இவற்றிற்குக் காரணம் பிள்ளைகள் வீட்டிலும், சுற்றுப் புறத்திலும் அடைந்த அநுபவத்தால் ஏற்பட்டதாகும்.

நீக்க வழி :

ஆசிரியர் திருத்தமாகப் பேச வேண்டும். அதுவே பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக அமைந்து கொச்சை மொழிகளை நீக்கும். பிள்ளைகளையும் திருத்தமாகப் பேசப் பயிற்சி அளிக்க வேண்டும்.

2. திக்கித் திணறிப் பேசுதல்

காரணம் :		நீக்க வழி :
பயம்	—	ஆசிரியர் பிள்ளைகளுடன் அன்பாகப் பழகுதல்.

கூச்சம்	—	அன்போடு மாணவர் பலரும் சேர்ந்துபேசச் சந்தர்ப்பம் அளித்தல்.
போதிய விஷய அறிவு இன்மை.	—	பொருள்களை நேராகக் காட்டி அவற்றைப் பற்றிய கருத்துக்கள் ஏற்பட்டபின் பேசச்செய்தல்.
அடி நாக்கின் ஓரத்தில் தசை வளர்ச்சி, தசைகள் சரிவர வேலை செய்யாமை, நரம்புப் பிடிப்பு.	—	பெற்றோர்களிடம் அறிவித்து வைத்திய சிகிச்சை செய்யச் சொல்லுதல்.

3. **துண்டுபட்ட சொற்களும் சொற்றொடர்களும்.**

காரணம் :—வீடு, சுற்றுப்புறம் முதலியவற்றில் கொண்ட அநுபவத்தால் ஏற்பட்டவை.

நீக்க வழி :—ஆசிரியர் ஆரம்ப முதல் சிறு சிறு வாக்கியங்களாகவே பேசுதல் முன் மாதிரியாக அமைய வேண்டும்.

4. **கைகால் நடுக்கத்தோடு பேசுதல்**

காரணம் :—அச்சத்தினாலும், போதிய விஷய அறிவு இன்மையாலும் ஏற்படலாம்.

நீக்க வழி :–ஆசிரியர் அன்பாகப் பழகுவது, பிள்ளைகள் சுயேச்சையாகப் பழகிப் பேசச் சந்தர்ப்பம் அளித்தல், தெளிவான கருத்துக்கள் மனதில் ஏற்படும்படி செய்தல்.

5. **தெளிவின்றிப் பேசுதல்.**

காரணம் :– விஷய அறிவு இன்மை, சந்தேகம், தைரியக் குறைவு.

நீக்க வழி :—தெளிவான கருத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களை உண்டாக்குதல். ஆசிரியர் அன்பாகப்பேசித் தைரிய மூட்டுதல்.

1953

I. செய்யுள் கற்பித்தல் உரைநடை கற்பிப்பதிலிருந்து எவ்விதம் வேறுபட வேண்டுமென்பதை விளக்குக.

1. வசன பாடம் கற்பிப்பதில் மாணவர்கள் புதிய சொற்களையும், பொருளையும் உணருமாறு செய்தால் போதும். ஆனால் அதே விஷயத்தைக் கூறும் ஒரு செய்யுளைக் கற்பிக்கும்போது அதன் பொருள் உணர்தலோடு கவியினுடைய உணர்ச்சியையும் கருத்துக்களையும் அறியும்படி செய்தால்தான் அவர்கள் அதை அநுபவிக்க முடியும். கவிஞன் உவமை, சொல் நயம் முதலியவற்றின் வாயிலாகக் கருத்துக்களை உணர்ச்சி ததும்ப வெளிப்படுத்தும் திறமையைக் கண்டு களிக்கவும், சொல் நயம், பொருள் நயம் முதலியவற்றின் இன்பத்தை அநுபவிக்கவும் செய்யவேண்டும்.

2. வசன பாடத்தை உணர்ந்து அநுபவிக்க மௌனமாகப் படிப்பது ஏற்றதாகும். ஆனால் செய்யுளை உரக்கப் பாடுவதே ஓசை நயத்தையும் கவியினது உணர்ச்சியையும் உணர்ந்து அநுபவிக்க உகந்ததாகும்.

3. வசன பாடத்தைப் பல பகுதிகளாகப் பிரித்துப் பொருள் கூறி விளக்கலாம். ஆனால், செய்யுள் பாகத்தை முழுமையும் எடுத்துக்கொண்டு கருத்து உணருமாறு செய்தல் வேண்டும். பல பகுதிகளாகப் பிரித்துப் பொருள் கூறக்கூடாது. கதை, உதாரணம், படம் மூலமாக விளக்கிக் காட்டுதல் இக்கருத்தை எளிதில் அறிய ஏதுவாகும். வசன பாடத்தில் இவ்விதம் செய்யவேண்டிய அவசியமில்லை.

4. வசன பாடத்தை மனப்பாடம் செய்யச் சொல்லவேண்டியதில்லை. அது மனப்பாடம் ஆவதும் கடினம். ஆனால், செய்யுளின் சொல்லழகு, கருத்தழகு ஆகியவற்றில் மாணவர்களின் மனம் ஈடுபடும்படி செய்தால் எளிதாக மனப்பாடம் செய்ய உதவியாகும்.

5. சுருங்கக் கூறின் மாணவர் உள்ளத்தில் உணர்ச்சியை எழுப்புவதும் கவியின் கற்பனை, கருத்தழகு, அதனை வெளிப்படுத்தும் முறை, அதிலுள்ள நயங்கள் முதலியவற்றில் மாணவர்கள் இன்பம் காணச் செய்வதும் செய்யுள் கற்பிக்கும்போது கவனிக்க வேண்டுவனவாகும்.

II. இலக்கணத்தை விதிவருமுறையில் கற்பிப்பதை விளக்குக. அம்முறையை முதல் படிவத்தில் எப்படி மேற்கொள்வாயென்று எடுத்துக்காட்டுடன் விளக்குக.

1. விதி வரும் முறை என்பது உதாரணங்களிலிருந்து இலக்கண விதியை அறிந்து அமைத்துக்கொள்ளும் முறையாகும். பல உதாரணங்களைக் கொடுத்து அவற்றைக் கவனிக்கச் செய்து அவற்றிலிருந்து மாணவர்களே விதிகளை யூகித்து அறிவதாகும்.

(உ–ம்) கந்தன் வந்தான்—எவன் வந்தான்?
தஞ்சாவூரில் இருக்கிறார்—எவ்வூரில் இருக்கிறார்?
அப்பா வந்தார் — யார் வந்தார்?
ஐயர் வந்தார் — ஐயரா வந்தார்?
ஐயரோ வந்தார்?

கிட்டு படிக்க வந்தான்—கிட்டு ஏன் வந்தான்?
கோபாலன் வந்தான்—கோபாலனே வந்தான்?

மாணவர்கள் மேற்கண்ட வாக்கியங்களைக் கவனித்து முன் உள்ள சாதாரண வாக்கியங்களை வினு வாக்கியங்களாக மாற்றிய எழுத்துக்கள் எவை? அவை வார்த்தையில் எங்கெங்கு வந்துள்ளன? அவற்றுள் வார்த்தையின் முதலில் வந்துள்ள எழுத்துக்கள் எவை? வார்த்தையின் கடைசியில் வந்துள்ளவை எவை? வார்த்தையின் முதலிலும் கடைசியிலும் வந்துள்ள எழுத்து எது? எனக் கவனித்துக் கீழ்க்கண்ட விதியை அமைக்கச் செய்யலாம்.

1. எ, யா, ஆ, ஓ, ஏ இவை ஐந்தும் வினுஎழுத்துக்கள்.
2. அவற்றுள் வார்த்தையின் முதலில் வருவன :—எ, யா.
3. வார்த்தையின் கடைசியில் வருவன :—ஆ, ஓ.
4. வார்த்தையின் முதலிலும் கடைசியிலும் வருவது :— ஏ.

இதன்பின் இவ்விதியை நன்னூலில் எவ்விதம் சூத்திரமாகச் செய்யப்பட்டிருக்கிறது எனக் காணச் செய்யலாம்,

'எ, யா முதலும் ஆ, ஓ ஈற்றும்
ஏ இருவழியும் வினு ஆகும்மே'.

பின்னர் வினு எழுத்துக்களைக் கண்டுபிடிக்கும் பயிற்சிகள் கொடுக்கலாம்.

III. பாடப் படிப்பிற்கும் (Detailed Study) துணைப் பாடப் படிப்பிற்கும் வேண்டியவற்றைத் தேர்ந்தெடுக்கையில் எவற்றையெல்லாம் கவனிப்பாய்?

1. பாடப் படிப்பிற்கு வேண்டியவற்றைத் தேர்ந்தெடுக்கையில் கவனிக்க வேண்டுவன :

(i) பாட நூல்கள் அந்தந்த நிலை வகுப்புகளுக்குத் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டிருப்பது நல்லது.

அப்போதுதான் தேவையான விஷய அறிவு, சொற்களஞ்சியம் முதலியவை தொடர்ச்சியாகவும் படிப்படியாகவும் அமைந்திருக்கும்.

(ii) பிள்ளைகளின் அறிவு மனவளர்ச்சிக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். படிப்பில் பற்று உண்டாக்கும் பொருள்களும், வாழ்க்கையில் உபயோகப்படும் பொருள்களும் அடங்கி இருக்க வேண்டும்.

(iii) படிப்படியாகக் கடினமான பாடங்கள் இருக்கவேண்டும்.

(iv) மொழிப்பயிற்சி கட்டுரைப் பயிற்சிகளுக்கு ஏற்ற பாடங்கள் இருக்கவேண்டும்.

(v) நடை இனிமை, எளிமை பொருந்தியதாயும், வகுப்புக்குத் தக்கபடி உயரக்கூடியதாயும், பயிற்சிகள் அருஞ்சொல் விளக்கம், வினாக்கள் இலக்கணக் குறிப்புகள் கொண்டதாயும் இருக்க வேண்டும்.

(vi) ஒவ்வொரு பாடமும் தனித்தனியாக முடிதல் நலம். அதிலுள்ள பாடல்கள் பல சமயத்தினருக்கும் ஒத்தவையாக இருக்கவேண்டும்.

(vii) அவற்றில் இருக்க வேண்டிய பாடப் பகுதிகள்.

(a) நூலின் பெருமையை ஓரளவு படிப்போர் உள்ளத்தில் உயர்ந்த உணர்ச்சிகளை எழுப்பும் வன்மையை முக்கியமாகக் கவனித்துத் தேர்ந்து எடுக்கப்பட்ட கற்பனைமலிந்த இலக்கியங்கள்.

(b) வாழ்க்கை முறை, வரலாறு, யாத்திரை முதலியவற்றை எடுத்துரைக்கும் பாடங்கள்.

(c) கதைப் பாடல்கள், இயற்கை வர்ணனைப் பாடல்கள், அறவுரைப் பாடல்கள், இசைப் பாடல்கள்.

(d) சிறு நாடகங்கள்.

IV. துணைப்பாடப் படிப்பிற்கு வேண்டியவற்றைத் தேர்ந்தெடுக்கையில் கவனிக்க வேண்டியவை எவை?

1. ஆழ்ந்த படிப்பிற்கு உரியவைகளைப்போலத் தனி தனிப் பாடமாய் முடியாமல் தொடர்ந்து செல்லும் கதைகளைக் கொண்டவையாக இருக்கவேண்டும்.
2. மன ஆற்றல், பொருள் அறிவிற்கு ஏற்றவையாய் இருக்கவேண்டும்.
3. மாணவர் இனிது விரும்பிக் கற்பவையாய் இருக்க வேண்டும்.
4. இவை பெரும்பாலும் ஆசிரியர் உதவியின்றிப் படிக்க வேண்டியவையாதலின் எளிய இனிய நடையில் அமையப்பெற்றிருக்க வேண்டும்.
5. சிறு கதைகளாகவோ அல்லது கதை நூல்களாகவோ இருப்பது நலம்.

IV. பொதுப் பிழைகளைக் குறிக்கும் குறிப்பேட்டின் தேவையை விவரிக்க அத்தகைய ஏட்டை நீர் எப்படி வைத்திருப்பீரென்பதையும் எவ்விதம் பயன்படுத்துவீரென்பதையும் குறிக்கவும்.

மாணவர்களால் செய்யப்படும் பொதுப் பிழைகள் பெரிதும் திட்டமான அறிவு இன்மையால் ஏற்படுவன. ஆசிரியரது

போதனைக் குறைபாட்டாலும் ஏற்படலாம். எனவே அவற்றை ஒரு குறிப்பேட்டில் குறித்து வைத்து மாணவர் அவற்றைத் திருத்திக்கொள்ளும்படி செய்வதும், அப்பிழைகள் மாணவர்க்கு மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கான உபாயங்களைத் தேடவேண்டுவதும் அவற்றைத் தவிர்க்கத் தகுந்த போதனுமுறையைக் கையாளுவதும் ஆசிரியரது கடமையாகும்.

மாணவர்களது எழுத்து, கட்டுரைப் பயிற்சிகளைத் திருத்தும்போது மாணவர்களால் செய்யப்பட்டுள்ள பொதுப் பிழைகளை வகைப்படுத்தி இக்குறிப்பேட்டில் எழுதி வைத்துக் கொள்ளவேண்டும்.

(உ – ம்.) (a) எழுத்துப் பிழைகள்.

குறில் நெடில், ர, ற ; ல, ள, ழ ; ன, ண, ந ஆகியவற்றின் பேதங்களில் நேர்வன.

(b) இலக்கண அமைதிகளில் ஏற்படுவன. எழுவாய் பயனிலை பொருத்தமின்மை, தகுந்த வேற்றுமை உருபு உபயோகியாமை, ஒற்றுமிகும் இடங்களில் அவற்றைக் கவனித்து இடாமை.

இப்பிழைகள் ஏற்பட்டதன் காரணங்களை ஆராய்ந்து, பொதுவாக வகுப்பில் விளக்கிக் காட்டித் திருத்தவேண்டும். பிள்ளைகளை அவற்றைத் திருத்தி எழுதும்படி செய்யவேண்டும். மறுதடவை எழுத்துப் பயிற்சி கொடுப்பதற்கு முன்னதாக இப் பிழைகளை நீக்குவதற்கான உதவி செய்யவேண்டும். பிழைபடாத எழுதுவதற்கு உதவியான இலக்கண விதிகளைக் கற்பிக்க வேண்டும்.

V. மூன்றும் படிவத்திற்குக் "கடிதம் எழுதுதல்" கற்பிக்கப் பாடக் குறிப்பு எழுதவும்.

வகுப்பு: மூன்றும் படிவம்.

நேரம்: 40 நிமிஷம்.

பாடம்: கட்டுரைப் பயிற்சி.

பாகம்: "கடிதம் எழுதுதல்"

நோக்கம்: வாணிபச் சார்பான கடிதம் எழுதும் முறையைக் கற்பித்தல்.

உபகரணம்: மாதிரி வியாபாரக் கடிதம்.

I. முன்னுரை.

நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் சொந்தக் கடிதம் எழுதும் முறையைப்பற்றி வினவுதல்.

II. புதிய பாடம்.

மாதிரிக் கடிதத்தை வாசித்துக் காட்டுதல்.

III. மேற்கண்ட மாதிரிக் கடிதத்தைக் கவனித்த பின் சொந்தக் கடிதம் எழுதுவதற்கும், வியாபார சம்பந்தமான கடிதம் எழுதுவதற்கும் உள்ள வேற்றுமைகளைக் குறிப்பிடுதல்.

IV. குறிப்புகள் தயாரித்தல்:

பள்ளிக் கூட்டுறவு புத்தகசாலைக்குத் தேவையான புத்தகங்கள் தருவிக்கத் திருச்சிராப்பள்ளி, மைலஞ் சந்தை, முத்து புக் டிபோவிற்கு ஒரு கடிதம் எழுதக் கீழ்க்கண்ட தலைப்புகளில் விஷயங்களை ஒழுங்குபடுத்துதல்.

1. இருப்பிடமும் எழுதும் நாளும்.

(உ - ம்.) திருச்சிராப்பள்ளி, 19-10-53

2. முகவுரை இன்னாரிடமிருந்து இன்னாருக்கு எழுதப் பட்டது.

(உ - ம்.) திருச்சிராப்பள்ளி, மைலஞ்சந்தை,
முத்து புக் டிபோவின்
மானேஜர் அவர்களுக்கு,
மதுரை மீனாட்சி உயர்நிலைப் பள்ளி
மாணவர் கூட்டுறவு புத்தக
நிலையக் காரியதரிசி
A. T. பழனிவேல் எழுதியது.

3. மரியாதை முறை: (உ-ம்.) ஐயன்மீர்,

4. விஷயம்: புத்தகங்களின் விவரம், அனுப்ப வேண்டிய விதம், பணம் செலுத்தும் முறை, தள்ளுபடி அநுமதி அளிக்க வேண்டியதன் அவசியம் முதலியன.

5. முடிப்பும் கையெழுத்தும்:
(உ-ம்.) உண்மையுள்ள A. T. பழனிவேல்.

6. விலாசம்: கடிதத்தின் உறையின்மேல் எழுத வேண்டியது.

V. பயிற்சி: மேலே குறிப்பிட்ட கடிதத்தை விரிவாக எழுதச் செய்தல்.

பரிசு ரூ. 140 பரிசு ரூ. 140

முத்து || ....

அதிட்ட பரிசுகள்.

பின்பக்கமுள்ள காலி இடத்தை பூர்த்தி செய்து பிரதி வருஷம் பிப்ரவரி மாதம் 15ந் தேதிக்குள் எமது புக் டிபோவிற்கு அனுப்ப வேண்டும். குலுக்கு முறையில் யாருக்கு அதிர்ஷ்ட பிரைஸ் விழுகிறதோ அவர்கள் பெயரை பிரதி வருஷமும் 'சுதேசமித்திரன்' 'தினமணி' பேப்பர்களில் மார்ச்சு மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும்.

பிரைஸ் விழுந்தவர்களுக்கு

ரொக்கப் பணமாக தபால்மூலம்

உடனே அனுப்பி வைக்கப்படும்.

பிரைஸ் விபரம்

I	பிரைஸ்	...	ரூ. 50—0—0
II	,,	....	ரூ. 35—0—0
III	,,	...	ரூ. 25—0—0
IV	,,	...	ரூ. 15—0—0
V	,,	...	ரூ. 10—0—0
VI	,,	...	ரூ. 5—0—0

முத்து புக் டிபோ,

மைலஞ்சந்தை, திருச்சிராப்பள்ளி.

பாரதி அச்சகம், திருச்சி.

முத்து அதிர்ஷ்ட பிரைஸ் கூப்பன். (பூர்த்தி செய்க)

1. புத்தகத்தின் பெயர் ....

2. வாங்கின இடத்தின் விலாசம் ....

....

3. வாங்கின தேதி ....

4. கூப்பன் அனுப்புவோரின் விலாசம் ....

....

5. கூப்பன் அனுப்பும் தேதி ....

கையெழுத்து.

N, B:—இக்கூப்பனை பூர்த்தி செய்து பிரதி வருஷம் பிப்ரவரி-மீ 15உக்குள் எமது புக்டிபோவுக்கு அனுப்பி வைக்கவேண்டும்.